


# ஞானச்சுடர்

ஆடி

2010




ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள்வழி

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

**பொருள் :** ஒருவன் அடையக்கூடிய ஊதியங்களுள் அறிய வேண்டிய வற்றை அறியவல்ல மக்களைப் பெறுவதிலும் பார்க்கச் சிறந்த தொன்று இருப்பதாக நமக்குப் புலப்படவில்லை. (61)

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

**பொருள் :** பிறர் பழித்தற்கு இடமில்லாத நற்குணங்களுடைய மக்களை ஒருவன் பெறுவானானால் அவனை ஏழுவகைப் பிறப்புக்களி லும் துன்பங்கள் சென்றடையாவாம் (62)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### திருத்தாண்டகம் - 6

ஐயங் கொடுப்பதும் நீயே ஐயம் ஏற்பதும் நீயே
வையக மெல்லாம் நீயே வானுதல் கணவனும் நீயே
பையர வணிவதும் நீயே பரவ வினியதும் நீயே
செய்ய மேனியன் நீயே சித்தத்தி னுள்ளதும் நீயே 9

ஒன்றா யிருப்பதும் நீயே ஊர் பேரில் லாததும் நீயே
நன்றா யிருப்பதும் நீயே நாளை யாவதும் நீயே
குன்றுங்கடலும் நீயே குவலய மெல்லாம் நீயே
மன்றுள் நிற்பதும் நீயே மாசில் லாததும் நீயே 10

ஓமெனும் ஒண்பொருள் நீயே உருவ மற்றதும் நீயே
ஆமென நிற்பதும் நீயே அல்ல வென்பதும் நீயே
தாமத மற்றதும் நீயே சத்திய முள்ளதும் நீயே
சேம முள்ளதும் நீயே சீவர்க ளெல்லாம் நீயே 11

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

## வெளியீடு - 2 சுடர் - 151

## 2010 ஆடி பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நீடிய வாழ்வுக்கு... | கே.எஸ். சிவஞானராஜா | 1 - 3 |
| கர்மமும் மறுபிறவியும்.. | கு. கோபிராஜ் | 4 - 6 |
| மருதுகீறி ஊடுபோன மால் | சிவ. சண்முகவடிவேல் | 7 - 8 |
| வள்ளுவர் கூறும் மனை... | ஆ. மகேசு | 9 - 11 |
| ஆறும் முருகனும் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 12 - 13 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 14 - 15 |
| நித்திய அன்னப்பணி | - | 16 - 17 |
| "மையல்" | வாரியார் சுவாமிகள் | 18 - 19 |
| ஆலயம் - வழிபாடு... | வேல். நந்தகுமார் | 20 - 25 |
| சிறுவர்கதைகள் | - | 26 - 28 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 29 - 32 |
| தினம் தினம்.... | ஜக்கி வாசுதேவ் | 33 - 35 |
| கஜேந்திர மோட்சம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 36 - 38 |
| தவமுனிவனின்... | சிவ. மகாலிங்கம் | 39 - 43 |
| மடம் சூழ் இலங்கைச்... | கு.சிவபாலராஜா | 44 - 46 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 47 - 49 |
| ஸ்ரீ சபாரத்தினம்... | - | 50 - 52 |
| சிவபுராணம் | சு. அருளம்பலவனார் | 53 - 56 |
| சிவனும் ஐந்தும் | சக்தி விகடன் | 57 - 60 |
| ஆதீனங்களின்.... | ச. லலீசன் | 61 - 63 |
| மயில் வாகனம் சுவாமி... | - | 64 |
| செய்திச் சிதறல்கள் | - | 65 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 66 - 68 |
| உற்சவகால நிகழ்வுகள் | - | 69 - 70 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 71 - 74 |


**அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா**


**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம் : 021 3219599

Web Site : WWW. Sannithiyan.org

பதிவு இல. Q.D/46/NEWS/2010

அச்சகம் : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

உ



# ஞானச்சுடர் ஆனி மாத வெளியீடு

**வெளியீட்டுரை -**

ஆனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை கிராமசேவையாளர் சோ. பரமநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது வெளியீட்டுரையில் ஞானச்சுடர் மலரின் பெருமைகளை வியந்து கூறியதோடு, இந்நூலானது 150ஆவது மலராக திகழ்கின்றது. இந்நூல் பல்வேறு அம்சங்களைத் தாங்கி வருவதோடு, எல்லோரும் பயன்பெறும் ஒரு அறிவுப் பொக்கிஷமாகத் திகழ்கின்றது.

மேலும் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள், பணிகளை மேற்கொண்டு வருகின்றது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற வாக்கிற்கிணங்க ஆச்சிரமமானது தினந்தோறும் அன்னப்பணியை வழங்கி மக்களுக்கு சேவை செய்கின்றது என்பதில் மிகையேதுமில்லை.

மேலும் இந்நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என்று கூறியதோடு மேலும் இந்நூலானது பல்வேறு அம்சங்களைத் தாங்கி வரவேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை-**

150 சுடருக்கான மதிப்பீட்டுரையை திரு. க. நவரெத்தினம் இளைப்பாறிய ஆசிரியர் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தம் உரையில் முதலில் சந்நிதி வேலவனின் அருளாசியோடு வெளிவரும் இம்மலரை நான் மதிப்பீடு செய்வதென்பது இயலாத காரியமாகும். இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் யாவும் எல்லோரும் இலகுவில் படித்து விளங்கிக்கொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளது.

மேலும் ஆரம்ப காலத்தில் வெளிவந்த மலருக்கும் தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் மலருக்கான வேறுபாட்டினை எம்மால் கூறமுடியாது. மேலும் வருடாவருடம் இந்நூலானது பிரகாசித்துக்கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை என்று கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி ஒன்றும் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

# ஞானச்சுடர் 2010 ஆடி மலர்




1998 தை மாதம் ஞானச்சுடரின் முதற் பிரதி வெளியாகியது. சரியாக இரண்டு வருடங்களின் பின், 2000ஆண்டு தை மாதத்திலிருந்து "சுடர் தரும் தகவல்" புதிய பகுதி ஆரம்பமாகியது. பின்னர், காலத்துக் காலம் பல்வேறு புதிய அம்சங்களுடனும், சுடர் தரும் தகவற் செய்திகளுடனும் எத்தகைய இடர் இருப்பினும் தடையின்றி வெளிவருவது "எந்நிதியும் தரும் சந்நிதி வேலவனின்" திருக் கருணையே.

எந்த இடத்திலும் எந்த சபையிலும் நிகழாத ஒரு புதிய நிகழ்ச்சி ஆச்சிரம மண்டபத்தில் நடந்தேறியது. மண்டபம் நிறைந்த பார்வையாளர் களைப் பரவசப்படுத்தியது. 2010 சித்திரை, வைகாசி ஞானச்சுடர் மலர்களில் ஒரு வித்தியாசமான அறிவிப்பு சூசகமாக வெளிவந்தது. சந்தாதாரர்கள் தங்கள் தற்போதைய முகவரியினை உறுதிப்படுத்துமாறு கேட்டிருந்தோம்.

அந்தத் தகவலைக் கவனத்திலெடுத்து எம்மோடு தொடர்பு கொண்டவர்கள் நூற்றுக்கும் அதிகமானோர். தொடர்புகொண்ட அன்பருக்கு "வாசகர் கௌரவிப்பு அழைப்பிதழ்" தனித் தனியாக தபாலில் அனுப்பப்பட்டது. கடிதம் கண்ட வாசகர்களுக்கு ஏற்பட்ட பேரானந்தத்துக்கு அளவேயில்லை. தொலைபேசி அழைப்பு மூலம் தங்கள் மகிழ்வினைத் தெரிவித்தனர்.

27.06.2010இல் 150 ஆவது வெளியீட்டுக்கான நல்ல நேரமும் வந்தது. வழமைபோல மலருக்கான வெளியீட்டுரை - மதிப்பீட்டுரை ஆகியவற்றினைத் தொடர்ந்து "வாசகர் கௌரவிப்பு" நடைபெற்றது. "வாராந்த நிகழ்ச்சி வழங்குவோர் கௌரவிப்பு", "கட்டுரையாளர்கள் கௌரவிப்பு" என ஆச்சிரம மண்டபம் பல்வேறு நிகழ்வுகளைக் கண்டிருந்த போதும், அன்றைய "வாசகர் கௌரவிப்பு" என்பது புதிய நடைமுறை புதிய அனுபவம். கொழும்பு, திருமலை, மட்டக்களப்பு போன்ற தூர இடங்களிலுள்ளவர்களைத் தவிர அழைப்பிதழ் அனுப்பப்பட்ட ஏனைய வாசகர்கள் அனைவரும் விழாவுக்கு வந்திருந்தனர்.

வாசகர்கள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌர விக்கப்பட்டனர். அதிலும் கூட ஒரு வித்தியாசமான நடைமுறை கையாளப்பட்டது. முதல் ஐந்து பேருக்கு மட்டுமே ஆச்சிரமத்து சுவாமிகள் பொன்னாடை போர்த்தியதுடன், ஏனையவர்களுக்கு சைவகலை பண்பாட்டுப் பேரவையின் உறுப்பினர்களும் அன்றைய விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்களும், பொதுமக்களும் வாசகர்களுக்கு பொன்னாடை போர்த்தினர்.

"வாசகர் பாராட்டு விழா" பற்றி அன்றைய விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய செஞ்சொல்வாணர் இரா. செல்வவடிவேல் அவர்கள் ஆற்றிய உரை 14.07.2010 தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆச்சிரமத்துப் பணிகள் அனைத்தையும் ஆற்றங்கரையான் நினைக்கிறான். நாம் நிறைவு செய்கிறோம். இதுவே உண்மையும் யதார்த்தமும்.

# சந்நிதி, புகழ்பூத்த வடிவேலனே!

(பதினான்கு சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்)



பத்திபுரி நக்கீரன்
பரும்பூதம் சிறையிலிட
பன்னிருகை வேல. என்றே
பரிந்தாற்றுப் படைபாட
படைகொண்ட பூதத்தை
பலிகொண்டாய் கீரன். வாழு;
உத்தமர் அருணகிரி
உளம்வெம்பி அருணையின்
உயர் சிகரம் நின்று விழவும்
ஓடோடி வந்தவரை
உடனேந்தி 'முத்தென'
ஒப்பில் புகழ் பாட வைத்தாய்;
சித்தமுடன் ஔவைக்கு
தீஞ்சுட்ட கனியீந்து
செய்யசுடர் வேலும் காட்டி
சீர்பெரிது அரிதினிது
கொடிதெதென வினாவியே
செந்தமிழ்ப் பாடல் கேட்டாய்;
புத்தமிர்த மென அடியேன்
புனைபாடல் தன்னைக் கேட்க
புதுவருடம் ஓடி வருவாய்
பொன்மனச் செல்வர்தொழும்
தொண்டைமா னாற்றயல்வாழ்
புகழ் ஞானச்சுடரின் வேலனே!

கலாபூஷணம், முதுபெரும் புலவர்
ஆசிரியர் : வை.க. சிற்றம்பலவனார்

உ

# ஆடி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**திரு ந. ஜவகர்லால்நேரு**
(லண்டன்)
**மாதர்க்கரசி பொன்னுத்துரை**
(கொழும்பு)
**K. கனகசபேசன்**
(கனடா)
**திரு Dr. அ. குமாரசாமி**
(பிள்ளையார் கோவிலடி, சித்தங்கேணி)
**திரு Dr. V. ஸ்ரீஸ்காந்தன்**
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)
**திரு Dr. பொன். சின்னத்தம்பி**
(திருவேரகம், பொலிகண்டி)
**திரு சி. பஞ்சலிங்கம்**
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
**திரு வே. பராராளன்**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)
**திரு S. தர்மரெத்தினம்**
(அதிபர், சிறுப்பிட்டி)
**திரு நா. தங்கராசா**
(இளை. அதிபர், ஈவினை)
**திரு சி. தயாபரன்**
(கிராம சேவகர், கோப்பாய்)
**திரு ச. நவரத்தினராசவேல்**
(அதிபர், வேல்பதி, புத்தூர்)
**திரு பொன்னையா சிவக்கொழுந்து**
(அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி)
**திரு நா. இராசலிங்கம்**
(அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி)
**உரிமையாளர்**
(தனு வீடியோ, உரும்பராய்)
**திரு வ.சி. குணசீலன்**
(தாவரவியல் ஆசிரியர், கரவெட்டி)
**திரு. செ. சுந்தரலிங்கம் J.P.**
(நிர்வாகி - சதா பொன்ஸ் கல்வி நிலையம், மாலிசந்தி)

# ஞானச்சுடர் 2010 ஆடி மலர்

**திரு ந. சேகர்**
(கிராமசேவையாளர், வீரபத்திரகோவிலடி, உடுப்பிட்டி)
**திரு. கு. ஸ்ரீமுருகமூர்த்தி**
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)
**திரு. கு.பொ. நடராசா**
(அண்ணா தொழிலகம், இணுவில்)
**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**திரு சி. கருணா**
(கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)
**திரு மூ. பஞ்சலிங்கம்**
(நியூ கிளினிக், இணுவில்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு செ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**திரு ஸ்ரீ அருள்தாஸ்**
(அருள் ஆபரணமாளிகை, உடுப்பிட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**திரு ம. இரத்தினமூர்த்தி**
(ஜெயகனன் பல்பொருள் வாணிபம், சுன்னாகம்)
**திரு ந. இராசரத்தினம் J.P**
(நாகம்ஸ் நிறுவனம், சுன்னாகம்)
**செல்வி. தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**திரு க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**திரு சு. குணரெத்தினம்**
(ஞானவைரவர் வீதி, உரும்பராய்)
**திரு ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**திரு செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்.)
**செயலாளர்**
(கருணையம்பதி சனசமூக நிலையம், கரணவாய்)
**திரு மூ. சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)

**திரு. க. விகர்ணன்**
(குமரகோட்டம், கோண்டாவில்)

**திரு க. சிவகடாட்சம்**
(தாவடி, கொக்குவில்)

**திரு அ. ஸ்ரீதரன்**
(வளர்பிறை பட்டுச்சோலை, சங்கானை)

**செயலாளர்**
(கணபதி படிப்பகம், நெடியகாடு)

**திரு மு. விசயரத்தினம்**
(காட்டுப்புலம், தொண்டைமானாறு)

**திரு R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)

**திரு S. நர்மலிங்கம்**
(கமலபதி, மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)

**திரு சி. குகநாதன்**
(புறூடி லேன், அரியாலை)

**திரு வீ. சிவபாலசிங்கம்**
(கரன்பான்சி, சுன்னாகம்)

**திரு க. ஸ்ரீஸ்கந்தராசா**
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)

**திரு M. பாலசுப்பிரமணியம்**
(ஸ்ரீ முருகன் கபே. ஈவினை)

**திரு க. கிருபானந்தம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**திரு M.K. ஜீவகதாஸ்**
(அறவழி, சாவகச்சேரி)

**திரு பா. பத்மராசா**
(மூளாய், சுழிபுரம்)

**திரு செல்வநாயகம் செல்வக்குமாரன்**
(சிவன் வீதி, உரும்பராய்)

**திரு மு. இராஜேந்திரன்**
(முருகையா கோவிலடி, புலோலி)

**திருமதி. ஜெயலக்ஷ்மி**
(சென்ற் அந்தோனிஸ் லேன், மாதகல்)

**திரு பொன். சற்குணநாதன்**
(வேம்பன் வீதி, உரும்பராய்)

**திரு செ. செல்லத்துரை**
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)

**திரு நா. தெய்வேந்திரம்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

**திரு வீ. தவத்துரைராசா**
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)

**திரு சி. கணேசமூர்த்தி**
(அல்வாய்)
**திரு அ. அருள்நாதன்**
(துவாரகா, இணுவில்)
**திரு தயானந்தன் சுஜந்தன்**
(அச்சக வீதி, கொக்குவில்)
**திரு த. கமலேஸ்வரன்**
(ஈஸ்வரி வாசம், இணுவில்)
**திரு செல்லப்பா சோமசுந்தரம்**
(முன்னாள் வங்கி முகாமையாளர் பகவதி கோயிலடி, உடுப்பிட்டி)
**திரு செ. அருளானந்தம்**
(கிராமசேவகர், பருத்தித்துறை)
**உரிமையாளர்**
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
**செல்வி தம்பு சரோஜா**
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)
**திரு ச. சூரியப்பெருமாள்**
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
**திரு C.K. சிதம்பரநாதன்**
(வட்டுவத்தை, அல்வாய்)
**திரு க. ஆனந்தராசா**
(லிங்கவாசா, நெல்லியடி)
**திரு க. தங்கராசா T.A.**
(அல்வாய் மேற்கு)
**திரு மா. அருட்செல்வம்**
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
**திரு R. தவகோபால்**
(ஹரிராம், பலாலி வீதி, உரும்பராய்)
**திரு ச. சிவரூபன்**
(சிறுப்பிட்டி)
**திரு ச. சண்முகவடிவேல்**
(ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)
**திரு செல்லையா சர்வேஸ்வரன்**
(செல்வறங்கம், இணுவில்)
**திரு ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**திரு த. கந்தசாமி**
(இருபாலை வீதி, கோண்டாவில்)
**திரு இ. பரமசாமி**
(கொல்லோலை, உடுப்பிட்டி)
**சு. சர்வேஸ்வரன்**
(காளி கோவிலடி, மல்லாகம்)

உ

# நீடிய வாழ்வுக்கு நாடிய பிறப்பு ஆடிப்பிறப்பு

- கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் -

பன்னிரண்டு மாதங்களிலும் சிறப்பாக ஆடி மாதத்தை மட்டும், ஆரவாரமாக கூழோடும், கொழுக்கட்டையோடும் வரவேற்பதும் போற்றுவதும் எமது வாழ்வில் ஈண்டு கவனிக்கத்தக்கதொன்றாகும். பூவுலகில் உள்ளவர்கள் மட்டுமல்ல, தேவர்களும், ஜீவராசிகளும் சந்தோஷிக்கின்ற திருநாள் ஆடிப்பிறப்பு ஆகும். கூடவே பயிர் வகைகளும், தானியவகைகளும் உறக்க நிலையிலிருந்து விழித்தெழ வைப்பதும் ஆடிப் பிறப்பன்றேயாகும். ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் ஆடிப்பிறப்பன்று விடுமுறை விடப்படும் சம்பிரதாயம் வழக்கமாக இருந்தது. அந்தச் சம்பிரதாயம் ஏனோ தெரிய வில்லை மறக்கப்பட்டு விட்டது. அதற்குக் குரல் கொடுப்பவர்கள் மௌனித்து விட்டார்கள்.


நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள் விட்டுச் சென்ற இலக்கியமே எமக்குச் சாட்சி பகருகின்றது.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

நீடித்த ஆயுளைத் தருவதும், நீடித்த ஆயுளைக் கொண்டதுமான 'கற்பகதரு' பனையாகும். பனம் பொருட்கள் யாவுமே ஸ்திரமான பலத்தைக் கொண்டதாகும். அதற்கும் ஆடிப்பிறப்புக்கும் யாது சம்பந்தம் என ஆராயும்போது, பச்சை அரிசி மா சிவப்பாக இருந்து இரத்தத்தோடு சேரும் தன்மையைக் கொண்டதாகும். மேலும் பயறானது மஞ்சள் நிறத்தைக் கொண்டதாய், தெள்ளிய புரதத்தை இரத்த விருத்திக்காகத் தன்னையே பொருமித்துத் தருகிறது. இத்துடன் சொட்டுத் தேங்காய், ஏலக்காய், தேங்காய்ப்பால் சேரும் போது கற்பகதருவின் - பனங்கட்டிக்கு இராட்சத பலம் கிடைப்பதாக ஐதீகம். கோடையிலே நலிவடைந்த உடம்புக்கு இராட்சதபலம் ஆடியிலே வேண்டற்பால தாகும்.

---

ஆண்டவன் அருளே ஆசாரியின் உருவம்.




ஆடிப்பிறப்புக்கு நாளை
விடுதலை ஆனந்தம்
ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழுங்
குடிக்கலாம் கொழுக்கட்டை தின்
னலாம் தோழர்களே. பாசிப்பயறு வறுத்
துக் குற்றிச் செந்நெல் பச்சை அரிசி இடித்துத்
தெள்ளி, வாசப்பருப்பை அவித்துக் கொண்டு
நல்ல மாவைப் பதமாய் வறுத்தெடுத்து வேண்டிய
தேங்காய் உடைத்துத் துருவியே வேலூரின் சர்க்கரை
யும் கலந்து, தோண்டியில் நீர்விட்டு மாவை அதில்
கொட்டி சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு வில்லை
வில்லையாக மாவைக் கிள்ளிக் கட்டி வெல்லக்
கலவையை உள்ளே இட்டு பல்லுக்கொழுக்கட்டை
அம்மா அவிப்பனே பார்க்க பார்க்க பசி தீர்ந்திடுமே
பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி போட்டு மா
உருண்டை பயறுமிட்டு மாவைக் கரைத்தம்மா
வார்த்துத் துழாவுவள் மணக்க மணக்க வாய்
ஊறிடுமே. குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை
சூடியே குத்துவிளக்குக் கொளுத்தி வைத்து
அங்கின் சீர் பழம் பாக்குடன் வெற்
றிலை ஆடிப் படைப்பும்
படைப்போமே.

வண்ணப் பலாவிலை
இடப் பொறுக் இடை
வந்து மடித்ததைக் கோலிக்
கொண்டோட அன்னை அகப்
பையால் அள்ளி அள்ளி
வார்க்க ஆடிப்
புதுக் கூழ்
குடிப்போமே

வாழைப் பழத்தைத் தோலுரித்
தும் தின்றோம் நல்ல மா
வின் பழத்தை அறுத்துத் தின்
போம், நல்ல கூழைச் சுட்டுச்
சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்
னைக் கடித்
திடுபோமே.

இறைவனுக்காகத் துன்பப்படும் அளவுக்கு உனக்கு இன்பம் கிடைக்கும்.

தை மாதம் பொங்கல் போல, ஆடிமாதம் கூழ் என்பதனைத் தீர்மானித்தவர்கள் ஞானத் தமிழர்கள்.

பாசிப்பயறு வறுத்துக் குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி
வாசப்பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து
பூவைத் துருவிப் பிளிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாய் ஊறிடுமே

பாடசாலைகள், வீடுகள், ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் என யாவற்றிலும் ஆடிப்பிறப்புக்கும், ஆடிக் கூழுக்கும் தகுந்த முக்கியத்துவம் கொடுத்திருப்பது வரவேற்று வணங்கத்தக்கதாகும். தமிழர் தம் பண்பாட்டுக் கோலங்கள் மலிகின்ற வைபவங்களாக தைப் பொங்கலோடு, ஆடிப்பிறப்பும், தீபாவளியும், நவராத்திரியும் விளங்குகின்றன. இருந்தபோதும் ஆடிப்பிறப்போடமைந்த ஆடிக்கூழானது சிறுவர்கள், இளைஞர்கள், உழைப்பாளிகள், பக்தர்கள், முதியவர்கள், உலகமே.

வண்ணப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப்புதுக் கூழ் குடிப்போமே

இவ்வாறு ஆசையுடன் ஆடிக் கூழினைக் பூலோகத்திலுள்ளவர்கள் குடிப்பதைப் பார்ப்பதற்காக வானகத்திலுள்ளவர்கள், தேவர்கள், குறிப்பாக இறைபதமடைந்தவர்கள், பிதிர்கள், பிறப்பெடுக்காத பிதிர்கள், தயாராகும் பிதிர்கள் எல்லோருமே ஆடிப்பிறப்பன்று பூவுலகிற்கு வருகை தருவார்கள் என்ற ஐதீகமும், அன்றைய தினம் இல்லங்களில் கொண்டாடுவதன் மூலம், நீடித்த ஆயுளையும், நாடிய வாழ்வையும் ஆசீர்வாதமாகப் பெறலாம் என்பது எமது முன்னோர்களின் கணக்கு. இதற்கான விடை ஒரு போதும் பிழையாவதில்லை. மற்றும் காய்ச்சப்பட்ட கூழானது மிஞ்சுதலாகாது. கூழ் மிஞ்சுதலானது அந்த வருட பலனுக்குரியதாகும். மிஞ்சுதல் மத்திமமான பலனையே கொடுக்கும் என்பதால் எந்தவொரு வீட்டிலும் ஆடிக் கூழை எஞ்சியிருக்க விடுவதில்லை. ஊழ்வினை கூழுக்கில்லை அதாவது ஊழ்வினை - ஒருபோதும் கூழை அணுகுவதில்லை. ஆதலால் நாடிய இப்பிறப்பு, ஆடிப்பிறப்பன்று காய்ச்சி மகத்துவமாக்கப்பட்ட நிலையில், நீடித்த ஆயுளை தரணிக்குச் சொந்தமாக்கும் எனக் கருதி 2010 ஆடிப்பிறப்பினை கொண்டாடி மகிழ்வோம்!

---

நம்பிக்கையே நண்பனைக் காட்டும் கண்.

உ

தொடர்

# கர்மமும் மறுபிறவியும் விதி

- கு. கோபிராஜ் அவர்கள் B.A. (Hons) (இந்து நாகரிகம் சிறப்பு) -

இந்தியத் தத்துவ கொள்கைகள் மதங்கள் என்பவற்றின் அடியீடான கோட்பாடு கர்மக் கொள்கையும் மறுபிறவிக் கொள்கையும் ஆகும். கர்ம நியமம் என்பது விதியின் கையில் ஒப்புக்கொடுப்பது. இந்த வாழ்க்கையில் சம்பவிப்பன எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். ஏனெனில் நாம் முன்பு செய்தவையின் வினையே அவையாகும். எனினும் வருங்காலம் எங்கள் கைகளிலேயே இருக்கிறது. ஆகவே நாம் நம்பிக்கையோடும் மன உறுதியோடும் எமது கருமங்களைச் செய்வோம் என ராதாகிருஷ்ணன் கூறுவதையே ராமாயணத்தரவுகள் கூறுகின்றன. ராமாயணப் பாத்திரங்கள் தங்களுக்கு நேரும் துன்பங்கள் எல்லாம் முந்திய பிறவியில் செய்த தீவினையின் பிரதிபலன்கள் என துன்பங்களை சகித்து நடக்கின்றார்கள். செய்தவினை செய்தவனையே செய்தவாறே வந்தடையும் என நம்பினர். அவர் செய்த நல்வினைகளும் தீவினைகளும் பருவ காலத்தில் பழுக்கும் மரம் போல உரிய காலத்தில் அவரவரை வந்தடையும் எனவும் நம்பினர். தீவினையின் பயனை அனுபவித்த பின்னரே நல்வினையின் நலன்களை ஒருவரால் அனுபவிக்க முடியும் எனக் கூறப்படுகின்றது. நற்கருமங்களையே ஒருவர் புரிய வேண்டும் நற்கருமத்தைப் புரிவதே இப்பிறவியின் நோக்கம் இது கர்மபூமி கர்மம் இயற்றும் இடம்.

சைவ சித்தாந்தம் கன்மம் பற்றிக் கூறுகின்றது. இங்கு கன்மம் எனபதும் கருமம் என்பதும் ஒன்றுதான். கன்மம் என்றால் வினை அல்லது செயல் என்று பொருள்படும் நாம் செய்யும் செயல்கள் யாவும் கன்மங்களே ஆனால் தத்துவ உலகில் கன்மம் என்பது கற்று விரிந்த கருத்து உடையது. ஒவ்வொரு செயலுக்கு ஒவ்வொரு நோக்கம் உண்டு பலன் உண்டு அப்பலனை அனுபவிப்பதும் ஒரு செயலாகும். எல்லாச் செயல்களுக்கும் பலன் உண்டு. அப்பலன்கள் செய்தவரையே சேரும். சில பலன்கள் உடனேயே சேரும்; சில செயல்களின் பலன்கள் சிலகாலம் சென்று சேரும் இந்த உண்மையை பொதுவாக ஒப்புக் கொள்வர்.

ஒரு பிறப்பில் ஒருவர் செய்யும் செயல்களின் பலன்கள் அனைத்தையும் சில சமயம் அந்தப் பிறப்பிலேயே அனுபவிக்க முடியாமல் போகலாம். அதனால்

அப்பலன்களுடன் எஞ்சியவற்றை அனுபவிப்பதற்காகவே பின்னும் ஒரு பிறப்பை எடுக்க வேண்டி நேரிடும். அப்பிறப்பிலேயே அவன் முந்தைய பிறப்பிலே செய்த வினையின் பலன்களை அனுபவிப்பவன் அங்ஙனமே அனுபவிக்கும் போது வேறு பல வினைகள் புரிவான். அவ்வினைகளின் பலனை அடைவதற்காக பின்னும் பிறவிகள் எடுக்க நேரிடும். இவ்வாறு கன்மம் காரணமாக பிறப்பும் பிறப்பு காரணமாக கன்மமும் மாறி மாறி சங்கிலித் தொடர் போல வந்து கொண்டே இருக்கும்.

இதை எல்லா மதத்தவரும் ஏற்றுக் கொள்வதில்லை இந்த இடத்தில் கன்மத்தைப் பற்றி ஏனையோர் கொள்கைகளையும் ஆராய்வது நன்று.

உலக மதங்களை 3 பிரிவினுள் அடக்கிவிடலாம்.

01. இப்பிறப்பும் இப்பிறப்பிலுள்ள கன்மங்களும் உண்மை முற்பிறப்பு என எதுவும் கிடையாது எனக் கொள்வோர் ஒரு பிரிவினர் பழவினையை மறுக்கின்றனர்.

02. அதாவது முற்பிறப்பில் செய்த வினையை இரண்டாவது பிரிவினர் ஒப்புக்கொள்வர் செய்தவனை சென்று சேரச் செய்ய இறைவன் ஒருவன் இருந்தே தீர வேண்டும்.

03. பல் வினைகளை ஒப்புக் கொள்வது மட்டுமன்றி அறிவுள்ள பொருளுக்கு அன்பு, வல்லமை, பழவினைக்கு உண்டு என வாதிடுவோர்.

முதலாவது பிரிவினர் மேலைத் தேய நாட்டவர். இரண்டாவது பிரிவினர் இந்து சமயத்தவர், மூன்றாவது பிரிவினர் பௌத்தர், சமணர் ஆவார்.

பழவினை இல்லை எனில் நல்லவர்கள் துன்பமடையவும் தீயவர்கள் இன்பமடையவும் வேண்டிய அவசியம் இராது இதைவிட ஒரு பிரசவ ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை கொழு கொழு என்றும் இன்னொன்று நோஞ்சனாகவும் உள்ளது. ஒன்று ஏழைப் பெண்ணுக்கும் இன்னொன்று பணக்காரப் பெண்ணுக்கும் பிறக்கின்றது. கடவுள் கூட கருணை அற்றவரா? ஏன் இப்படி படைக்கின்றான் பூர்வ ஜென்ம புண்ணிய பாவத்தை ஒட்டியே புனர் ஜென்மம் அமைகின்றது என்ற முடிவுக்கு வரலாம். இதையே சைவ சித்தாந்தத்தின் பழவினை தீர்மானிப்பது எனக் கூறினார். பல பிறவி பல உடல்கள் எடுத்து தான் செய்த வினைக்கு ஆன்மா அனுபவிப்பதாக மாணிக்க வாசகர் "புல்லாகிப் பூடாகி புழுவாய் மரமாகி பல்விருகமாகி...." இன்ப துன்ப முதுமை இறப்பு என்பது முன்பு செய்த கன்மத்தின் கருவில் இருந்தே உருவாக்கம் பெற்றது இதை சித்தியார் "பேறழவு இன்பமோடு பிணி மூப்பு சாக்காடு எனும் ஆறும் முன் கனியூட்டப்பட்ட விதி அனுபவித்தால்" என்னும் அடிகள் காட்டுகின்றது.

புத்தரின் கூற்றின்படி கடந்த கால செயலினால் மனிதர் கொலைகாரன், கள்வன், பொய்யன், வேசியர் போன்றவர்களாக பிறக்கின்றனர். புத்தர் தனது வாழ்வில் ஒருமுறை தேவதத்தன் என்பவனின் கல்லடியினால் காலில் காயப்பட்டார். இதற்கு காரணம் முற்பிறப்பில் தான் செய்த ஏதோ ஒருவன் செயலும் அத்துடன் தேவதத்தனின் செயலும் சேர்ந்து கன்மகாரியப்பட்டது என்றார். இனி ஒருவன் விதைத்த விதையை எல் லாவற்றையும் அறுவடை செய்தேயாக வேண்டுமா? என்பது கேள்வி. இதற்கு அங்கத்தர நிகாமாவில் புத்தரது பதில் விதைத்ததை அறுவடை செய்தே ஆகவேண்டும். இருப்பினும் பௌத்த மதம் ஒருவரது கர்ம

அச்சம் இருக்கும் வரையில் நீ அறிவாளியாக மாட்டாய்.

வினையே செப்பனிட தகுந்த சந்தர்ப்பம் கொடுக்கின்றது.

உதாரணம் : அங்குலி மாலாவின் வாழ்க்கை அங்குலி மாலா ஒரு கொலை காரன். வழிபறிகள்வன். இவன் மனிதரைக் கொன்று விரல்களை மாலையாகப் போட்டு இருந்த இவனே புத்தரது உபதேசத்தால் ஞானியாக மாறினான்.

பழைய கர்ம வினைப்படி : அசோகன் கலிங்கத்துப் போரிலே பலரைக் கொன் றான். ஆனால் நிகழ்கால கர்மத்தின்படி தர்ம அசோகனாக மாறியதாக பௌத் தம் கூறுகின்றது.

ஆன்மா வினையை சேர்ந்து எடுக் குமா, அப்படி எடுக்குமாயின் அது நல் வினைப் பயனை விரும்பி எடுத்து தீவினைப் பயனை நீக்கிவிடும். இதனையே சைவ சித்தாந்திகள் இவற்றிற்கு 'வேறாய் தான் வினைகளுக்கு ஆளாகாத பழவினையை உரியவரோடு சேர்க்க வல்ல பேரறிவும் பேராற்றலும் உடைய ஒரு பரம் பொருள் உண்டு" என்ற முடிவுக்கு சித்தாந்திகள் வந்தார்கள்.

சைவ சித்தாந்தம் வினையை 3 பிரிவுகளாக பிரிக்கின்றது. பஞ்சிதம், பிராத் தம், ஆகாமியம் என்பதாகும். ஆன்மா பல பிறவிகளில் செய்த வினைகளின் தொகுப்பே சஞ்சிதவினை ஆகும். சஞ்சிதவினையில் இருந்து பெற்று குறித்த பிறவியில் அனு பவிக்கும் வினை பிரதானமானது. பிராரத் துவமானது வினையை அனுபவிக்கும் போது புதிதாக உருவாகிய வினை ஆகாமிய வினை ஆகும்.

முற்பிறப்பில் விதிக்கப்பட்டதுதான் இப்பிறவியில் என்றால் வாழ்வில் ஊக்கம், முயற்சி, முன்னேற்றம் ஆகியவற்றிற்கு இடம் எங்கே? என்ற வினா எழலாம். பழ வினையை நம்பினால் முயற்சிக்கு இடம் உண்டு. இதை காலம் சென்ற சிவபாத சுந்தரம் அவர்கள் சிறு உதாரணங்களில் விளக்கினர். அதாவது பழவினை ஒருவன் கடன்பட்டு இருத்தலாகும். உழைப்பு என் பது முயற்சி ஒருவன் உழைத்து கடனை குறைத்து விடுகின்றான். பின் பணத்தை சேர்க்கிறான். அதைப்போல ஊழினால் துன் பப்படுகின்றவன் முயற்சி செய்யாமல் இருந்தால் அதிக துன்பத்திற்கு ஆளா வான். முயற்சி செய்ய அதற்கேற்ப தண்ட னையும் குறையும்.

நாம் இந்தப் பிறவியில் நடத்தும் வாழ்க்கை முந்தைய பிறவியில் நாம் செய்த வினைகளைப் பொறுத்தது. நமக்கு அடுத்த பிறவியில் கிடைப்பவை நாம் இப் போது செய்யும் வினைகளைப் பொறுத் தது. நமது முற்பிறவியில் செய்தவற்றால் கிடைக்கும் பலனைத் தவிர்க்க முடியாது மாற்றவும் முடியாது, இதற்கு லௌகீக மான உதாரணத்தைக் கூறலாம். நாம் பணம் சம்பாதித்து சேமித்து வங்கிக் கணக்கில் போடுகின்றோம். நாம் எப்படி சம்பாதிக் கின்றோம் என்றோ, எப்போது போட வேண் டும் என்றோ? எப்போது திரும்ப எடுக்க வேண்டுமென்றோ வங்கி முகாமையாளர் சொல்வதில்லை, ஆனால் நாம் போடுவதை ஏற்றுக் கொள்ளவும் ஒருவரின் கை எழுத்து வேண்டும்.

எடுத்த பணத்தை எப்படி செலவு செய்கின்றோம் என்பது வங்கி முகாமை யாளர் பொறுப்பல்ல. நாம் அந்தப் பணத் தில் தான தர்மம் செய்யலாம். அல்லது வியாபாரம் செய்து பணத்தைக் கூட்டலாம். பந்தயம் ஆடி தோற்று விடலாம். அதன் பலன் மறுபடி வங்கிக் கணக்கில் ஏறுகிறது அல்லது இறங்குகிறது. அதை மட்டுமே வங்கி முகாமையாளர் பதிவு செய்கிறார்.

(தொடரும்....)

துன்ப உலகில் மனத்திற்குச் சற்று ஆறுதல் அளிப்பது உறக்கமே.

# மருதுகீறி ஊடுபோன மால்:

- சிவ. சண்முகவடிவேல் அவர்கள் -

'மருதுகீறி ஊடு போன மால்' என்னும் அருந் தமிழ் வார்த்தை அமுதம் ஆலால சுந்தரரால் அர்ச்சனை பாட்டே ஆகப் பாடிய சொற்றமிழ் பதிகம் ஒன்றில் ஆளப்பட்டுள்ளது. அச்சொற்றொடர் சுந்தரமூர்த்தி நாயனார் திரு எதிர் கொள்பாடித் தலத்தின் மீது பாடிய பதிகத்தின் பத்தாவது பாடலில் பார்க்கலாம்.

**"மருது கீறி ஊடு போன**

**மாலய னும் அறியா"** என்று அமைந்துள்ளது.

திரு எதிர்கொள்பாடிப் பதிகப் பத்தாவது பாடல் பொருள் இது:

"சிவபெருமான் யானையின் தோலை உதிரம் ஒழுகப் போர்த்த குழல் போலும் சடையை உடையவர். இரு மருத மரங்களை முறித்து அவற்றிடையே தவழ்ந்த மாயோனும் பிரமனும் காணாதவர். வேதத்தை உணர்ந்தோர்க்கும் உரைக்க ஒண்ணாதவர். ஒளி வடிவமானவர் எங்கள் முதல்வர். சிவபிரானுடைய தன்னிடமாக விரும்புகின்ற திருக்கோயில் திருஎதிர் கொள்பாடி. நாம் எதிர்கொள்பாடி என்பதைச் சென்று சேர்வோம்.

அத் திருப்பாட்டில் 'மருது கீறி ஊடு போன மாலுடைய சம்பவம் முந்திய கற்ப காலம் ஒன்றில் நிகழ்ந்த வரலாறாகும். அந்த நிகழ்வை இந்த யுகத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் பொருந்திப் பாடிய ஆரூரருடைய அருள் திறத்தை ஆர் அறைய வல்லார்.

மால் மருது கீறி ஊடு போன நிகழ்வும் ஒரு நீண்ட புராண வரலாறு அது வருமாறு:

"பாம்பணையில் பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் முந்தொரு ஞான்று கண்ணனாகப் பிறந்தான். ஆயர்பாடியில் வளர்ந்து வந்தான். கண்ணனுடைய விளையாடல்களைப் பொறுக்க மாட்டாத அன்னை யசோதை உரமிக்க உரலோடு பிணித்துவிட்டாள். தன்னைப் பிணித்துவிட்ட உரலுடனே தவழ்ந்தான் கண்ணன்.

முற்றத்தில் இரண்டு மருத மரங்கள் நெருங்கி வளர்ந்து நின்றன. கண்ணன் மெல்லத் தவழ்ந்து மரங்களின் இடைவளியால் அப்பால் வந்தான். கட்டப்பட்டிருந்த உரல் மரத்தில் மோதியது. உரல் மரத்துள் தடையுண்டது. கண்ணன் சற்று வேகமாக இழுத்தான். மரங்கள் இரண்டும் சட சட ஒலியுடன் சரிந்து முறிந்து விழுந்தன. அக்கணம் மருத மரங்களிலிருந்து இரண்டு தேவ புருடர்கள் வெளிப்பட்டார்கள். அவர்கள் கண்ண பிரானைக் கை கூப்பித் தொழுதார்கள். சொல்லுகின்றார்கள்:

"கண்ணா! நாங்கள் இருவரும் குபேரனுடைய புதல்வர்கள். எங்கள் பெயர் நளகூபன், மணிக்கிரீவன் என்பதாகும்.

"நாரதருடைய சாபத்தால் நாங்கள் இருவரும் மருத மரங்களாக மாறி இங்கு வதிய நேர்ந்தது.

"தங்களுடைய பரிச வேதியினால் எங்களுடைய சாபம் எம்மை விட்டகன்றது.

---

அன்பையும் வாசனையையும் மறக்கமுடியாது.


"பிரபோ! இனி நாங்கள் எங்கள் வதிவிடங்களுக்குச் செல்ல விரும்புகின்றோம். விடை தரல் வேண்டும் என்று வேண்டினார்கள். தம் பதி நாடிப் படர்ந்தார்கள்.

அத் தேவாரம் :

குருதி சோர ஆனையின் தோல்
கொண்ட குழற் சடையன்
மருது கீறி ஊடு போன
மால யனும் அறியாச்
சுருதி யார்க்குஞ் சொல்ல வொண்ணாச்
சோதியெம் மாதி யான்
கருது கோயில் எதிர்கொள் பாடி
யென்ப தடைவோ மே

இதுவாகும்.

---



# வீடு பற்றி வாரியார்!

வாரியார் சுவாமிகள் ஒரு நிகழ்ச்சியில் பேசச் சென்றார். அவருக்கு முன் பல பேர் பேசினார்கள். அதனால், வாரியார் பேசத் தொடங்கும் நேரத்தில் கூட்டத்தினர் ஒவ்வொருவராக எழுந்து வீட்டுக்குப் புறப்பட்டனர். அப்போது பேச ஆரம்பித்த வாரியார் சுவாமிகள், "மெய்யன்பர்களே.. உங்கள் வீட்டுக்கு நீங்கள் பஸ், ரயில், சைக்கிள்... அவ்வளவும் ஏன்? நடந்தும் கூடப் போகலாம். ஆனால் நான் இப்போது சொல்லப்போகும் வீட்டுக்கு (வீடு - முக்தி என்று பொருள்) என் பேச்சைக் கேட்டால்த்தான் போக முடியும்" என்றார் கணீரென்று. அவ்வளவுதான்... புறப்பட்டவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்து அமர்ந்து அவரது உரையைக் கேட்டனர்.

---

தேவைகள் குறைந்தால் தெய்வத்தன்மை பெருகும்.



உ

மனை என்பது இல்லம், வீடு எனப் பொருள்படும். மாட்சி என்பது சிறப்பைக் குறிக்கும். அவ்வாறாயின் வள்ளுவர் மனையைப் பற்றிக் கூறினாரா? இல்லை, அவ்வில்லத்தில் வசிக்கும் குடும்பத்தைப் பற்றி இடவாகுபெயரிலே குறிப்பிட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. அதிலும் இல்லத்தில் வசிக்கும் அதிபதியாகிய இல்லத்தரசியைப் பற்றியே முதன்மைப்படுத்தப்பட்டிருப்பதை நாம் உளங்கொள்ள வேண்டும். அப்படியா

# வள்ளுவர் கூறும் மனைமாட்சி

- ஆ. மகேசு அவர்கள் -

யின் இல்லத்தாடவனைப் பற்றியோ அவர் தம் புதல்வர்களைப் பற்றியோ வள்ளுவர் ஒன்றுங் கூறவில்லையோ என ஐயுற வேண்டாம். அவர்களைப் பற்றியெல்லாம் நிறையவே வள்ளுவர் உரிய இடங்களிலே கூறத் தவறவில்லை என்பதை நாம் ஏற்றாகவேண்டும்.

ஆயினும் இங்கே எடுத்துக்கொண்ட தலைப்புக்கேற்ற முறையில், மனைமாட்சி சிறப்புற்றோங்க, யாருடைய பங்களிப்புப் பெரிதும் முதன்மைப் படுத்தப்பட்டிருக்கின்றதோ அவருடைய சிறப்பியல்புகளைப் பற்றி அலசுவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து வாழுவதே ஒரு குடும்பமாகும். குடும்பத்திலே பொருள் தேடுவது இல்லத்தாடவனுடைய கடமை வீட்டினை அழகுபடுத்தி வீட்டுப்பணியினைச் சரிவர நிர்வகிப்பது இல்லாளுடைய பொறுப்பு. அன்று இவ்வாறான முறையிலே குடும்பங்கள் மனநிறைவோடு மனைமாட்சி சிறக்க வாழ்ந்தார்கள் என்பது அவர்களுடைய வாழ்க்கைமுறையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களாகும். ஆயினும் இன்று அந்த நிலை சற்று வித்தியாசமாகவே அமைந்துள்ளது.

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்று கேட்ட காலம் மாறி, இன்று பெண்களும், ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாகச் சகல துறைகளிலும் முன்னணியில் சிறந்து விளங்குவதை நாம் பார்க்கின்றோம். இதன் பின்னணியில் வள்ளுவர் வகுத்துக் காட்டிய மனைமாட்சிக்குரிய பண்புகளை இக்காலப் பெண்கள் உள்வாங்கி செயற்பட முடியுமா? என்ற வினா எம்மிடையே எழலாம். ஒரு சில பெண்களைத் தவிர, அநேகமான பெண்களும், தமது குடும்பப் பொறுப்பையுணர்ந்து மனைமாட்சி சிறக்கக்கூடிய முறையில் வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதே யதார்த்தம்.

இருப்பினும் சில குடும்பங்களிலே சில பிரச்சினைகள் இல்லாமலில்லை. வாழ்க்கை என்பது ஒரு போராட்டம். அதனை எதிர்நீச்சலடித்து வெற்றிகொள்ள வேண்டும் என்ற மன உறுதிப்பாடு ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானது. வீடு சிறக்க வேண்டுமானால், ஆண் உழைத்தால் மட்டும் போதாது. கணவனுடைய வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்யக்கூடிய முறையில் மனைவி அமையவேண்டும். இதனையே வள்ளுவர்

"மனைத் தக்க மாண்புடையள் ஆகித் தற் கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்றார்.

ஒருவனுடைய மனைவி நற்குண நற்செயல்களால் சிறப்புடையவளாக இருந்தால், அவனுக்கு இல்லாதது ஒன்றுமில்லை. அவளிடத்திலே இச் சிறப்பியல்புகள் இல்லையாயின், அவனுக்கு உள்ளது எதுவுமே இல்லை. இதனையே வள்ளுவர்,

"இல்லதுஎன் இல்லவள் மாண்பானால் உள்ளது என்
இல்லவள் மாணாக் கடை" என்றார்.

இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்கும் பெண், இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்குண நற்செயல்கள் உள்ளவளாக இருத்தல் வேண்டும். இவ்வாறு அவளிடத்திலே இச்செயல்கள் இல்லையாயின், ஒருவனுடைய வாழ்க்கை, சிறந்ததாயினும், சிறப்புடையதாகாது என வள்ளுவர் அறுதியிட்டுக் கூறியிருப்பதை நாம் உளங் கொள்ள வேண்டும்.

"மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்"

புதிதாகத் திருமணம் செய்து, கணவன் வீட்டிற்குக் காலடி எடுத்து வைக்கும் பெண். தனது பிறந்த வீட்டைக் காட்டிலும், புகுந்த வீட்டைப் பெரிதாக மதித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும் இன்று பொதுவாக மாமி - மருமகள் சச்சரவுகள் இடம் பெறுவதை நாம் பார்க்கின்றோம். "மாமி உடைத்தால் மட்கலம், மருமகள் உடைத்தால் பொற்கலம்" என்று வீராப்புப் பேசும் மாமிமாரோடும், மருமகள் அன்பு காட்டி, ஆதரவு காட்டி, பிரச்சினையைப் பெரிதுபடுத்தாமல் தீர்த்துக்கொள்ளக் கூடிய சாதுரியம் உள்ளவளாக தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டும் "காவோலை விழக் குருத்தோலை சிரிச்சது" என்பது போல, என்றோ ஒரு நாள் இந்த மருமகளும் ஒரு மாமியாராக வரும் வாய்ப்பு ஏற்படும் அல்லவா?

சனீஸ்வரனாலே குடும்பத்திலே நோய், பிணி ஏற்படுகின்றனவே என்றெண்ணி, சிவன் ஆலயம் சென்று சனீஸ்வரனுக்கு எள்ளுப்பொட்டளி எரித்து வழிபடுகின்றோம். இது பிழையான வாதமுமன்று. ஆயினும் நமக்குள்ளே இருக்கும் அட்டமத்துச் சனியன்களைப் பற்றி எண்ணிப் பார்க்கின்றோமா? இதனைப் பின்வரும் பாடல் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

"காலையிலே பல்கலை நூல் கல்லாத் தலைமகனும்
ஆலையெரி போன்ற அயலானும் - சால
மனைகட்டழிக்கும் மனையாளும் தனக்கு
அட்டமத்துச் சனி"

உரிய காலத்திலே உரிய நூல்களைப் படிக்காது ஊர் சுற்றிய மூத்த மகனும், பஞ்சாலையிலே தீப்பிடித்தால் எவ்வாறு இருக்குமோ அதுபோன்ற குணவியல்புள்ள அயலவனும், கணவனுடைய வருவாய்க்கு அதிகமாகச் செலவு செய்யும் மனையாளும் தனக்கு அட்டமத்துச் சனி, எனக் கூறப்பட்டிருப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மனைவி நல்ல குணவியல்புகள் கொண்டவளாக இருந்தால் மட்டுமே, இல்லற வாழ்க்கை மங்களகரமானதாக அமைய முடியும். அதற்கு நல்ல மக்களைப் பெறுதலே நல்ல அணிகலமாகும் என வள்ளுவர் கூறுகின்றார்.

---

குறிக்கோள் உடைய வாழ்வே நல்வாழ்வு

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட்பேறு" என்றார்.

இல்லற வாழ்வை மேற்கொள்ளும் இல்லத்தரசியானவள், தானுண்டு, தன் குடும்பமுண்டு என்ற நிலையில்லாமல், ஏழை, எளியவர், அயலவர் ஆகியோரது பசித்தமுகம் பார்த்து தன்னாலான உதவிகளைச் செய்யக்கூடியவளாக இருக்க வேண்டும்.

ஒரு நாள் ஔவைப்பாட்டி தனது ஊரிலிருந்து, இன்னோர் ஊருக்கு கால் நடையாக சென்று கொண்டிருந்தார். கொதிக்கும் வெயிலிலே குடு குடுவென நடந்த பாட்டிக்கு களைப்பு ஏற்படவே, ஓர் வீட்டின் தலைவாயிலிலே சற்று இளைப்பாறினார். இதனை அவதானித்த அந்த வீட்டுத் தலைவன், பெருமனதோடு வீட்டு வாயிலிலே தங்கியிருக்கும் அந்த மூதாட்டிக்கு விருந்தளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தனது மனையாளை அணுகி,

"இருந்து முகந்திருந்து ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப
ஆடினாள், பாடினாள் ஆடிப்பழமுறத்தாற்
சாடினாள் ஓடோடத்தான்" (முறம் - சுளகு)

மேற்கூறிய பாடலுக்கு அமைவாக மனையாள் செயற்படக்கூடியவளாக இருந்தால், மனைமாட்சி என்னாவது? குடும்பம் என்னாவது?

எனவேதான் குடும்பத் தலைவியானவள், பல்வகையான பண்புகளையும் தன்னகத்தே கொண்டவளாக இருக்கவேண்டும்.

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம் என்ற சினிமாப்பாடல் மூலம் கவிஞர் கண்ணதாசன் கூறியிருக்கும் ஆழ்ந்த கருத்துக்கள் அப்பாடலிலே பொதிந்திருப்பதை நாம் நிராகரிக்க முடியாது.

இன்று சில குடும்பங்களிலே கணவன் - மனைவி (Cat and Dog Life) துன்பியலான வாழ்க்கை முறையை நடாத்தி வருவதை நாம் பார்க்கின்றோம். இதனாலே விவாகரத்துக்கோரி நீதிமன்றம் செல்லும் துர்ப்பாக்கிய நிலை கூட ஒரு சிலருக்கு ஏற்படுவதுண்டு. எது எப்படி இருப்பினும் இதையிட்டு கவலை அடைவதில் பயனேதுமில்லை. "எல்லாமே எப்பவோ முடிந்த காரியம்" என யோகர் சுவாமிகள் கூறிய அமுதவாக்கைச் சம்பந்தப்பட்டவர்கள் உள்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. மன அமைதிக்குரிய மாமருந்தை இறைவனிடம் கேட்டுப் பெறுதலே இதற்கு ஓரேவழி.

எனவே எதிர்காலத்தில் இல்லறபந்தத்தில் காலடி எடுத்து வைக்க இருக்கும் இரு பாலாரும், "All Glitters ane not gold" மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பதைப் புரிந்து கணவனையோ - மனைவியையோ தேர்ந்தெடுப்பதில் அவசரப்படாமல், "திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்" என்பதை உள்வாங்கி, "கண்டதே காதல் கொண்டதே கோலம்" என்பதை மனதிலிருந்து அகற்றி அமையப் போகும் வாழ்வை வளமுற்றதாக்கி, தமக்கும் பிறர்க்கும் பயன்படக் கூடிய புதல்வர்களைப் பெற்று, மனைமாட்சியை மாண்புடைய தாக்கி வாழ எல்லாம் வல்ல இறையருளை - திருவருளைப் பெற்று உயர்வு பெறுவதில் முனைப்பு பெறுவோமாக.

---

நல்லவர் உள்ளம் நல்லவர் அறிவர்

உ

- செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் -

ஆறு என்ற எண்ணிற்கும் முருகனுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது

முருகனின் திரு அவதாரம் சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய தீப்பொறிகள் ஓராறு.

அத்தீப்பொறிகளைத் தாங்கிய தாமரைகள் ஓராறு.

தாமரையிலிருந்து தோன்றிய குழந்தைகள் ஓராறு.

அக்குழந்தைகளை எடுத்து வளர்த்த கார்த்திகை மாதர் ஓராறு.

உமாதேவியார் அக்குழந்தைகளை வாரி அணைத்தபோது ஒரு உடலுடன் தோன்றிய முகங்கள் ஓராறு.

கந்தசஷ்டி விரத நாட்கள் ஓராறு.



# ஆறும் முருகனும்

முருகனின் திருக்கண்கள் ஓராறு.

சரவணபவ, குமாராயநம எனும் மந்திரமும் ஓராறு.

முருகனுக்குரிய யந்திரம் ஆறு கோணம்.

முருகனுடைய படைவீடுகள் ஓராறு.

முருகன் வள்ளியைக் கண்டு காதல் கொண்ட இடமான கதிர்காமம் ஓராறு.

முருகனின் ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு திறனை வெளிக்காட்டுகின்றன.

அருணகிரியார் கண்ட முகங்களாவன

ஏறு மயில் ஏறி விளையாடு முகம் ஒன்று

ஈசனுடன் ஞான மொழி பேசிய முகம் ஒன்று

அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்று

குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்று

சூரனை வதைத்த முகம் ஒன்று

வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்று

நக்கீரரும் திருமுருகாற்றுப் படையில்,

"மாயிரு ஞாலம் மறுவின்றி விளங்க பல்கதிர் விரிந்தது போல ஒருமுகம்

முட்டாள்கள் பாராட்டுகிறார்கள் அறிவாளிகள் அங்கீகரிக்கின்றார்கள்.

இருந்ததாக ஆறுமுகங்களையும் வெவ்வேறு வடிவில் கண்டு பரவசப்படுகிறார். அடுத்து இந்த ஆறுபடை வீடுகளின் சிறப்பையும் பார்ப்போம்.

திருப்பரங்குன்றம் - தெய்வயானையைத் திருமணம் புரிந்த இடம்.

திருச்செந்தூர் - சூரனை வென்று தேவர்களைக் காத்த இடம்

பழனி - மாம்பழம் தனக்குக் கிடைக்கவில்லையே என்ற கோபத்தால் ஆண்டியாக நின்ற இடம். அதாவது ஞானப் பழமாக நின்ற இடம்.

சுவாமிமலை - தந்தைக்கு பிரணவ மந்திரத்தை உபதேசித்த இடம்.

திருத்தணி - கணப்பொழுதில் பக்தர்களின் துயர் தீர்க்கும் இடம். வள்ளியை மணம் புரிந்த இடம்.

பழமுதிர்சோலை - வள்ளி தெய்வானையுடன் அமர்சோலை. தங்க மயில் விளையாடும் சோலை.

ஆறு படை வீடுகளில் ஆறாவது படைவீடுதான் பழமுதிர்சோலை. பழுத்த பழங்கள் தானாகவே உதிரும் சோலை. பக்தர்களுக்கு தேவியர் இருவருடனும் அருள் புரியும் சோலை.

"சூரர் கிளை மாள வென்ற குமரேசா
சோலை மலை மேவி நின்ற பெருமாளே" என அருணகிரிநாதர் திருப்புகழில் பாடுகின்றார்.


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.No. 021-2263406
021 3219599

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org


தொடர்ந்து செய்யப்படாத முயற்சி தோல்வியையே தரும்.

உ

(தொடர்ச்சி...

# வேண்டுதல்கள்

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் -

அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சராகவிருந்து சீருந்திருவும் சிறக்க வாழ்ந்தவர் வாதவூரர். மன்னனின் விருப்புக்கேற்ப குதிரைகளை வாங்கிவரவெனச் சென்ற வாதவூரரை, அவர் சென்று கொண்டிருந்த வழியிலே, திருப்பெருந்துறையிலே, குருந்தமர நீழலிலே குருவாக எழுந்தருளி வந்திருந்த சிவபெருமான் ஆட்கொண்ட கதை அனைவரும் அறிந்ததே.

திருவாதவூரர் குதிரை கொள்ளக்கொண்டு சென்ற பொன்னை சிவபெருமானின் திருப்பணிகளுக்குச் செலவிட்டுவிட்டதை அறிந்த அரசன் அவருக்குத் தண்டனையளித்து வருத்த நரிகளைக் குதிரைகளாக்கி அரசனிடம் சிவபெருமான் கொண்டுவந்து கொடுத்துத் திருவிளையாடல் புரிந்தார். குதிரைகள் மீண்டும் நரிகளாகியதும் திருவாதவூரடிகளை மன்னன் வருத்த, வைகையாற்றைப் பெருகச் செய்த எம்பிரான் பிட்டுக்காக மண்சுமந்து திருவிளையாடல் செய்தார்.

மாணிக்கவாசகருக்கு தீங்கு நேர்ந்தவேளை வேண்டியவற்றைத் தானே செய்து அவரைக் காத்த இறைவனின் அருளாலேதான் அவனை வணங்கவும் அவனது அருளைப் பெறவும் முடிந்ததென்பது அவரது முடிபு. "அவனருளாலே அவன் தாள் வணங்கி" எனச் சிவபுராணத்திலே பாடியுள்ளது போன்று பல்வேறு திருவாசகப் பாடல்களில் இதனை வலியுறுத்தி அவர் பாடியுள்ளதைக் காணலாம்.

அவரது வேண்டுதல்களும் பெரும்பாலும் இவ்வாறு அமைந்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்
தந்தருள்எம் உடையானே

என்ற வேண்டுதலிலே "நான் உன்மேல் பக்தி கொண்டு உள்ளே உருகவேண்டும். அந்த பக்தி இடைக்கிடை தோன்றுவதாக இருக்கக் கூடாது. கோவிலைக் கண்டால் அல்லது இறைவனது திருவுருவைக்கண்டால் பக்தியால் உள்ளமுருகுபவர் அப்பாலே சென்றதும் எல்லாவற்றையும் மறந்துவிடுவார். அப்படியில்லாது, இடையறாத பக்தி வேண்டும். அந்த பக்தியையும் நீதான் தந்தருள வேண்டும்" எனக் கோரியுள்ளார். மற்றொரு பாடலிலே

வருக என்று என்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி

எனப்பாடியுள்ளது அவரது வாழ்க்கையில் நிகழ்ந்துவிடுகிறது. குதிரை கொள்ளச் சென்றவரை இறைவன் ஆட்கொண்டுவிடுகிறார். சிவபிரானின் தோற்றமும் நோக்கும்

வறுமையிலும் நிறைவு காணும் ஏழையே மிகப்பெரிய செல்வனாவான்.

அவரை வருகவென்று ஈர்த்ததன் மூலம் குதிரை கொள்ளசென்றவரை இறைவன் வாங்கி விடுகின்றான். ஈசனின் திருப்பதம் அருளப்படுகிறது. இதற்கு அடுத்துவரும் பாடலிலும்,

ஆர்த்த நின் பாதம் நாயேற்கு
அருளிட வேண்டும்

என்ற வேண்டுதலையே முன்வைக்கின்றார். திருத்தோள் நோக்கம் பாடலிலும்

கூத்தா உன் சேவடி
கூடும்வண்ணம் தோள் நோக்கம்

என வேண்டுகின்றார்.

இங்கே தோள் நோக்கம் என்பது என்ன என்றும் பார்த்துவிடுவோம். அக்காலத்திலே மகளிர் ஒருவருடைய தோளை ஒருவர் தட்டி பாடி ஆடும் விளையாட்டு 'தோள் நோக்கம்' எனப்பட்டது. அப்படித் தோள் நோக்கம் ஆடும்போது பாடும் பாடல்களாகப் பாடப்பட்ட பதிகத்திலேயே மேற்கூறிய அடிகள் வருகின்றன.

மணிவாசகப் பெருமானின் காலத்திலே பெண்கள் விளையாடிய பல விளையாட்டுகள் பாடல்களைப் பாடியபடி விளையாடுவனவாக அமைந்திருந்தன. சாழல், அம்மானை, உந்தி பறத்தல், ஊஞ்சல் போன்ற பல விளையாட்டுகள் பற்றியும் திருவாசகத்தினூடாக அறிந்து கொள்ள முடிகிறது. இவற்றை விடப் பெண்கள் பூக்கொய்யும் போதும், சுண்ணமிடிக்கும்போதும் நீராடும் போதும் பாடல்பாடியவண்ணம் செயலாற்றியுள்ளனர். கடலிலும் வயலிலும் வேறுவேறு இடங்களிலும் பாடிக்கொண்டு தொழில் செய்வது வழமையே.

இப்பாடல்களையும் பக்திமயப்படுத்தி ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகை செய்யும் விதத்தில் மாணிக்கவாசகப் பெருமான் பாடியுள்ளார். இன்று வேலைகள் இயந்திரமயப் படுத்தப்பட அவற்றின் பேரிரைச்சலுடன் தொழில் செய்கிறோம். கோவிலிலே தேவாரம் பாடக்கூடக் குரல் எழும்ப மறுக்கிறது. இதனால் ஐம்புலன்கள், மனம், உடல் என எல்லாமே பாதிக்கப்படுகின்றன.

மீண்டும் மணிவாசகரின் வேண்டுதல்கள் பற்றிப் பார்ப்போமானால் அவர் குழைத்த பத்தில் "வேண்டத்தக்கது அறிவோய் நீ" என்னும் பாடலில்,

வேண்டும் பரிசொன்(று) உண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றே

என "நான் வேண்டும் வரம் ஒன்றிருக்குமானால் அது உந்தன் விருப்பமே" என்னும் பொருளில் பாடியுள்ளார். உந்தன் மேலுள்ள பக்தியையே வேண்டி நிற்கிறேன் என்று பொருள் கொள்ளலாம். முந்திய கட்டுரையொன்றிலே நாம் பார்த்த, நாவுக்கரசர் அருளிய "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்' என்ற அடிபோல் இதற்கும் வேறுவகையிலும் பொருள் காணலாம். இப்பாடல் முழுவதையும் ஓதி உணர்வோமானால் நமது வேண்டுதல் எப்படி அமைய வேண்டுமெனும் ஒரு பரிபூரண அறிவும் ஏற்படும். அடுத்த கட்டுரையில் அதனை இயன்றவரை பார்ப்போமா?

---

அறியாமல் பிழை செய்தவரைப் பொறுத்துக்கொள்வதே வீரமாகும்.

# 2010 ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| திருமதி பாலசுப்பிரமணியம் | லண்டன் | 17,500.00 |
| தியாகலிங்கம் திருக்குமார் | மட்டக்களப்பு | 50,000.00 |
| கு. யோகேந்திரன் | மல்லாகம் | 1,000.00 |
| மாசிலாமணி திருமாமணிகுடும்பம் | கொக்குவில் மேற்கு | 5,000.00 |
| சோ. ஸ்ரீஸ்கந்தராசா சரவணன் | இணுவில் (லண்டன்) | 5,000.00 |
| வேலுப்பிள்ளை இராசையா | வவுனியா | 1,000.00 |
| யோ. சுதர்சன் | கனடா | 5,000.00 |
| செல்லத்துரை இராஜகோபால் | இலக்கணாவத்தை | 2,000.00 |
| யோ. பிரியதர்சினி சோதிவைரவர் | கோவிலடி, இடைக்காடு | 3,000.00 |
| M. சிவகுமாரன் | தாளையடிலேன், திருநெல்வேலி | 500.00 |
| மா. சறோஜினிதேவி | வறாத்துப்பளை | 700.00 |
| ச. சாந்தகுமார் தருமகுலசிங்கம் | ச.ச.நி. வல்வெட்டி | 1,000.00 |
| ராசு கணேஸ் குடும்பத்தினர் | புத்தூர் மேற்கு | 5,000.00 |
| திருமதி. ந. பாக்கியம் | நீராவியடி யாழ்ப்பாணம் | 2,000.00 |
| க. நந்தகோபன் - அவுஸ்திரேலியா | சி. தருமலிங்கம் ஊடாக | 10,000.00 |
| செ. பாலசுப்பிரமணியம் குடும்பம் | மீசாலை | 2,000.00 |
| K. பாலேந்திரன் | லக்சுமி கிரேஷர் மண்டான் | 2,000.00 |
| சி. வல்லிபுரம் | தும்பளை | 1,000.00 |
| K. விஷ்ணுயோகன் | உரும்பிராய் | 5,000.00 |
| Dr. P.சிவபாலன் | | 1,000.00 |
| பொன்னையா வெற்றிவேல் குடும்பம் | பருத்தித்துறை | 5,000.00 |
| சி. சிவஞானசுந்தரம் | புதுக்குளம், வவுனியா | 500.00 |
| சோமகுலசேகரம் குமரன் | வல்வெட்டித்துறை | 5,000.00 |
| கதிரிப்பிள்ளை செல்வராசா | நெல்லியடி | 5,000.00 |
| S. சேந்தன் - கொழும்பு | | 5,000.00 |
| கிட்டிணசாமி - செல்லம்மா தங்கவேல் | உடுப்பிட்டி (கனடா) | 5,000.00 |
| இரத்தினம் மீனாட்சி குடும்பம் | உடுப்பிட்டி | 5,000.00 |
| பத்மநாதன் (நினைவு) | கொழும்பு | 5,000.00 |
| சி. தவநேசன் | கொழும்பு | 4,500.00 |
| சி. ஜீவரஞ்சன் | கனடா | 4,500.00 |

அபாயத்தை எதிர்க்கத் துணிந்து அச்சத்தை வெல்பவனே வீரன்.

| | | |
|---|---|---|
| சோமசீலன் ஷேரினி | கொக்குவில் | 1,000.00 |
| காசிநாதன் ஸ்ரீகாந்தன் | நீர்வேலி | 1,000.00 |
| கிருஷ்ணபிள்ளை ஊடாக திருமதி. கலாநிதி ஞானதாசன் (கனடா) | | 26,000.00 |
| திருமதி யுவராஜா | கொழும்பு | 10,000.00 |
| பெரியதம்பி குருபரன் ராஜினி | புலோலி தெற்கு | 15,000.00 |
| க. இலங்கநாதன் | கனடா | 2,000.00 |
| யோ. கேஸ்வன் | லண்டன் | 2,000.00 |
| சுபாஸ்கரன் திருஞானசுந்தரம் | லண்டன் | 1,000.00 |
| நடராசா கைலாயபிள்ளை | மூளாய் தெற்கு | 4,000.00 |
| அ.ம. சுந்தரலிங்கம் குடும்பம் | சாவகச்சேரி வடக்கு | 5,000.00 |
| குணச்சந்திரன் | கொழும்பு | 2,000.00 |
| யோகானந்தம் நினைவு | அச்சுவேலி | 5,000.00 |
| அ. பாலசுப்பிரமணியம் | சுவிஸ் | 1,500.00 |
| M. ருகான் | சுவிஸ் | 1,500.00 |
| த. சூரியகுமார் | கரணவாய், கரவெட்டி | 1,000.00 |
| சபாரெத்தினம் சீதாலெட்சுமி | நீர்வேலி மேற்கு | [illegible],000.00 |
| திருமதி ச. துரைராசா | மாதகல் | 15,000.00 |
| அஞ்சனா ரவீந்திரராஜா | கொழும்பு | 10,000.00 |
| சின்னத்துரை சோதிமுத்து | மகாத்மா வீதி | 1,000.00 |
| முகிலன் குடும்பம் | கொழும்பு | 3,000.00 |
| சிவராசா ஜெயரஞ்சன் | தவசிகுளம் - கொடிகாமம் | 10,000.00 |
| இராசரெத்தினம் ராசராகுலன் | சுன்னாகம் | 2,000.00 |
| T.R. ரெட்ணவேல் | அரசவீதி, உரும்பராய் | 1,000.00 |
| K. ரெட்ணேஸ்வரன் | மாவடி, வட்டுக்கோட்டை | 8,000.00 |
| சுதாகரன் குடும்பம் | பிரான்ஸ் | 10,000.00 |
| அ. குலேந்திரன் | ஆனைக்கோட்டை கனடா | 2,000.00 |
| ந. உதயகுமார் குமாரவேலு | கனடா | 2,000.00 |
| செ. நடராஜா குடும்பம் | கரவெட்டி | 5,000.00 |
| நக்கீரன் நவரெட்ணம் | ஊரெழு கிழக்கு | 5,000.00 |
| சிவானந்தமூர்த்தி | | 2,000.00 |
| திருமதி சிவலிங்கம் | கலட்டி | 500.00 |
| G. சந்துஜன் | கலட்டி | 1,000.00 |
| G. கஜானன் | கலட்டி | 1,000.00 |
| E. சிவராசா (இலங்கை வங்கி) | கொழும்பு | 10,000.00 |
| பி. அப்புத்துரை குடும்பம் | வயாவிளான் | 1,000.00 |

எண்ணங்களைச் செயலாக்கும் ஆற்றலே வெற்றியாக வளர்கிறது.

வாரியார் பக்கம் :



# "மையல்"

**- வாரியார் சுவாமிகள் -**

**வாழ்வைக்கண் டதனாலே**
**மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்**
**மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே!**

இந்தப் பாடல் வரிகள் நாயகி நாயக பாவத்தில் அமைந்தது. முருகவேள் அழகிய மயில் வாகனத்தின் மீது கோடி சந்திரப் பிர காசமாக எழுந்தருளி வந்த அற்புதக் காட்சியைக் கண்ட தலைவி அப்பரமநாயகன் மீது காமுற்று மயங்குகிறாள். தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட முருகனை நினைந்து நினைந்து உருகுகிறாள். அவன்மீது பித்தாகி நிற்கின்றாள். அவளுக்கு ஊணும் உறக்கமும் தவிர்கின்றன. உலகமெல்லாம் உறங்குகின்றன. ஆனால் அவளுக்கு விழிகள் மூடவில்லை.

*"விண்ணுறங்கும் மண்ணுறங்கும் வேறுளஎல் லாமுறங்கும்*
*கண்ணுறங்கேன் எம்மிறைவர் காதலால் பைங்கிளியே"*

- தாயுமானவர்

உடம்பிலே பசலையுண்டாகின்றது. உடல் மெலிகின்றது. அதனால், சங்கு வளையல்கள் கழன்று விடுகின்றன. பறவைகளைக் கண்டு தன் குறைகளைக் கூறி விம்முகின்றாள்.

*பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்*
*சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே"*

- திருஞானசம்பந்தர்

மயங்குகின்றாள்; தியங்குகின்றாள். அதனால், அவள் இப்போது பேதையென்று பேர் பெறுகின்றாள். அவள் உள்ளம் வெய்யிலைக் கண்ட வெண்ணெய் போல் உருகு கின்றது. காதலால் உள்ளங்கசிந்து கண்ணீர் பெருகுகின்றது. கருவி கரணங்கள் ஓய்ந்து விடுகின்றன. பிச்சியாகி நிற்கின்றாள். அந்தப் பிச்சுக்கு மருந்து மருத்துவர்களிடம் கிடையாது. விடாய் கொண்டான் தண்ணீரை நாடுவதைப் போல் தான் காதலித்த தலைவனுடைய கருணையை நாடுகின்றாள். அவள் விடாய் சிறிது தணியும் பொருட்டு, அவள் காதலித்த தலைவனுடைய நாமத்தை ஒருவர் கூறினார். இன்னும் ஒருவர் அவருடைய நிறம் குணம் இவைகளைக் கூறுகின்றார். ஒருவர் அவர் வசிக்கும் அருமை யான ஊரைக் கூறுகின்றார். இத்தனையுங் கேட்ட அவளுக்கு நெருப்பில் நெய்விட்டதைப் போல மேலும் மேலும் ஆராத காதல் அதிகரிக்கின்றது. அப்பதியையே நினைந்து நினைந்து பிச்சியாகின்றாள். தன்னைப் பெற்ற தாயையும் தந்தையையும் அன்றே நீத்தாள். தன்னையே மறந்து விடுகின்றாள். அங்கே, அவள் பேருங்கெட்டு விட்டது. இது அருட் காதல். இதன் பெருமை அளவிடற்கரியது. இதனை அப்பரடிகள் கூறுகின்றார்.

அன்பு எங்கிருக்கிறதோ, அங்கு பாசமும் பணிவும் அடைக்கலம்.

முன்னர் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!

இவ்வாறு, இறைவனிடம் காதல் கொண்ட ஆன்மாவுக்கு அக்காதல் நோயைத் தணிக்கும் மருந்து, இறைவனுடைய திருமார்பிலேயுள்ள மாலைதான். மாயை? போக்கும் மாலையை அருணகிரிநாதர் செந்தில் திருப்புகழில் இவ்வாறு பாடுகின்றார்.

"குளிர் மாலை யின்கண் அணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ"

இறைவனுடைய திருத்தோள்களைத் தழுவ வேண்டும் என்று வாடுகின்ற ஆன்மாவுக்கு அத்திருத்தோள்களில் தங்கியுள்ள மாலை மிகுந்த இன்பத்தைத் தரும்.

---



# மருதர்கதிர் காமர் அமுது உவந்தோனே

வலியசிறை மீட்க அமரர்
மனமுருகி வேண்ட பரம னருளானே
கனலில்கரு வாகி புனலில்
உருக்கொண்ட மூவி ருமுக முடையோனே
துயரமிக வான கலியில்
தருமமுறை யோடு இனிய உறவாக
மனிதருடன் வாழ வருளும்
மருதர்க்கதிர் காமர் அமுது உவந்தோனே

- பா. பாலச்சந்திரன்

---

ஆற்றல் உள்ள இடத்தில் அகம்பாவமும் தானே வந்து சேர்கிறது.

உ




- ஆசிரியர் வேல்.நந்தகுமார் (B.A. Hons) -

ஒரு தொன்மைச் சிறப்பு மிக்க வழிபாட்டு மரபுப்பண்பாட்டை கொண்டு விளங்கும் எமது வழிபாட்டில் ஆலயம்சார் பண்பாடும் வழிமுறைகளும் முதன்மை இடத்தினைப் பெறுகின்றன. ஆகமம் சார்ந்த இந்த ஆலய வழிபாட்டு மரபு வருவதற்கு முன்னரே 'நம்பிக்கை' என்ற அடிப்படையில் எம்மிடையே ஆகமம் சாராத ஒரு கிராமிய நிலைப் பட்ட வழிபாடு மிக எளிமையான, இயற்கையோடு இணைந்த ஒரு வழிபாட்டு மரபாக இருந்துள்ளதை இன்றும் எஞ்சியுள்ள எமது கிராமிய வழிபாட்டு நம்பிக்கைகளினூடாக வும், யாழ்ப்பாண மன்னர் காலத்தில் கிடைக்கும் இலக்கிய ஆதாரங்களுடாகவும், பிறநாட்டார் குறிப்புகள், அகழ்வாய்வுகள் கல்வெட்டு ஆதாரங்களின் அடிப்படையிலும் அறிய முடிகின்றது. வைரவ வழிபாடு, கண்ணகி வழிபாடு, நாச்சியார், அண்ணமார் வழிபாடு என இவ்வழிபாட்டின் வகைகளை தெய்வீக நிலைப்படுத்தி இனங்காண முடி கிறது. இக்கிராமிய வழிபாட்டினூடாக கிராமியப் பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள் தனித்துவங்கள் என்பனவும் பல்வேறுபட்ட கிராமியக் கலைகளும் வளர்த்தெடுக்கப் பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது. பொங்கல், மடை, நேர்த்திக்கடன், கரகம், காவடி, கற்பூரச்சட்டி என இவ்வழிபாட்டின் தனித்துவங்கள் இனங்காணப்படுகின்றன.

இவ்வாறிருந்த எமது ஆதி வழிபாட்டு முறைக்குள் சமண, பௌத்த மதநெறிகளின் எழுச்சியில் இருந்து அழிந்து கொண்டிருந்த சைவ, வைணவ மன்னர் களால் பல்லவர் காலத்தில் கல்லைக் குடைந்து கலைக் கோயில்கள் அமைக்கப்பட் டன. சிற்ப ஓவிய கலை வளர்ச்சியூடாக இறைவிக்கிரகங்களும் உருவாக்கப்பட்டன. இதனடியாகவே உருவவழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புமிக்க ஆகமம் சார் வழிபாட்டு முறைசார்ந்த ஆலயங்களும் தோற்றம் பெற்றன. இவ் ஆலயங்களில் எழுந்தருளியுள்ள இறைவனை மெய்தீண்டி பூசிக்கும் பூசகர்களாக அந்தணர்கள் சைவக்குருமார்கள் வடமொழிசார் மந்திரங்களைக் கற்றும் வர்ணாச்சிரம தர்ம கோட்பாடு, வடநாட்டு செல்வாக்கு, பிராமணிய எழுச்சி என்பவற்றினூடாக தோற்றம் பெற்றனர். நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் ஆலயங்கள் வழிபடப்பட்டு

அவற்றின் மீதான துதிப்பாடல்களாகப் பதிகங்களும் பாசுரங்களும் தோற்றம் பெற பக்தி ஒரு இயக்கமாகி மன்னர்கள், மக்கள், பெரியோர் என அனைவரும் தம்மிடம் உள்ள பேதங்களை மறந்து வைதீக பக்தியை வளர்த்தனர். பக்தியின் மொழி தமிழாகி பக்தி இலக்கியங்கள் பல தோன்றி இறை அனுபவ வெளிப்பாட்டிற்கும் வழிகாட்ட லுக்கும் துணை நின்றன நாயன்மார்கள், ஆழ்வார்கள், சமூக வாழ்வே ஒரு எடுத்துக் காட்டான பக்தி வாழ்வாக பரிமளித்தது. இவ்வாறு கலையும் நிலையும் சிலையும் இணைந்து பக்தி அலையை உருவாக்கின. இதனூடாக மிகப்பெரிய ஆலயங்கள் தோன்றி அதனூடாக அதனை மையப்படுத்திய வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், விரத விழாக்கள் ஆலயப்பண்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறானதொரு சமய நம்பிக்கைத் தேவையோடு எமது சமயச் சூழலில் தோற்றம் பெற்ற ஆலயங்களில் அதன் ஆரம்ப காலத்தில் இன்று இருப்பதைப் போன்ற நிதி, நிர்வாக அமைப்பு முறைகள் காணப்படவில்லை அத்துடன் ஆரம்ப காலத்தில் அவை இறைவழிபாட்டு நம்பிக்கைகளை வளர்த்ததோடு மட்டுமன்றி சமூகத்தின் நிலைக்களன் மாக விளங்கி பல சமூக, கலைப்பணிகளை ஆற்றியுள்ளதையும் அறியமுடிகின்றது. ஆனால் பிற்காலத்தில் ஆலயங்களின் சமூகப் பங்களிப்புகள் குறைவடைய அவை வெறும் ஆன்மாக்களின் லயத்திற்குரிய வழிபாட்டிடங்களாக மட்டுமே மாறின. இன்றைய சூழலில் எம்மிடையே நிறைய ஆலயங்கள் உள்ளன. அவ் ஆலயங்கள் பலவற்றிலே நிறைய நிதிவளமும் உள்ளது. ஆனால் அதனை அவை தாம் சார்ந்த சமூகத் தேவை களுக்காக பயன்படுத்துகின்றனவா என்பதும், இன்றைய ஆலயத்தில் நிலவுகின்ற ஒரு வகையான வணிகமயப்பட்ட சூழலும், தனிமனிதர்களை முதன்மைப்படுத்தும் ஆவணத் தன்மைகளும் எந்தளவிற்கு அவை சமூக அக்கரை உடைய அல்லது சமூகப் பண்பாட் டின் நிலைக்களன்களாக தொழிற்படுகின்றன என்பதைக் கேள்விக்குள்ளாக்கி வருகின்றன.

ஆரம்பத்தில் சிறு குடிசைகளாக கவனிப்பாரற்று சிறிய வழிபாட்டிடங்களாக இருந்து ஆலயங்கள் பின்னர் கட்டிட, வள விடயங்களில் பெரிதானபோது அதனை பராமரிக்க வேண்டியதொரு தேவை ஏற்பட ஆலய முகாமை என்ற அமைப்பு தோன்றி யது. பின்னர் அவ்வமைப்போடு ஆலயத்துள் அதிகமாக வரத் தொடங்கிய பணப்புழக்கம், திருப்பணி, அர்ச்சனை, அந்தணர் சன்மானம், திருவிழாக்கள், உபயங்கள் போன்ற பல மாற்றங்களால் ஆலயத்தினுள் ஒருவகை முகாமையோடும், பரிபாலனத்தோடும் இணைந்த நிர்வாகக் கூட்டமைப்பு தோற்றம் பெற்றது. ஆரம்பத்தில் இது ஆலயத்தின் குறைபாடுகள், பதவிப்போட்டிகள், ஊர்பேதங்கள் போன்ற பலவற்றால் ஆலயங்களுக் குள் பல பிரச்சனைகள் தோன்றி அவை ஆலய வழக்குகளாக நீதிமன்றம் வரை சென்று தீர்க்கப்படாமல் தொடர்வதையும் காணமுடிகின்றது. ஆலயத்துள் நின்றவாறு நான் எனது என்றும் என்ரை கோயில், எங்கட திருவிழா என்றும் சிந்திக்கும் போதே அடிமுடி தேடியும் கண்டடைய முடியாத கடவுள் காணாமற் போய்விடுகின்றார். ஆலய வாசலில் பிச்சைக்காரன் கையேந்தி நிற்க கற்பூரமும் அர்ச்சனைத் தட்டமும், கொண்டு அர்ச் சனைப் பற்றுச்சீட்டுடன் அர்ச்சனை செய்யும் போதே ஏழையின் சிரிப்பில் இறைவனைக்

மோட்சத்தை அடைய நல்வழியை நாடி நில்.

காணலாம் என்பது பொய்த்துப் போய்விடுகின்றது. இவ்வாறு இன்றைய எமது ஆலய நடைமுறைகளுக்குள் பல்வேறுபட்ட குறைபாடுகளை, குருட்டுத்தனமான பின்பற்றல்களை எம்மால் அவதானிக்க முடிகிறது.

ஒரு சில காலத்தில் சில சமூகப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் ஆலயங்களுக்குள் நுழைவதே தவறு என்று தடுக்கப்பட்டிருந்தது. இன்று அந்நிலை குறைவு. அதுவே சமூகம்சார், ஊர்சார் கோயில்கள் தோன்றக் காரணமாயிற்று. எமது சூழலை நோக்கினால் எத்தனையோ மக்கள் எத்தனையோ வகைப்பட்ட சொல்லமுடியாத வசதியில்லாத பிள்ளைகள், முதிர் வயதில் பராமரிப்பை இழந்த பெற்றோர்கள், சாப்பிட வசதியில்லாத வறியவர், இயற்கைப் பேரழிவுகளால் பாதிக்கப்படுவோர், இடம்பெயர்ந்து அல்லற்படும் அகதிகள், தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள், இப்படி எத்தனையோ தேவையுடையோர் கடவுளின் உயிர்களாக ஆன்மாவாக எம்மை சூழ இருக்க, இங்கிருக்கின்ற எத்தனை சைவ ஆலயங்கள், ஆலயம்சார் அமைப்புக்கள் இவற்றுக்கு உதவுகின்றன..

அந்த ஆலயங்கள் தாம் வைத்திருக்கும் பெருந்தொகையான நிதியிலே வருடா வருடம் ஒரு சிறு தொகையையாவது இத்தகைய சமூக அவலங்களைப் போக்கும் பணிகளுக்காக ஏன் செலவழிக்கக்கூடாது. இதை விடுத்து தேவையற்ற ஆடம்பரமான ஆலயத்திருப்பணிகளுக்கும், திருவிழாவுக்கும் ஏனையவற்றை முடக்கியும் ஏன் வைத்திருக்க வேண்டும். இந்த இடத்தில்தான் இன்றைய எமது சைவ ஆலயங்கள் தமது சமூகப் பணிகளில் இருந்து தாம் சார்ந்த சமூக அக்கறையில் இருந்து விலகி நடக்கின்றனவா? இந்தப் போக்கு ஆரோக்கியமானதா என்ற கேள்வி எம்முன் எழுகிறது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதுதான் எம் சமய நோக்கு இது ஏன் புரியாமற் போனது. இந்த இடத்தில் கிறிஸ்தவ சமய நிறுவனங்கள் சமயப் பெரியோர்கள், சாயி சமித்தியைச் சேர்ந்தவர்கள் செய்கின்ற தொண்டினை நாம் போற்றித்தான் ஆகவேண்டும்.

வேறெங்கும் உண்மைகள் தேடத் தேவையில்லை அண்மையில் யாழ். குடா நாட்டைத் தாக்கி சேதப்படுத்திய "நிஷா" சூறாவளி அனர்த்தத்தின் போது தமது வீடு வாசல் இழந்து மிகவும் கஷ்டப்பட்ட அந்த மக்களின் துயர் துடைக்க எத்தனை சைவ ஆலயங்கள் முன்வந்தன. ஆனால் அப்போது யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ தேவா லயங்களும், அமைப்புகளும் குரு முதல்வர்களும், பங்குத் தந்தையரும் ஆற்றிய பணிகளை மதம் கடந்த மனிதநேயப் பணிகளை யாரும் மறக்கமுடியாது. எனவே எமது சமயத்தின் சமூகத் தளம் மிகவும் வளம் இருந்தும் பலவீனப்பட்டுப் போய் இருப்பதையே இது காட்டுகின்றது. இந்நிலையில் மாற்றம் வேண்டும் அப்போதுதான் சமூகத்தின் வலிமை யான நம்பிக்கைக்குரிய மரியாதைக்குரிய ஒன்றாக எமது சமயம் மாறமுடியும். அது வரையிலும் வெறும் சடங்குகளுக்குள்ளும், வழிபாட்டு, மந்திரங்களுக்குள்ளுமே அது வாழமுடியும்.

காலத்திற்கு காலம் எமது சமய வரலாற்றில் தோன்றிய பல சீர்திருத்த சிந்தனை வாதிகளும் இதனையே வலியுறுத்தி எமது வழிபாட்டு மரபுகளில், ஆலய வழிபாட்டு நடைமுறைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளபோதும் கூட இன்றைய

சூழலில் எமது ஆலயங்களின் சமூகப் பணிகளின் கனதி என்பது சமூகத்தின் தேவைகளோடும் அவலங்களோடும் ஒப்பிடும்போது மிகவும் போதாமையுடையனவாகவே விளங்குகின்றது. தயானந்த சரஸ்வதி, ராமகிருஸ்ணர், விவேகானந்தர், ஆறுமுகநாவலர், கதிரைவேற்பிள்ளை, தங்கம்மா அப்பாக்குட்டி என்ற பல சமய சீர்திருத்தவாதிகள் காலத்திற்கு காலம் தோன்றி எமது சமயத்தினை நெறிப்படுத்தி பல மாற்றங்களைச் செய்தனர் என்பதை நாம் மறுக்கமுடியாது. ஆயினும், அவர்களின் கனவுகளில் பல இன்னமும் செய்யப்படவில்லை என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

இக்கட்டுரையின் நோக்கு இன்றுள்ள ஆலய அமைப்பு முறையை முற்று முழுதாய்க் குற்றஞ்சாட்டுவதோ, அவை எதுவும் தேவையில்லை என்று சிந்திப்பதோ, அவை எதுவுமே செய்யவில்லை என்று கூறுவதோ அல்ல. அந்த அமைப்பு முறைமை சமூகமயமாக்கப்பட்டு இன்னமும் சிறப்பிக்கப்பட வேண்டும் என்பதனை சிந்திப்பதே ஆகும். இந்த வகையில் பலரும் பல மாற்றங்களைப்பெற்று பல பணிகள் ஆற்ற வேண்டியது அவசியமாகின்றது. குற்றச்சாட்டுகளைத் தவிர்த்து எல்லாரும் ஒன்றிணைவதன் மூலமே இது சாத்தியமாகும்.

ஆலயத்தில் பூசை செய்யும் பூசகர்கள் இது விடயத்தில் தமக்குள் ஒன்றுபட்டு முன்னுதாரணமானவர்களாக விளங்க வேண்டியது அவசியமாகும். ஆலயத் திருவிழாக்களில் அதிகரித்து வருகின்ற வணிகமயச்சூழல், பக்திக்கு புறம்பான செயற்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும். ஆலயத் திருவிழாக்களில் இடம்பெறும் பண்பாட்டு சீரழிவுகள், திருட்டுகள், கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆலய பரிபாலன சபைகள் சமூகத்தின் அனைவரையும் பிரதிபலிக்கின்ற வகையில் அமைக்கப்பட வேண்டும் அத்துடன் அவை சமூகத் தேவைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடிச் சூழலில் எம்மிடம் உள்ள மிகவும் பலம்பொருந்திய சுதந்திரமான நிதி நிறுவனங்களாக ஆலயங்களே விளங்குகின்றன. எனவே அவை சமூகத்தின் அவலங்களைத் துடைக்கவும், எமது பண்பாட்டு விழுமியங்களைக் காக்கவும் மாறிவரும் புதிய உலக சவால்களுக்கு முகம் கொடுத்து வாழும் ஆற்றல்களை, நம்பிக்கைகளை வளர்க்கவும், மதங்கடந்த மனிதநேய மனித ஒருமைப்பாட்டுச் சிந்தனையை உருவாக்கவும் பாடுபட வேண்டும். அத்துடன் புராணபடனம், பண்ணிசை, கிராமியக் கலைகள் அருகிவரும் வழிபாட்டுமுறைகள் போன்றவற்றை அழியவிடாது மீட்டெடுத்து அடுத்த தலைமுறையிடம் கையளிக்கும் முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும்.

இன்று எல்லாமே ஏதோ ஒரு வகையான அரசியலுக்குள் சிக்கித்தவித்து சீரழிந்து கொண்டிருக்கின்ற வேளையில் மனிதத்துவத்தின் மாண்பை நிலைநிறுத்தும் கடைசி நம்பிக்கையாக சுதந்திரவெளியாக விளங்குகின்ற ஆலயங்களும் அதற்கு பலியாகாமல் செயற்பட வேண்டியது அவசியமாகும். இன்றைய சூழலில் மடங்கள் மூலம் விருந்தோம்பல் என்ற வகையில் ஆலயங்கள் பல ஆற்றிவரும் பணிகள் போற்றுதற்குரியன. ஆயினும் இதனையும் கடந்து ஆற்றவேண்டிய பல சமூகப் பணிகள் இன்னமும் நிறையவே உள்ளன. ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு, கல்விப்பணி, சமய இலக்கியப்

அன்புள்ள குணம் அலையில்லாத நதி.

பரவலாக்கம் சமூகசமத்துவ உருவாக்கம், பேதங்களை மறந்து ஒன்றிணைவு, சமூக சீர்குலைவைத் தடுத்தல், அறக்கட்டளை உருவாக்கி ஏழைகளுக்கு உதவுதல் எனப் பலவற்றைக் கூறலாம். இது விடயத்தில் எமது சூழலில் இன்று துர்க்காதுரந்தரியின் கனவுக் கோயிலான தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தை - அதை நெறிப்படுத்திய துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியின் சிந்தனைகளை - முன்னுதாரணமாகக் குறிப்பிடலாம். இது பற்றிய சிந்தனைகள் இதற்காகப் பாடுபடும் நபர்கள், அமைப்புகள் எம்மிடம் இல்லாமல் இல்லை ஆயினும் இவை ஒன்றிணைக்கப்பட்டு வலிமையாக்கப்பட வேண்டும். ஆலய நடைமுறைகளில் அவசியமான மாற்றங்களை ஏற்றுச் செயற்படும் மனமாற்ற முள்ள மனிதர்கள் வேண்டும். பக்தியின் பெயரால் நிகழும் மூடத்தனங்கள் களையப்பட்டு சமூக அறிவியல் நோக்கில் ஆலயமும் வழிபாடுகளும் மாற்றம் பெறவேண்டும்.

இந்த வகையில் எமது சூழலில் மரியாதைக்குரிய மோகன் சுவாமி அவர்களினால் சந்நிதியான் அருள்கொண்டு செயற்படுத்தப்பட்டு வரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகளும், அன்னதானம் வழங்கி அடியவர் பசிபோக்கி ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதுவும், வறுமைப்பட்டோருக்கான உதவிகள், கல்வி உதவிகள், முதியோர் உதவி, வைத்திய உதவி, சமயநூல் வெளியீடு, கலை இலக்கிய நிகழ்வுகள் எனப்பரந்துபட்டதொரு சமூகதலத்தில் நின்றவாறு எமது சமயத்தையும் பண்பாட்டையும் வளர்த்தெடுத்து அதனூடாக எமது சமூக வாழ்வை மேம்படுத்துவதில் அரும்பணியாற்றி வருவதை நாம் கண்ணூடாக கண்டு வருகின்றோம் இந்த விளிப்பு நிலை பரவலாக்கப்பட்டு எல்லாச்சமய அமைப்புக்களும் ஆலய அமைப்புக்களும் இவ்வாறான சமூக நலன்சார் விடயங்களை தமது நிதியில் செய்ய முன்வரவேண்டும். மனமுண்டானால் இடமுண்டு என்பதற்கு சந்நிதியான் ஆச்சிரமமும் அதன் சேவைகளும் சான்றாகின்றன.

அண்மைக்காலமாக எமது ஆயலத்திருவிழாக்களில் அதிகளவான நகைகள் களவுபோதல் பண்பாட்டுச்சீரழிவுகள் என்பன அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது. இது, சமயம் மனிதனை தெய்வமாக்கத்தவறி அவனை மிருகமாக்கவே வழி செய்துள்ளது என்ற தவறான கண்ணோட்டத்தையே தருகின்றது. நாம் எமது சமய ஒழுக்கங்களை ஏனோதானோ என்றில்லாமல் விதிமுறையோடும் கட்டுப்பாட்டோடும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும் அத்துடன் ஆலயத்திருவிழாக்களில் தேவையற்ற போட்டித் தன்மைகொண்ட ஆடம்பரச்செலவுகளைக் குறைத்து அவ்வாறு சேரும் பெருந்தொகைப் பணத்தை இருப்பிடமிழந்து - தொடங்கும் வாழ்வின் வலிகளை சுமந்து வாழும் எமது சகோதரர்களின் துயர் துடைக்க பயன்படுத்துவதே உண்மையான இறையருளாகும். எனவே, எமது ஆலய வழிபாட்டு அமைப்பு முறைகள் அதன் சமூக பங்களிப்புக் கருதியதாக மீளமைப்பு செய்யப்பட்டு புதிய காலத்திற்கு ஏற்ற வகையில் சிற்சில நெகிழ்வுத் தன்மைகளின் ஊடாகவும் புதிய முறையில் வளர்த்தெடுக்கப்படவேண்டியது அவசியமாகும். பல்வேறுபட்ட எமது தனித்துவ அடையாளங்களை இழந்துவரும் நாம் எமது சமயவழிபாட்டின் ஊடாக எமது பண்பாட்டு வாழ்வியலை மேம்படுத்தப்

---

**இறைவனை மையமாகக்கொண்டு வாழும்வாழ்க்கை அர்த்தமுடையது.**

உ




## 02. நல்லார் விருந்து

சோழ நாட்டு எல்லைக்குள் அடங்கிய திங்களூர் என்ற ஓர் ஊரில் அப்பூதி அடிகள் என்பவர் வாழ்ந்து வந்தார்.

அவர் செல்வ வளங்கள் நிறைந்தவராகவும், பல தருமப்பணிகள் புரிபவராகவும் விளங்கினார்.

திருநாவுக்கரசர் என்ற சைவப் பெரியார் முதலில் 'மருள் நீக்கியார்' எனும் பெயருடன் விளங்கி, சமணர்கள் சூழ்ச்சியால் சமண மதத்தில் சேர்ந்து, பின்பு 'தருமசேனர்' என்ற பெயருடன் வாழ்ந்து வந்ததை அவரது சகோதரி 'திலகவதி' என்பவர் கண்டு மனம் வருந்தி சிவபெருமானிடம் முறையிட, தருமசேனருக்கு 'சூலைநோய்' எனும் வயிற்று வலி உண்டாகி, சமணர்களால் அந்நோய் தீர்க்க இயலாமையால், சகோதரி திலகவதியார் அவரை சிவபெருமானிடம் அழைத்துச்சென்று, வணங்கி திருநீறு அணிவித்தவுடன் அந்நோய் நீங்கப்பெற்று சைவ மதத்தைத் தழுவியதால், சமணர்களால் பல துன்பங்களுக்கு ஆளாகி இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டு சைவ சமயம் தழைக்க பாடுபடுபவர் என்பதை அப்பூதியடிகள் அறிந்து அவர்பால் அளவிலா அன்பு பாராட்டி வந்தார்.

தமது செல்வங்கள், அறச்சாலைகள், குழந்தைகள் மற்றும் எல்லா உடைமைகளுக்கும் 'திருநாவுக்கரசு' என்ற திருப்பெயரே விளங்குமாறு செய்தார் அப்பூதி அடிகள்.

ஒருநாள் திருநாவுக்கரசர் திங்களூர் வந்தார். அங்குள்ள தண்ணீர்ப்பந்தல், அன்னதான சத்திரம், தரும சாலைகள், கல்விச்சாலைகள் யாவும் திருநாவுக்கரசு என்கிற தனது பெயரில் இருப்பதைக் கண்டு வியப்படைந்தார்.

இங்ஙனம் இச்செயல் புரிபவர் யார் என்று திருநாவுக்கரசர் கேட்க, அப்பூதி அடிகளின் இல்லத்தைக் காட்டினர் அங்குள்ளோர்.

சிவனடியார் தமது இல்லத்தை நோக்கி வருவதைக்கண்டு அப்பூதி அடிகள் அப்பெரியவரை வீட்டிலிருந்து வெளியே வந்து வணங்கி வரவேற்றார்.

"உமது அறச் செயல்களுக்கும் உடமைகளுக்கும் தங்கள் பெயரை இடாமல் வேறு எவரோ ஒருவருடைய பெயரான திருநாவுக்கரசு என்ற பெயரை ஏன் வைத்தீர்கள்?" என்றார்.

---


தத்துவங்களுக்குச் சிகரமாக, வேத முடிவாக இருப்பது உபநிஷத்துக்கள்.

"சிவவேடம் தாங்கிய பெரியவரே, தாங்கள் திருநாவுக்கரசரின் அருட்திறம் அறியாதவர் போல் தெரிகிறது. அதனால்த்தான் இவ்வாறு உரைக்கின்றீர்" என்று சினம் வெளிப்படப் பேசினார் அப்பூதி அடிகள்.

"தாங்கள் கூறும் திருநாவுக்கரசு அடியேன் தான்" என்றார் இல்லம் வந்த நல்லார்.

அப்பூதி அடிகள் திகைப்புடன் தான் செய்த தவறைப் பொருத்தருளுமாறு வேண்டினார்.

நாவுக்கரசர் அருட்புன்னகையோடு அப்பூதி அடிகளுக்கு திருநீறு அளித்தார்.



தமது இல்லத்தாரை அழைத்து நாவுக்கரசரை அப்பூதியார் வணங்கச் செய்தார்.

தமது இல்லத்தில் தங்கி விருந்து அருந்திச் செல்ல வேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொண்டார்.

அன்பின் வேண்டுகோளை ஏற்று அப்பூதி அடிகளின் இல்லத்தில் உணவு உட்கொள்ள சம்மதித்து "நான் சிவனை தரிசனம் செய்துவிட்டு வருகிறேன். தாங்கள் விரும்பியபடி ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்று கூறி வழிபாடு செய்ய கோயிலுக்குக் கிளம்பினார் நாவுக்கரசர்.

மகிழ்ச்சியோடு அன்பின் சுவை கூட்டி பக்தியின் நேர்த்தியோடு உணவு வகைகளை அப்பூதியாரின் குடும்பத்தார் தயார் செய்யத் துவங்கினர்.

இறைவனடியார் நமது இல்லத்தில் உணவு உண்ண இருப்பது இறைவனே உணவு அருந்துவதற்கு சமமாகும். இந்த அரிய வாய்ப்பு நமக்குக் கிடைப்பது முற்பிறவியில் செய்த புண்ணியமே என்று மகிழ்ந்தனர்.

அப்பூதியாரின் துணைவியார் வாழை இலை பறித்துத் தருமாறு தன் மூத்த மகன் திருநாவுக்கரசுக்குக் கூற, இந்த அருந்தொண்டு புரிய ஆனந்தமாய் தோட்டம் நோக்கி விரைந்தான் அவன்.

அங்கே வாழை மரத்தில் விஷப் பாம்பு ஒன்று மரத்தை சுற்றிக்கொண்டு இருந்தது.

நல்ல இலையாக எடுக்க வேண்டும் என்று விரும்பி திருநாவுக்கரசு என்ற அப்பூதியாரின் மூத்த மகன் ஒவ்வொரு இலையாக ஆராய்ந்தான்.

___அழகான வாழைக் குருத்தை அரியப்புகும்போது ஒரு பாம்பு தீண்ட அதைப்

உனக்கு மனஅமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே.

பொருட்படுத்தாது வாழைக்குருத்தை அரிந்துகொண்டு வீடு வந்து சேர்ந்தான். பாம்பு விஷம் உடலில் ஏறி உயிர் துறப்பதற்குள் இலைபறித்து தந்துவிட வேண்டும் என்று இலையுடன் விரைந்து ஓடி இலையை தன் பெற்றோரிடம் கொடுத்து உடலில் நஞ்சு பரவ மயங்கி விழுந்து உயிர் நீத்தான்.

நடந்தவற்றை அப்பூதியாரும் அவர் துணைவியாரும் அறிந்து இத்துயர நிகழ்வு அடிகளாருக்கு விருந்து படைப்பதற்குத் தடையாக அமைந்துவிடுமே என்று எண்ணி தனது மகனை பாயில் சுருட்டி ஏதும் நிகழாததைப் போல் மறைத்துவிட முடிவு செய்தனர்.

திருநாவுக்கரசர் வழிபாடு முடித்து ஆலயத்தில் இருந்து அப்பூதியார் வீட்டிற்கு வந்தார்.

"ஐயனே வாருங்கள்! காலம் தாழ்ந்துகொண்டு இருக்கிறது. எனவே, தாங்கள் பொழுதில் வந்து அமுது கொள்ளுங்கள்" என்று இருவரும் கூற,

திருநாவுக்கரசர் தனது கை, கால்களை நீரால் தூய்மை செய்து திருநீறு இட்டு இருக்கையில் அமர்ந்தார்.

விருந்திற்கு முன்பு அனைவருக்கும் அருள் திருநீறு அளிக்க விரும்பி அப்பூதியார்க்கும் துணைவியாருக்கும் வழங்கி "உங்கள் மூத்த மகன் திருநாவுக்கரசு எங்கே? எனக் கேட்டார்.

அப்பூதியார் என்ன சொல்வது என்று தெரியாமல் தவித்தபடி "அவன் இப்பொழுது உதவ மாட்டான்" என்று கூறி நிறுத்தினார்.

"உதவான் என்றால் என்ன செயல் செய்தான்" என்று திருநாவுக்கரசர் கேட்க, அதற்கு மேலும் அப்பூதியார் சைவப் பெரியாரிடம் உண்மையை மறைக்க விரும்பாமல் பாம்பு கடித்து உயிர் துறந்ததைச் சொன்னார்.

அதுகேட்டு அதிர்ச்சி அடைந்த சிவனடியார் அவனைக் கோயிலுக்குக் கொண்டு வாருங்கள் என்று சொல்லி கோயிலின் சிவலிங்கத்தின் முன்பு அவன் உடலை வைத்து இறைவனை நினைத்து பாம்பின் விஷம் நீங்க பத்துப் பாடல்களைப் பாடினார்.

இறைவன் அருளால் கடித்த பாம்பே கோயிலுக்கு வந்து விஷத்தை எடுத்ததும் சிறுவன் தூங்கி எழுபவன் போல் எழுந்து வந்தான்.

இந்நிகழ்ச்சி அடிகளார் அமுது அருந்துவதை தடைசெய்துவிட்டதே என்று நினைத்து அப்பூதியாரும் அவர் துணைவியாரும் வருத்தமடைந்தனர்.

அப்பூதியாரின் உள்ளக் கருத்தறிந்து சில நாட்கள் அவருடன் தங்கி அமுது உட்கொண்டு அருளாசி வழங்கி பின்பு தனது சமயத் தொண்டு சிறக்க திங்களூரில் இருந்து வேறு திருக்கோயில் செல்லக் கிளம்பினார் திருநாவுக்கரசர்.

நல்லார்க்கு விருந்து அளித்ததால் இறந்த மகன் திரும்ப உயிர்பெற்று சிவத்தொண்டு புரிந்தமையால் தில்லை நடராஜப் பெருமானின் ஆசி பெற்று அப்பூதியாரும் அவர் குடும்பத்தினரும் அருட்பேறு பெற்றனர்.

உடலால் மற்றவர்களுக்குக் கைங்கரியம் செய்வது பெரிய புண்ணியம்.

# படங்கள் தரும் பதிவுகள்



27.06.2010 வாசகர் கௌரவிப்பு நிகழ்வில்...



வாழ்க்கைக்குத் துணையாக இருந்து திருத்த வல்லவர்களே நண்பர்கள்.



# வாசகர் கௌரவிப்பு நிகழ்வில்...



ஆசைகள் வளர வளர தேவைகளும் வளர்ந்துகொண்டே போகும்.



# வாசகர் கௌரவிப்பு நிகழ்வில்...



மோசம் செய்யாத நண்பன் புத்தகம் மட்டுமே.



# வாசகர் கௌரவிப்பு நிகழ்வில்...



நாட்டில் மழைவளம் சுருங்கினால் தான தர்மங்களும் சுருங்கும்.

உ

# தினம் தினம் ஆனந்தமே....

– சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள் –



## ஆனந்தம் இப்போதே... இங்கேயே...

ஒரு இடத்தில் மூன்று பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அந்த வழியாகச் சென்ற வழிப் போக்கர் ஒருவர், அந்த மூவரில் ஒருவரைப் பார்த்து இப்படிக் கேட்டார்.

"இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

அதற்கு அவன், "உனக்கு கண் பார்வை கிடையாதா என்ன? பார்த்தால் தெரியவில்லை... கல்லை செதுக்கிக் கொண்டிருக்கிறேன்" என்று எரிச்சலோடு பதில் கூறினான்.

அந்த வழிப்போக்கர். இரண்டாம் நபரிடமும் இதே கேள்வியைக் கேட்டார். அதற்கு அவன், "என் வயிற்றுப் பிழைப்புக்காக என்னவோ செய்து கொண்டிருக்கிறேன்..." என்று கூறினான்.

மூன்றாம் நபரிடமும் இதே கேள்வியைக் கேட்டார். வழிப்போக்கர், கேட்டதுதான் தாமதம்... ஆனந்தமாகக் குதித்துக்கொண்டே அவன், "இங்கு ஒரு அற்புதமான கோவிலைக் கட்டிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினான்.

மூவரும் ஒரே வேலையைத்தான் செய்து கொண்டிருந்தார்கள். ஒருவனுடைய அனுபவத்தில் அது வெறும் கல்லை வெட்டும் வேலைதான். இன்னொருவனுக்கோ அது வயிற்றை நிரப்புவதற்கான ஏதோ ஒரு வேலை என்பதைத் தாண்டி எதுவுமில்லை; மற்றொருவனுடைய அனுபவம், அற்புதமான கோவிலை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது!

---

அறவழியில் வராத செல்வம் தேய்ந்துவிடும்.

## வாழ்க்கைத் தரம் மாற வேண்டும்

ஆக, உங்கள் வாழ்வின் தரத்தை மாற்ற வேண்டும் என்றால், நீங்கள் செய்யும் செயலை மாற்றத்தேவையில்லை. அதை எப்படிச் செய்கிறீர்கள்; எந்தக் கண்ணோட்டத்தில் செய்கிறீர்கள் என்பதை மாற்றினாலே போதும். எதையும் எதிர்பார்த்து செயற்படாதீர்கள்; எதிலும் ஆதாயக் கணக்குப் போட்டுக் கொண்டு இருக்காதீர்கள்.

இப்படிச் சொல்வதன் மூலம் உங்களைப் பிச்சைக்காரர்கள் போல தெருவில் அலைய விடும் உத்தேசம் எனக்கு இல்லை. எப்படிச் செய்கிறோம் என்பதில்த்தான் மாற்றம் வேண்டுமே தவிர செய்யும் வேலையை மாற்றுவது பற்றி நாம் பேசவில்லை. அப்படியே இதை மாற்றினாலும் ஒன்றும் பயனில்லை. அதனால் எந்த மாற்றமும் நிகழப் போவது இல்லை.

நீங்கள் அணியும் உடைகளை மாற்றுவதாலோ, உண்ணும் உணவை மாற்றுவதாலோ, வழிபடும் இடத்தை மாற்றுவதாலோ, உங்கள் வாழ்வின் தரம் மாறப்போவதில்லை.

உங்கள் வீட்டில் இருந்து நீங்கள் ஆசிரமத்திற்கே வந்துவிட்டால்கூட உங்கள் பிரச்சினைகள் இன்னும் அதிகமாகத்தான் ஆகும். வீட்டில் இருக்கும் நாலு பேருடனே உங்களுக்கு பிரச்சினை வருகிறது என்றால், ஆயிரம் மனிதர்கள் புடைசூழ இருக்கும் இடத்தில் எத்தனை பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கும்?

## வேலை செய்யும் இடத்தில்....

உங்கள் அலுவலகத்திற்கு நீங்கள் செல்லும்போது, 'இங்கே நடக்கும் வேலைகளில் என்னுடைய பங்களிப்பை முழுமையாக அளிக்கப் போகிறேன்' என்று, உன்னதமான உணர்வோடு வேலை செய்யலாம். நீங்கள் இப்படி செயற்பட்டால் உங்களுக்கு சம்பளம் தரமாட்டார்களா என்ன? கட்டாயம் எப்போதும் போலவே உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

ஆனால் மாதம் முழுவதுமே 'சம்பளம்! சம்பளம்! சம்பளம்!' என்பதைப் பற்றியே நினைத்துக்கொண்டு துயரமாக இருந்துவிட்டால், அந்த ஒரு நாளில் - சம்பளம் வாங்கும் அந்த நாளிலும்கூட, அது உங்களுக்குப் போதாததாகிவிடும். உங்கள் சம்பளம் ஒருபடி அதிகரிக்கும்போது, அதைவிட இரண்டு மடங்கு அதிகமாக உங்கள் வாழ்க்கைத் தேவைகளை நீங்கள் அதிகரித்து இருப்பீர்கள்.

ஆக, நீங்கள் எதைச் செய்கிறீர்கள். அல்லது எதைச் செய்யவில்லைஎன்பதைப் பற்றி கேள்வியே இல்லை. உங்கள் வாழ்வு எப்படி மாறப்போகிறது என்பதைப் பற்றித்தான், மாற்ற வேண்டியது சூழ்நிலைகளை அல்ல; மாற வேண்டியது உங்கள் அணுகுமுறைதான்.

## யாருமே சாமானியர்கள் அல்ல

உங்களுக்கும், உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கும் துயரத்தை உண்டாக்குவதிலும், துன்பப்படுவதிலும் நீங்கள் ஒவ்வொருவருமே நிபுணர்கள்தான். நகரத்தின் தலைமைச் செயலாளர் ஆகும் தகுதி உங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. துன்பப்படுவதிலும், துன்புறுத்திக் கொள்வதிலும் உங்களிடம் நகரத்தின் நிர்வாகிகள் எல்லாம் தோற்றுவிடுவார்கள். உங்களை மிஞ்ச இதில் ஆளே இல்லை.

தியானம் செய்வதால் மனம் உறுதியடைகிறது.

உங்கள் வாழ்க்கையையே துயரத்தில் முதலீடு செய்திருக்கிறீர்கள். இதை முதலில் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இது மிகவும் முட்டாள்தனமான ஒன்று. புத்தி செயற்பட்டுக் கொண்டிருந்தால், இயல்பாகவே உங்கள் வாழ்க்கையை நோக்கித்தான் முதலீடு செய்வீர்கள்; துயரத்தை நோக்கி அல்ல. துயரம் என்பதே நீங்கள் உருவாக்கிய ஒன்றுதான்.

ஆனந்தம் என்பது உங்கள் உருவாக்கம் அல்ல; அது படைப்பின் சாரம். நீங்கள் முட்டாள்தனமாக துயரத்தை உருவாக்காமல் இருந்தாலே போதும்; அதன் பிறகு ஆனந்தம்தான் ஒரே வழி.

துயரத்தைத்தான் நிர்வகிக்க வேண்டும். ஆனந்தத்தை யாரும் நிர்வகிக்கத் தேவையில்லை. அதனால்த்தான் சொர்க்கத்தில் நிர்வாகிகள் யாருமே கிடையாது. எல்லோரும் குழப்பிக்கொள்ளாமல் இருந்தாலே போதும். நீங்கள் ஆனந்தமாக இருக்கலாம்.

(ஆனந்தம் இன்னும் வரும்)

# தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய

# வருடாந்த உற்சவ கால நிகழ்வுகள்

**கொடியேற்றம் : 10.08.2010 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி**

**காலைத் திருவிழா ஆரம்பம் : 13.08.2010 வெள்ளிக்கிழமை**

**பூங்காவனம் 10ஆம் திருவிழா : 18.08.2010 புதன்கிழமை**

**சப்பறத் திருவிழா : 22.08.2010 ஞாயிற்றுக்கிழமை**

**தேர்த்திருவிழா : 23.08.2010 திங்கட்கிழமை காலை 8.00 மணி**

**தீர்த்தத்திருவிழா : 24.08.2010 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி**

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொள்ளும் சகல பணிகளுக்கும் மூலகாரணமாக அமைவது நித்திய அன்னப்பணியே ஆகும். அந்த வகையில் ஆச்சிரமப் பணிகளின் வரிசையில் பல வகையில் ஆதரவு நல்கும் அன்பர்கள், அடியார்களுக்கு சந்நிதி வேலவனது பூரண அருள் கிடைக்கவேண்டும் என பிரார்த்தித்து, வழமையான ஆதரவை நல்கி உற்சவ காலத்தில் நடைபெறும் அன்னப்பணிக்கு தங்கள் ஆதரவை வழங்குமாறு வேண்டுகின்றோம்.

சுடம்

சந்நிதியான் ஆச்சிரமம்

உ

# கஜேந்திர மோட்சம்

- திருமதி. சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் -

"அழைத்தவர் குரலுக்கு வருவேன்" என்றார் கீதையிலே கண்ணன்.

அருளே உருவானவன் அச்சுதன். எல்லா ஜீவராசிகளிடமும் அன்பு கொண்டவர். கன்றின் குரல் கேட்ட தாய்ப் பசுவைப் போன்று, பக்தன் குரல் கேட்டதும், பரிந்தருளும் பரந்தாமன் கருடவாகனத்தில் விரைந்து வந்து அருள் புரிவான். பகவான் இனமத பேதங்களற்றவர். ஸ்ரீ ராமன், சபரி, அரக்கனான விபீஷணன், படகோட்டியாகிய குகன், வானரமாகிய அனுமான் எல்லோருக்கும் அருள் புரிந்தவர். வெண்ணெய் உண்ட கண்ணன் அடியவர்க்கெளியவன், தொண்டர்க்கினியவன், தேவர் துயர் தீர்த்த தூயவன், குசேலருக்கருளிய குணக்குன்று, தரணி காக்கும் தலைவன். ஸ்ரீஹரி, கஜேந்திரன் என்ற யானைக்கு அருள் புரிந்து மோட்சம் அளித்த கதையினைப் பார்ப்போம்.

பாண்டிய மன்னனான இந்திரயுத்யும்னன் சிறந்த நாராயண பக்தன். அவன் எம்பெருமானுக்குப் பூஜை செய்து கொண்டிருந்தபோது, அகத்திய மாமுனிவர் வந்தார். மன்னன் ஸ்ரீ ஹரியின் பாதார விந்தங்களை தியானித்துக் கொண்டிருந்தபடியால் வந்த அகத்தியமுனிவரைக் கவனிக்கவில்லை. மன்னன் தன்னை மதிக்கவில்லையென்று கோபங்கொண்டு "மதம் பிடித்த யானையாகப் பிறப்பாய்" என்று சாபமிட்டார் குறுமுனிவர். மன்னன் சாபவிமோசனம் வேண்ட, "பரந்தாமன் அருளால் விமோசனம் கிடைக்கும்" என்றருளிச் சென்றார் முனிவர். அதன்படி மன்னன் கஜேந்திரன் என்ற யானையாகப் பிறந்தான்.

திரி கூடபர்வதத்தின் நடுவே இருந்த நீர்நிலையில் தனது ஆசை நாயகிகளுடன் ஜலக்கிரீடையில் இருந்தான் கந்தர்வத் தலைவன் ஹூ ஹூ. அப்போது அங்கு நீராடிக் கொண்டிருந்த முனிவரின் கால்களை ஹூ ஹூ நீருக்குள் மூழ்கிச்சென்று வாரிவிட்டான். முனிவர் கோபங்கொண்டு அவனை முதலையாகும்படி சபித்தார். தன் தவறை உணர்ந்த கந்தர்வன் முனிவரிடம் மன்னிப்பு கேட்க; "பரந்தாமனின் அருளால் விமோசனம் பெறுவாய்" என்றருளினார் முனிவர். அதன்படி கந்தர்வன் முதலையாக மாறினான்.

மன்னன் யானையாகப் பிறந்தாலும், பூர்வ ஜென்ம வாசனையால் விட்டகுறை தொட்டகுறையென எம்பெருமான் நாராயணனிடம் மிகுந்த பக்திதொடர்ந்து வந்தது. யானை தினமும் குளத்திலிருந்து தாமரை மலர் பறித்துவந்து ஸ்ரீ ஹரிக்குப் பாத

பூஜை செய்து வந்தது. ஒரு நாள் அந்த யானை பூப்பறிக்கும்போது முதலையொன்று அதன் காலைக் கௌவியது. யானை முதலையிடமிருந்து விடுபட ஆயிரம் வருடங்களாகப் போராடியது. யானைக்கு "எம் பெருமானுக்குப் பூஜை செய்யவில்லையே" என்று மிகுந்த துக்கம். ஒரு நாள் துன்பம் தாங்காது ஸ்ரீமத் நாராயணனை நினைத்து "ஆதி மூலமே" என அழைத்தது. "அழைத்தவர் குரலுக்கு வருவேன்" என்றான் கீதையிலே கண்ணன். அந்த அடியார்க்கெளியவன், சரணாகத வத்ஸலன், கருணைப் பிரபு, யானை அலறிய சத்தம் கேட்டதும் வைகுண்டத்திலிருந்து சடக்கென எழுந்து, மகாலட்சுமியிடம் கூடச் சொல்லாமல் கருட வாகனத்திலே கடகடவென ஓர் நொடியிலே அங்கே வந்தார். பெருமான் ஸ்ரீஹரி கயேந்திரனைக் காப்பாற்றும் அரிய காட்சியைக் காண பரமேஸ்வரன், பிரம்மதேவர் எல்லோரும் விரைந்து வந்தார்கள்.

ஆபத் பாந்தவன், அனாதரட்சகன் சக்கராயுதத்தினால் முதலையை வெட்டி, யானையைத் தூக்கி வந்து கரைசேர்த்து, அதனுடைய காலை இதமாக வருடி, தனது வஸ்திரத்தினாலே அதனுடைய காயத்தைத் துடைத்து, கஜேந்திரனுடைய பக்திக்குத் தாஸனானார். கஜேந்திரன் எம்பெருமானை வணங்கிப் பணிந்து பகவானே! சதை, எலும்பு, இரத்தத்தினாலான இந்த உடம்பைக் காப்பாற்ற தேவரீரை நான் அழைக்கவில்லை. யான் பறித்த மலரைத் தேவரீருடைய திருவடித் தாமரையிலே சமர்ப்பித்து வழிபட முடியவில்லையே என்ற ஆற்றாமையினால் எம்பெருமானை அழைத்தேன் எனக்கூறி, பகவானுடைய பாதார விந்தத்திலே தாமரை மலரை சமர்ப்பித்து வணங்கியது. ஸ்ரீ ஹரி யானையினுடைய பக்திக்கு மகிழ்ந்து, அதற்கு சாபவிமோசனம் அளித்து கஜேந்திரனுக்கு மோட்சமளித்தார். ஸ்ரீ சக்கராயுதத்தால் அறுபட்ட முதலையும் கந்தர்வனாக உருப்பெற்று சொர்க்கம் சென்றான்.

பகவான் நாராயணன் கம்சன் ஏவிய மதயானையைக் கொன்றார். கஜேந்திரன் என்ற யானையைக் காத்தார்.

ஒரு அசுரனைக் கொன்றார். ஒரு அசுரனைக் காத்தார். இராவணனைக் கொன்றார். விபீஷணனைக் காத்தார்.

ஒரு குரங்கைக் கொன்றார். ஒரு குரங்கைக் காத்தார். வாலியைக் கொன்றார். சுக்கிரீவனைக் காத்தார். பகவான் உண்மையான பக்தரைக் காத்தார். 'ஆதிமூலமே' என அழைத்த ஆனையின் குரல் கேட்டு ஓர் நொடியில் புள்ளூர்ந்து வந்து காத்தாரோ, அதே போன்று நாமும் தூய அன்பினோடு அவனே கதியெனச் சரணடைந்தால் பரந்தாமன் கருட வாகனத்திலே பறந்து வந்து அருள்புரிவான்.

இந்த "கஜேந்திர மோட்சம்" வரலாற்றைப்படிப்பவர், கேட்பவர் எல்லோர்க்கும் பகவானின் பரிபூரண அருள் கிடைக்கும். விடியற் காலையில் நித்திரைவிட்டெழும் போது ஸ்ரீ ஹரியினை வணங்கி, இக்கதையினை நினைத்து ஏழுமுறை அன்போடு "ஹரி", "ஹரி" என உரைப்போர்க்கு அந்தக் கடல் வண்ணன் ஹரி அவர்களது

---

அமைதியான மனம் மனிதன் அடையும் பெரும் பாக்கியம்.

பாவங்களையெல்லாம் அபகரித்து அருள்புரிவான். 'ஹரி' என்றால் "பாவங்களைத் திருடுபவன்" என்று பொருள், பக்தர் மீது பித்தம் கொண்டுள்ள பெருமான் தாயினும் சாலப் பரிந்து அவர்களைக் காத்தருளுவார். பாற்கடல்வாசன் பக்தர் குரல்கேட்டதும் அழைத்தவர் குரலுக்கு ஓடி வந்து காப்பான். கல்வியோ, செல்வமோ எதுவுமே இல்லாவிட்டாலும் பாமரனாக இருந்தாலும் தூய அன்பு இருந்தால் பரந்தாமன் கூப்பிட்டகுரலுக்கு ஓடி வருவான். பிரகலாதனுடைய பக்திக்கு தாஸனாகி, தூணிலிருந்து நரசிங்கமூர்த்தியாக வெளிப்பட்டு இரணியனைக் கொன்று, பிரகலாதனுக்கு அருள் புரிந்தார் ஆனந்த ஜோதி நாராயணன். அன்புக்கு அடிமையானவன் அஞ்சனவண்ணன். அன்பெனும் பிடியில் அகப்படும் மலை அந்த அற்புதக் கடவுள். புல்லாங்குழல் எடுத்து கானமிசைத்து இந்தப் புவனியெல்லாம் மயங்கச் செய்த வேணுகோபாலன். நாற்றத்துழாய்முடி நாராயணன், நம்பினோரைக் காப்பவன். ஆதிமூலமே என அழைத்த ஆனையின் அருந்துயர் தீரப் புள்ளூர்ந்து வந்தவன், பஞ்ச பாண்டவர்களுக்காக திருவடி நோக நடந்தவன், 'ஹரி கோவிந்தா' எனக் கதறிய பாஞ்சாலி மானங் காத்தவன், மூன்று அடிமண்கேட்டு விண்ணையும், மண்ணையும் அளந்த திரிவிக்கிரமன், வெண்ணெய் தயிர், பால், ஆயர் வீடுகளில் திருடி உண்ட கள்வன், குன்றால் பெரு மழை தடுத்தே கோகுலம் காத்த கோவர்த்தன கிரிதாரி, கீதையுரைத்த பூபாலன், கீதம் இசைத்த வேணுகோபாலன், எங்கே தருமம் நலிந்தாலும் அங்கே வருவேன் என்று அறைகூவிய கீதாசாரியன். அறத்தினை நிலைநாட்ட அவதாரம் பல புரிந்த ஆதிப்பிரான். திருமகள் தலைவன். ஆலிலை மீது துயில் புரிந்து அகிலம் முழுவதை யும் காப்பவன். அறத்திற்கும், அருளிற்கும் அறிவினிற்கும், அழகுக்கும், அன்பினிற்கும் அமைந்த அற்புதத் தெய்வம். அவன் அழகினிலே உலக மாந்தரெல்லாம் மயங்கி நிற்கிறார்கள். தன் அடியார் அன்பினிலே மயங்கி நிற்கின்றான் மாயவன்.

சுழலும் சக்கரம் ஒருகையில்
தினம் ஒலிக்கும் சங்கு மறுகையில்
குழலும் யாழும் இசைப்பது வோ
கோவிந்தா எனும் நாமம்

அந்த ஹரி கோவிந்தனின் அன்புமயமான, அருள் வடிவான, தேடித் தவிக்கும் மனங்களைத் தேடி அருளும் வான் மழையான, அலங்காரப் பிரியனான, வெண்ணெய்ப் பிரியனான சரணாக ரட்சகனை சரணடைவோமாக.

வந்தாய் என் மனம் புகுந்தாய் மன்னிநின்றாய்
நந்தாத கொழுஞ் சுடரே எங்கள் நம்பீ
சிந்தாமணியே திருவேங்கடம் மேய
எந்தாய் இனி உன்னை யான் என்றும் விடேனே.

---

மென்மையை இழப்பவர் நன்மையை இழந்து விடுகிறார்.

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் (கட்டுரைத் தொடர் - 38)

- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்-

தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தை தமிழாகமம் என அழைக்கும் மரபு உண்டு. இருபத்தெட்டுச் சிவாகமங்களில் ஒன்பது ஆகமங்களின் சாரமாகத் திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களும் அமைந்துள்ளது. ஒன்பதாம் தந்திரம் மகுடாகமத்தின் சாரம் எனக் கூறப்படுகிறது. மகுடம் என்பது மன்னர் தலையில் அணியும் கிரீடமாகும். அது இங்கே வாழ்க்கைச் சிகரமாகிய பேரின்பத்தை எடுத்துக் காட்டுவதாகும். பேரின்பத்தை அடைவதற்கான வழிகாட்டியாகவும் அதனால் மேலும் அடையக் கூடிய பெறுபேறுகளைச் சாதகர்களுக்கு விளக்கும் தூண்டு கோலாகவும் திருமந்திரத்தின் ஒன்பதாம் தந்திரம் அமைந்துள்ளது. 22 உபபிரிவுகளும் 399 பாடல்களும் இப்பிரிவில் அமைந்துள்ளன.

பேரானந்தப் பெருவாழ்வினை இறந்த பின்புதான் பெற முடியும் எனத் திருமூலர் கூறவில்லை. பக்குவநிலை அடைந்தவர்கள் இவ்வுலகிலேயே வீடு பேற்றினைப் பெற்றுப் பெருவாழ்வு வாழலாம் என்பதைத் திருமந்திரம் தெளிவாக விளக்குகிறது. இத்தகைய நிலையை அடைந்தவர்களைத் திருமூலர் அணைந்தோர் என வாழ்த்தி அவர்களுடைய பெருமையைப் பாடிப் போற்றுகின்றார் அவர்களை நீத்தார் எனவும், சீவன் முத்தர் எனவும் சைவ சித்தாந்தம் கூறும்.

வேதங்களில் பொதிந்துள்ள ஆழமான பொருள் மன இந்திரியங்களுக்குச் சரிவரப் புலப்படாது மறைந்துள்ளபடியால் அவற்றைப் பொதுவாக மறைஞானம் என வழங்குவர். வேதங்களின் மறைபொருளை விளக்குவதே சிவாகமங்களாகும். மறைபொருள் விளக்கத்தை சிவயோகிகள் மறைஞானம் எனக் கூறுவர். இந்து சமயம் மறைஞானத்தைப் பொதுவாகத் தரிசனம் என்று கூறும். ஆன்மா பரம்பொருளோடு இணைய எடுத்துக் கொள்ளும் முயற்சி அல்லது அம் முயற்சியில் பெறும் அனுபவம் மறைஞானம் எனப்படும். சைவ சித்தாந்த தத்துவத்தின் முதற் தரிசன நூலாகத் தமிழில் அமைந்திருப்பது திரு மந்திரமே ஆகும்.

சாதாரணமாகக் கேள்வி அறிவிலும் பார்க்க காட்சி அறிவு தெளிவு கூடியதாகும். செவிக்கும் மூளைக்கும் தொடர்புள்ள மூளை நரம்புகளிலும் பார்க்க கண்ணுக்கும் மூளைக்கும் தொடர்புள்ள நரம்புகள் இருபது பங்கு சக்தி கூடியவை என நரம்பியல் நிபுணர்கள் ஆய்வு செய்து கூறியுள்ளனர். கல்வி கேள்வி அறிவு மூலம் பெறும் மன வாசக உண்மை விளக்கத்தை விட மாசறு காட்சி மூலம் பெறும் சத்தியப் புலப்பாடு ஆயிரம் பங்கு கூடியது. திருமந்திரத்தின் ஒன்பதாம் தந்திரம் சிவதரிசனமாகிய மாசறு காட்சிக்கே முதலிடம் கொடுக்கின்றது. குருமடதரிசனத்துடன் ஆரம்பமாகும் ஒன்பதாம் தந்திரம் படிப்படியாக ஞானகுரு தரிசனம், திருக்கூத்துத் தரிசனம்,

பிரியமான வேலை எதுவும் கஷ்டமானதே அல்ல.

சிவதரிசனம், சிவசொரூப தரிசனம், மோன சமாதி என உயர்ந்து செல்கிறது. மோன சமாதி இன்றி மாசறு காட்சி பெறுதல் சாத்தியமில்லை. சிவசொருப தரிசனமே மகுடாகமத்தின் சிகரமாக விளங்குகிறது. காலம், இடம், காரணம் ஆகிய மூன்று பரிமாணங்களுக்கும் உட்பட்ட கொள்கைகளும் கருத்துக்களும் சிவசொருப தரிசனத்தைக் கொடுக்கமாட்டாது. நான்காவது பரிமாணமாகிய துரியாதீதம் அல்லது மோன சமாதியே சத்திய தரிசனத்தை நல்குவதாகும்.

அன்பர்கள் உள்ளமே இறைவன் வாழும் இல்லம். தன்னைச் சார்ந்த தனக் குரியவனாக இறைவனைக் கொள்வதே அறிவுடமை ஆகும். மெய்யடியார்கள் தேடிச் சென்றடைய வேண்டிய சிவப்பரம்பொருளின் திருவடிகளே என்பதைத் திருமந்திரம் வலியுறுத்துகிறது. பிறருக்குத் தீமை எண்ணாத அற உணர்வுகளே அருட்காட்சி எனக் கூறுகிறது. சிவப்பரம் பொருளே உலக உயிர்களின் தோற்றத்திற்குக் காரணமா கிறது.

சுத்தமாயை, அசுத்தமாயை ஆகிய இரண்டும் ஆன்மாக்களைப் பற்றி நின்று அவற்றின் அறிவை மழுங்கச் செய்யும். ஆன்மாவைப் பீடித்திருக்கும் பஞ்ச கோசங் களாகிய அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் ஆகிய ஐந்து திரைகளும் அகல அகத்திலே பரம்பொருள் காட்சி தோன்றும். சிவம் பிரகாசிக்கும் அறியாமை அகல ஆன்மா தன்னையும் அறிந்து தலைவனையும் அறியும். இப்படி உணரும் நிலை பெற்றவர்கள் ஞானத் தவயோகம் அடையப்பெற்ற ஞானிகள் ஆவார்கள். ஆன்ம ஒளி பெற்ற ஞானிகள் காண்பான் - காணப்படும் பொருள் - காட்சி ஆகிய மூன்றும் கடந்த மேலான பிரணவ யோகத்தை அறிந்தவராவார்கள்.

மாயை இரண்டும் மறைக்க மறைவுறும்
காயம் ஓர் ஐந்தும் கழியத்தான் ஆகியே
தூய பரஞ்சுடர் தோன்றச் சொருபத்துள்
ஆய்பவர் ஞானாதி மோனத்தர் ஆமே.

ஞான குரு தரிசனமும் ஆன்மிக விடுதலைக்கு நல்லதொரு வழிகாட்டியாகவே அமைகிறது. முப்பத்தாறு தத்துவங்களையும் கடத்தல், விழிப்பு, உறக்கம், கனவு ஆகியவற்றைக் கடந்து துரியாதீத நிலை என்னும் சமாதி நிலையை அடைதல், சிவ னும் சீவனும் அத்துவிதமாகக் கலந்து நிற்கும் சிவோகம், பாவனை செய்தல், தியான நெறியை அனுசரித்தல் ஆகிய நான்கும் சாதனா முறைகளைச் சாதகர்களுக்கு சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. ஞான குருவின் நேரடியான வழிகாட்டுதல் இன்றிச் சாதனா மார்க்கத்தினைக் கடைப்பிடித்தல் இயலாததாகும். வழிகாட்டல் முறைகளை ஞானகுரு தரிசனத்தின் மூலமே பெற்று அனுசரித்தல் வேண்டும் எனத் திருமந்திரம் கூறுகிறது.

---

உறுதியின்றிச் செய்யப்படும் வழிபாடுகள் போலியாகவே முடியும்.

பசுவாகிய சீவன்களைப் பிறர் வணங்கும்படியான தலைவராக்கி, நாவால் இறைவனைப் போற்றி வணங்கும் நிலையைக் குருவாகிய நந்தியெம்பெருமான் அருள் செய்து உதவினார். ஆதலால் நாம் இனிமேல் சிறு தெய்வ வழிபாட்டைச் செய்யமாட்டோம். சிவன் ஒருவரையே வணங்குவோம். சிவனையே சிக்கெனப் பிடித்தமையால் நாமும் பிறரால் வணங்கப் பெறும்பேறு பெற்றவர்கள் ஆனோம்.

**கோ வணங்கும்படி கோவணம் ஆக்கிப் பின்**
**நா வணங்கும்படி நந்தி அருள் செய்தான்**
**தே வணங்கோம் இனிச் சித்தம் தெளிந்தனம்**
**போய் வணங்கும் பொருளாய் இருந்தோமே**

(கோ - ஆன்மா, கோவணமாக்குதலாவது - தலைவனாய் ஆக்குதல், தே - சிறுதெய்வம்)

**"சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்**
**சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்"**

என்பது அப்பர் பெருமானின் வாக்கும் ஆகும்.

ஓம் என்னும் பிரணவமே ஓங்காரம் எனப்படும். ஓங்கார ஒலியிலிருந்தே ஐம்பூதங்களும் தோற்றம் பெற்றன. ஓம் என்னும் பிரணவத்தை அறிந்தவர்களுக்கு முத்தியும் சித்தியும் கைகூடும்.

மனித மனம் ஒரு நிலையில் நில்லாது என்றுமே தடுமாறிக் கொண்டு இருக்கும். அலை பாய்ந்து கொண்டே இருக்கும். நன்மை தீமை அறியாது மயக்கம் உறும். இந்த நிலையில் மனத்தெளிவும் மன உறுதியும் உள்ளம் பெற உதவுவது ஞானகுரு உணர்த்தும் உபதேசமே ஆகும். ஒளி விளக்காக இருந்து ஆன்ம விடுதலைக்கு இதுவே துணை செய்யும் ஆன்மாக்களின் தவ முயற்சியும் சித்த சுத்தியுமே இதற்குத் துணையாக நின்று உதவும். இதுவே சன்மார்க்க உபதேசம் கூறும் நன்மார்க்கமாகும்.

**மலையும் மனோபவம் மருள்வனவாவன**
**நிலையின் தரிசனம் தீப நெறியாம்**
**தலமும், குலமும், தவம் சித்தம் ஆகும்.**
**நலமும் சன்மார்க்கத்து உபதேசந்தானே**

சிவன் பேரொளிப் பொருள். சீவன் ஒளிப் பொருள். சீவனாகிய ஒளிப்பொருள் சிவனாகிய பேரொளியை அறியில் பிறவி நீங்கும். சிவ ஒளியை உணர்ந்து அறிந்திருந்தால் உடம்பைப் பற்றிய நினைப்பு மறந்து போகும். அழியப் போகின்ற உடம்பின் நினைப்பு இருந்தால் மீண்டும் பிறவி எடுக்க நேரிடும். சிவனுடைய அருளைப்

---

உலகில் உள்ள எல்லா மதங்களுக்குமே மூலம் வேதம்தான்.

பெற்ற ஞானிகளுக்கு சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடரும் மூன்று கண்களாக அமையும்.

உலகத் தோற்றத்துக்கு காரணமாகிய இறைவன் உண்டு என்று இந்து சமய தத்துவங்கள் அனைத்தும் கூறுகின்றன. ஆனால் இறைவன் என்றொரு பொருள் தேவையற்றது என்பது பௌத்தம், சமணம், உலகாயதம் ஆகிய அவைதிக தத்துவங்களின் கருத்தாகும். தொன்றுதொட்டே இயங்கி வரும் உலகத்தையும், அதன் தோற்றத்தையும் கண்ட பின்பும் அதற்குக் காரணமான இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதை மறுப்பவர்கள் மேலான நற்கதி அடைய முடியாது. கண்ணால் கண்ட உலகத்தையே இல்லை என மறுப்பவர்கள் காணவேண்டும் என்ற நினைப்புடன் பார்த்தால் அவர்களுடைய உள்ளத்திலே அப்பரம்பொருள் விளக்கொளி போல விளங்கித் தோன்றும்.

**உண்டு இல்லை என்னும் உலகத்து இயல்வது**
**பண்டு இல்லை என்னும் பரம்கதி உண்டு கொல்**
**கண்டு இல்லை மானுடர் கண்ட கருத்துறில்**
**விண் தில்லை உள்ளே விளங்கு ஒளி ஆகுமே**

சிவ மூல மந்திரமாக நமசிவாய மந்திரம் திகழ்கிறது. நமசிவாய மந்திரம் தூல பஞ்சாக்கரம், நகராதி பஞ்சாக்கிரம் என அழைக்கப்படுகிறது. சிவாயநம, சூக்கும பஞ்சாக்கரம், சிகராதி பஞ்சாக்கரம் எனக் கூறப்படுகிறது. உலகியல் வாழ்க்கையின் நன்மையை விரும்புவர்கள் தூல பஞ்சாக்கரத்தையும், முக்திகாமிகள் சூக்கும பஞ்சாக்கரத்தையும் ஓதிப் பயன் பெறலாம். புறவழிபாட்டில் கூறப்படுவது "நமசிவாய", அகவழிபாட்டில் தியானத்தில் செபிக்கப்படுவது "சிவாயநம" ஆகும். தூல பஞ்சாக்கரம் உயிர்களைத் தீயவழிச் செல்லாது திருத்தி நல்வழிப்படுத்தும் அங்குசமாகத் திகழ்கிறது. உடம்பை விட்டுப் போகும் உயிர்க்கு அடைக்கலமாகப் பாதுகாப்பாக கை கொடுப்பது அஞ்செழுத்தே ஆகும். மரணப் படுக்கையில் இருப்பவர்களின் உயிர் உடலை விட்டுப் பிரியும் நேரத்தில் அவர்களுடைய நெற்றியிலே திருநீறணிந்து, கையிலே தர்ப்பை போட்டுக் காதிலே நமசிவாய மந்திரத்தை ஓதும் வழக்கம் நமது சமூகத்தில் பல்லாண்டு காலமாக நிலவி வந்தது. கால வெள்ளத்தால் அழிந்து போன நமது பண்பாட்டு அம்சங்களில் இதுவும் ஒன்றாகி விட்டது.

நாள் தோறும் மனதால் நமசிவாய மந்திரத்தை நினைத்துத் துதித்தும், வாயால் "இறைவா! எம் தலைவா!" எனப் போற்றியும், துயிலப் போகும் போதும் இறைவா உன் திருவடிகளே எனக்குத் துணையாக வேண்டும் என்றும் நினைத்து வாழ்ந்தால், திருக்கைலாய மலையில் அமர்ந்து இருக்கும் பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் திருவருளைப் பெறலாம்.

---

மனத்தூய்மை இல்லாமல் ஒரு காரியத்தையும் சாதிக்கமுடியாது.

நெஞ்சு நினைந்து தம் வாயால் பிரான் என்று
துஞ்சும் பொழுது உன் துணைத்தாள் சரணென்று
மஞ்சு தவழும் வடவரை மீது உறை
அஞ்சில் இறைவன் அருள் பெறலாமே

சிவாயநம என்ற சூக்கும பஞ்சாக்கரத்தை ஒளிபெற்ற குரு சீடனுக்கு உபதேசம் செய்வார். சிவமும் அதன் உடனான சக்தியும் ஒளிமயமானவை. சூக்கும பஞ்சாக்கர செபத்தால் சீவனைப் பற்றிய பாசம் நீங்கிவிடும். சிவப்பரம்பொருளைச் சிந்திப்பதில் உள்ள பயன்களை அறியாதவர்கள் வாயிருந்தும் பேச இயலாத ஊமைகளாவர். சிவசிவ என்று சிந்திக்க மனமும் மூச்சுக் காற்றாகிய பிராணனும் அலைபாயாது குவிந்து ஒரு முகப்பட்டு உள்ளடங்கி இருக்கும்.

முற்பிறவியில் செய்த தீவினையின் காரணமாக சிவ சிவ என்று சிவனது திருப்பெயரைப் பாவிகள் சொல்வதில்லை. எத்தகைய தீவினையாளரும் சிவ சிவ என்று கூறுவாராயின் அவர்களின் தீவினைகள் நீங்கும். சிவ சிவ என்று கூறித் தியானிப்பவர் தெய்வ வடிவம் பெற்றுத் திகழ்வர். சிவ நாமத்தை தொடர்ந்து கூறினால் நமது தீவினைகள் முற்றாக நீங்கி விடுவதுடன் சிவகதியும் கிடைத்துவிடும்.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவ கதிதானே

மலம் நீங்கிய சீவன் சிவ சக்தியோடுபொருந்தி ஆனந்த நிலையில் இருக்கும். வேத ஞானத்தின் பிழிவாக அதில் முதிர்ந்து கனிந்த பழமாக உள்ளது ஐந்தெழுத்து மந்திரமாகும். ஆனால் இந்தப் பழத்தை உண்டு பயனடைந்து சித்த சமாதி நிலையில் நிற்கும் எண்ணம் எவர்க்கும் இல்லை. இது ஐந்தெழுத்துத் தானே? இது எங்களுக்கும் தெரியும் என்று கூறுபவர்கள் மூடர்கள். இவர்கள் தங்கள் தலையெழுத்தை மாற்றி அமைக்கும் தலைப்பெழுத்து பஞ்சாட்சர மந்திரம் என்பதைச் சிறிதும் அறியார். ஞானமில்லாதவர்கள் பஞ்சாக்கரம் தலைவிதியை மாற்றும் தன்மை உடையது என்பதை அறியாமல் தவிக்கிறார்கள்.

பழுத்தன ஐந்தும் பழமறை உள்ளே
விழித்து அங்கு உறங்கும் விளைவு அறிவார் இல்லை
எழுத்து அறிவோம் என்று உரைப்பார்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்து அறியாரே

---

இன்பமும் துன்பமும் ஞானிகளுக்கு இல்லை.

உ



# மடம் சூழ் இலங்கைச் சந்நிதி வேலவா போற்றி

- கு. சிவபாலராஜா அவர்கள் -

இலங்கையின் வடபால் அமைந்துள்ள தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் அமர்ந்தருள் புரியும் தலமானது கடந்த பல வருடங்கள் முந்தி சுமார் 40 (நாற்பது) மடங்கள் சூழ்ந்து அமைந்து சிறப்புப் பெற்ற முருக தலமாக விளங்கியது. அந்நாட்களிலும் இந்நாட்களிலும் இம் மடங்கள் ஆதரவற்றோரின் புகலிடமாக உணவு, உறைவிடம், தாகசாந்தி, மன ஆறுதல், ஆத்மீக உணர்வுவளரிடம். இவ்வாறே பல தேவைகள் கருதி அடியார்களுக்கு ஆறுதல் அளித்துவருகின்றமை மிக்க சிறப்புடையது. ஆனால் இம் மடங்களில் பல காலக் கிரமத்தில் பற்பல காரணங்களால் அழிவடைந்து போய்விட்டமை பேரிழப்பே. இருக்கும் சில மடங்கள் தற்போதும் சேவையாற்றுகின்றன. இவ்வாறு மடம் சூழ் சிவதலம் இலங்கையெங்கணும் காணலரிது. அனாதைகளின் உறைவிடமாகவும் இம் மடங்கள் திகழ்ந்தன. திகழ்கின்றன.

மடமாவது யாது? பெரியோர்கள் அமர்ந்து கொண்டு கல்வியொழுக்கத்தையும், சமயத்தையும் வளர்த்தற்கு பொருத்தமான இடம் மடம் ஆகும். மேலும் இங்கே செபம் பூசை, தியானம் முதலியன செய்வதற்கும் மடம் உபயோகமான இடமாகும். வேதாகமங்களைப் படித்தல் படிப்பித்தல் முதலிய வேலைகளுக்கும் மடங்கள் பொருத்தமான இடங்களாக அமைந்தன. ஆனால் மடங்களை அமைப்பதற்குரிய, விதிமுறைகள், பின்பற்றப்பட்டு அவை, அமைக்கப்பட்டிருந்தால் அந்தந்தக் காரியங்கள் அங்கே நிறைவேற்றுதல் இலகுவானதும் பொருத்தமுடையதுமாகும்.

மடம் அமைத்தற்கும், மடம் புதுப்பித்துக் கட்டுவதற்கும் அங்கே வேதாகமங்களை ஓதுபவர்களுக்கு உணவு, ஆடை அணிகளை தானமாக வழங்குவதற்கு வேண்டிய நிதி வழங்குபவர்களுக்கும், மடம் அமைத்தற்கு வேண்டிய பூமி தானம் செய்பவர்களுக்கும் கடவுள் தன் உலகத்தில் இருப்பிடம் அருளி உதவி செய்வார் என்பது மரபுக் கதை. மடாதிபதிகள் என பதவி வகிக்கத் தகுதியுடையோர் யாவர்? இவர்கள் கருவி நூல்களை நன்கு கற்றவராகவும், வேதகர்மங்களைக் கற்றறிந்தவராகவும், ஜீவ காருண்யம், பக்தி, வைராக்கியம், ஞானம் முதலிய நால்வகை அம்சங்

கள் உடையவர்களாகவும் இருத்தல் அவசியம். இவர்கள் ஆசாரியார்கள் எனப்படுவர். அதாவது ஆசார முறைப்படியாக சமூகத்தில் வாழும் மக்களை வழிப்படுத்தும் தகுதி இவர்களுக்கு அவசியம். இவர்கள் மடத்தில், இருந்து கொண்டு தம்மை அடைபவர்களுக்கு வேதாகம ஒழுக்கத்தைப் போதிப்பர். இவர்கள் தவறாமல் நித்திய கருமங்கள் முதலியவற்றைத் தினமும் பின்பற்றி சமய நெறிகளை மக்களுக்கும், நன்மாணாக்கர்களுக்கும் போதிப்பர்.

மடாதிபதிகள் தம்மையடைவோர்களுக்கு பாரபட்சமின்றி அன்னம், வஸ்திரம் முதலியன வழங்குதல் வேண்டும். இவர் தமர், இவர் பிறர் என்னும் பாரபட்சம் காட்டி அன்னமோ வஸ்திரமோ வழங்குதல் ஆகாது. அவ்வாறு வழங்கினால் அது கொடிது. அவர்கள் செய்யும் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். மடாதிபதிகள் தம்மிடம் கற்கும் மாணவர்களுக்கு ஆண்டு தோறும் அவர்கள் மத்தியில் பரீட்சை வைத்து திறமை மிக்க மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பரிசுகளும் வழங்குதல் வேண்டும்.

மடாதிபதிகள் தம்முடைய மாணாக்கர்களுக்குள்ளே கல்வியறிவு ஒழுக்கங்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களை ஊர் தோறும் உள்ள தமது மடங்களுக்கு அனுப்பி அங்குள்ளவர்களுக்கும், பிள்ளைகளுக்கும் கல்வி கற்பிக்கவும் சமய நெறி போதிக்கவும் செய்வித்தல் வேண்டும். இக் காரியங்களில் அவர்கள் பிழை விடுமிடத்து அவர்களைத் திருத்துதல் வேண்டும். தமது கண்டனங்களையும் தெரிவிக்கலாம். சிலரை பதவி விலக்கவும் முடியும். மடாதிபதிகள் தமது மாணவர்களை தமது நல்லொழுக்க மேம்பாடுகளாலும் திருத்தலாம்.

மடாதிபதிகள் தருமச் செயல்களைச் செய்துவரின் அவர்தம் மாணவர்களும் அவரைப் பார்த்துத் திருந்திக் கொள்வர். நித்திய கருமம், வேதாகமப் படனம், தேவாலய சேவை, வாய்மை, இரக்கம், பொறுமை, அடக்கம் முதலிய சிறப்புடைய தருமங்களை மடாதிபதிகள் செய்வராயின் அவரின் சீடர்களும் இத்தருமங்களை பின்பற்றி நடப்பர்.

மடாதிபதிகள் தீய ஒழுக்கமுடையவர்களாக இருப்பின் அவர்தம் சீடர்களும் அதையே பின்பற்ற நேருதல் தவிர்க்க முடியாது. மடாதிபதிகள் அம்மடத்துப் பொருள், பண்டம், பணம் முதலியவற்றை தமது சொந்தப் பாவனைக்கு எடுத்து அனுபவித்தல் ஆகாது. மடாதிபதிகள் தமது சமயத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்கள். புறசமயத்தவர் தம் சமயத்தை அழிக்கப் புகுந்தால் அவர்களோடு போராடியேனும் தம் சமயத்தைக் காத்தல் வேண்டும். போலி வேஷதாரிகளாக மடாதிபதிகள் இருத்தல் ஒரு போதும் ஆகாது. மடாதிபதிகள் தம் மடத்திற்குரிய பொது நிதியினை தக்கபடி தேவையைச் சரிவர உணர்ந்தே செலவு செய்யவேண்டும். தன் எண்ணப்படி, தனது அன்பிற்குரியவர்களின் தேவையை நிறைவேற்றுவதற்காகச் செலவு செய்து இறைவனால் தண்டிக்கப்படும் நிலைக்கு உட்படுதல் ஆகாது. மடாதிபதிகளை துறவறத்தார் எனவும் கூறுவர். எனவே இச் சொல்லிற்கு ஏற்ற ஒழுக்கமுடையவர்களாக அவர்கள் விளங்குதல் வேண்டும். மடாதிபதிகள் அழிந்து கொண்டு வரும் பழைய நீதி நூல்கள் மற்றும் சமய

---

மரணம் என்பது புதுவாழ்விற்கு உறுதிமொழி.

நூல்கள், வேத நூல்கள், சித்தாந்த நூல்கள், புராண நூல்கள் முதலிய வற்றை மீளப் பதிப்பித்தும், புதுக்கியும் தக்கபடி பேணிப்பாது காத்தல் அவர்தம் கடன்.

தமது சுற்றத்தாரால் கைவிடப்பட்டு, உணவுக்கும் வஸ்திரம் முதலியவற்றிற்கும் என மடங்களை நம்பி வந்து அங்கு தரித்து வாழும் அடியவர்களை உரிய முறையில் உபசரிப்பதும், அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து பராமரிப்பதும், மடாதிபதிகளின் முக்கிய கடமையாகும். அவர்கள் ஒதுக்கப்படுவார்கள் எனின், அதைவிடப் பாவகாரியம் வேறு என்ன இருக்கிறது? மடாதிபதிகள் பலர் கூடுமிடத்து ஏற்படும் பிணக்குகளை எளிதாகத் தீர்த்தல் வேண்டும். பகை கொள்ளாது தம்முள் ஒற்றுமையுடையவராக திகழ்தல் மிக முக்கியம். தம்மிடையே ஏற்றத்தாழ்வு வஞ்சகம், பொறாமை முதலிய தீய குணங்களிலிருந்து தம்மை விடுவித்தல் வேண்டும். தமது பதவிகளில் எதிர் காலத்தில் யாரை நியமிப்பது என்னும் கேள்வியில் தமது பாசத்தாரை எவ்வித தகுதியும் இல்லையென்று கண்டும் அவரையே சிபார்சு செய்யும் மடாதிபதிகளின் செயல் கண்டிக்கத் தக்கதும் ஒழியத் தக்கதுமாகும். தகுதியுடையவர்களைத் தமக்குப் பின் மடாதிபதிகளாக்குதலே தகுதியுடைய செயல். கோயிலும், மடமும் ஒன்றே. எனவே கோயிலினுள்ளே செய்யத் தகாதவை எவையோ அவற்றை மடாலயங்களினுள்ளும் செய்யக்கூடாது. அவ்வாறு செய்பவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர். இவ்வாறு ஆகமங்கள் போதிக்கின்றன. மடங்களை வாடகைக்கு கொடுத்தல் பாவம். அல்லது குடும்பத்தாருடன் மடத்தில் வசித்தலும் பாவகாரியம், இல்லறம் மேற்கொள்பவர் மடாலய அதிபதிகள் ஆகிவிட்டால் அவர்தம் மனைவி பிள்ளைகளுமே அதனால் அதிக நன்மை பெறுவர். துறவறத்தாரை இப்பதவிகளுக்கு நியமித்தால் மடாலயப் பொருள் பண்டங்களை அவர் அபகரியார். அவர் பற்றில்லாதவர் என்பதால் ஆசா பாசங்களைத் துறந்த நிலையில் வாழ்வர் என்பது சமய விதியாகும்.

---

## புரட்டாதி, ஐப்பசி மாத

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய

## விசேட உற்சவ தினங்கள்

| | | |
|---|---|---|
| 27. 09. 2010 புரட்டாதி 11 திங்கள் | – | கார்த்திகை விசேட உற்சவம் |
| 08. 10. 2010 புரட்டாதி 22 வெள்ளி | – | நவராத்திரி விரதாரம்பம் |
| 16. 10. 2010 புரட்டாதி 30 சனி | – | சரஸ்வதி பூஜை |
| 17. 10. 2010 புரட்டாதி 31 ஞாயிறு | – | விஜயதசமி |
| 25. 10. 2010 ஐப்பசி 8 திங்கள் | – | கார்த்திகை தின விசேட உற்சவம் |

---

பொறுமையே நீடித்த பிரார்த்தனையாகின்றது.



# திருவிளையாடல்

## விடையிலச்சினை இட்ட படலம்

ஆறுமுகநாவலர் – படலம் – 34

காஞ்சீபுரத்திலே ஒரு சோழ அரசன் இருந்தான். அவன் காஞ்சியிலுள்ள காடு முழுவதையும் வெட்டுவித்தமையினாலே "காடு வெட்டிய சோழன்" எனப் பெயர் பெற்றான். அவன் மகா உத்தமன். வேதம் நான்கையும் வேதாங்கம் ஆறையும் நன்கு ஓதியுணர்ந்தவன். சிவபுராணங்களை நியமமாகக் கேட்பவன். பட்டுப் பீதாம்பரங்கள் இரத்தினாபரணங்களில் சிறிதும் விருப்பமின்றி விபூதியையும், உருத் திராஷத்தையுமே தரித்தவன்.

அவன் மதுரையிலே சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களைக் கேட்டுணர்ந்து, ஒரு நாள் இரவு, "சோமசுந்தரக் கடவுளை எப்போது தரிசிப்பேன்" என்று கவலையுற்று நித்திரைக்குப் போனான். சிவபெருமான் ஒரு சித்தர் சுவாமியாக சோழன் சொப்பனத்திலே தோன்றி, "நீ இன்றைக்கு மாறுவேடத்தில் தனியே வந்து தரிசனம் செய்து கொண்டு போ!" எனத் திருவாய் மலர்ந்தருளினார். சோழன் விழித் தெழுந்து, மிக்க மனமகிழ்வுடன் மந்திரிமார் - சேனை - பிறிவெதுவுமின்றி தனித்து நடந்து போய் வைகைக் கரையை அடைந்தான். வைகை கரைபுரண்டு பாய்வதைக் கண்ட சோழன் மனங்கலங்கி, "சோமசுந்தரப் பெருமானைத் தரிசிக்க இடையூறு வந்ததே; விடிந்தால் விக்கனம் வந்து சேருமே; யான் என் செய்வேன்!" என செய்வதறி யாது கலங்கி நின்றான். அப்போது, சிவபெருமான் முன்பு போல சித்தர் உருவில் நேரில் எழுந்தருளி வைகை நதியை வற்றும்படி திருநோக்கஞ் செய்தருளினார். வைகை வற்றியதும் சோழனை அழைத்துக்கொண்டு வடக்கு வாயிலைத் திறந்து, வீதிகளைக் கடந்து போய், பொற்றாமரை வாவியிலே நீராடச் செய்து, திருக்கோயில் புகுந்து தம்மையும் மீனாட்சி அம்மையையும் வணங்குவித்தார். சோழன் சோமசுந்தரக் கடவுளை மனமுருகி வணங்கி நின்றான். சித்தர் சுவாமி சோழனை நோக்கி, "நீ வந்த சமாச்சாரம் பாண்டியன் அறிந்தால் உனக்குத் துன்பஞ் செய்வான். அதனால் விரைந்து வா" என வைகை ஆற்றின் வடகரை வரை அழைத்து வந்து அவனுக்கு விபூதி சாத்தி "எல்லா வளங்களும் கிட்டுமாறு வாழ்த்தி" வழியனுப்பி வைத்தார். திரும்பி வந்து வடக்கு வாயிற் கதவைப்பூட்டி அதில் இடபக் குறியிட்டு தமது திருக்கோயிலினுள்ளே சென்றிருந்தார்.

சூரியன் உதித்ததும், வாயில் திறப்பவர்கள் வடக்கு வாயிற் கதவிலே இடபக் குறியிடப்பட்டிருப்பதைப் பார்த்து, சந்தேகம் கொண்டு, மற்றைய மூன்று வாசல்களையும் சென்று பார்த்தனர். அம்மூன்று வாசல்களிலும் முதல் நாள் இரவில்

அடிமைபோல் உழை அரசனைப்போல் சாப்பிடு.

தாங்கள் இட்ட கயற்குறி இருப்பது கண்டு, குலபூடண பாண்டியன் எதிரே சென்று விபரத்தைக் கூறினார்கள். உடனே, வடக்கு வாசலுக்கு விரைந்து வந்த பாண்டியன், இடபக் குறியைப் பார்த்து அதிசயித்து, "இடபக்குறியிட்டவர் யாரென அறிகிலேனே" என மனங்குழம்பி நின்றான். அன்றிரவு சோமசுந்தரர் பாண்டியனுக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நம்மேல் வைத்த அன்பினாலே காஞ்சியிற் காடெல்லாம் வெட்டுவித்த சோழ ராசன் நம்மை வந்து தரிசிக்க விரும்பினான். அவனை அழைத்து வந்து தரிசனம் செய்வித்து, அவனை மீண்டும் அனுப்பிய பின் கதவைப் பூட்டி நாமே இடபக் குறி யிட்டோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

பாண்டியன் விழித்தெழுந்து, சிவபெருமானுடைய கருணையை நினைந்து நினைந்து ஆனந்தவெள்ளத்தில் மூழ்கினான். அவன் மாளிகையினின்றும் நீங்கி சிவபெருமானு டைய திருவிளையாடலை அனைவருக்கும் தெரிவித்தான். சில காலஞ் செல்ல தன் குமாரனாகிய இராசேந்திர பாண்டியனுக்கு தன்னரசைக் கொடுத்துவிட்டு, தான் சிவப்பேற்றை அடைந்தான்.

## தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்

படலம் - 35

இராசேந்திர பாண்டியன் அரசியற்று நாளிலே காடு வெட்டிய சோழன், சோமசுந்தரக் கடவுளை நேராக வந்து தரிசிக்க விரும்பி பாண்டியனுக்குப் பல்வேறு வரிசைகள் செய்து அவன் நட்பைப் பெற்றுக்கொண்டான். பாண்டியனும் அவனுக்குப் பல வெகுமதிகள் கொடுத்து இருவரும் நட்புரிமை பாராட்டி வந்தனர். சோழன் தன் மகளைப் பாண்டியனுக் குத் திருமணஞ் செய்து வைக்க விரும்பினான். இராசேந்திர பாண்டியன் தம்பியாகிய இராசசிங்கன் என்பான் இதனைக் கேள்வியுற்று தன் தமையனுக்குப் பேசிய பெண்ணைத் தானே விவாகஞ் செய்யக் கருதி காஞ்சிபுரத்தை அடைந்தான். இதனை அறிந்த சோழன் சேனையோடு வந்து இராஜசிங்கனை அழைத்துக்கொண்டு போய் தன் மகளை அவ னுக்கு விவாகம் செய்து வைத்தான்.

சொற்ப காலத்தின் பின், காடு வெட்டிய சோழன் தன் மருமகன் இராஜசிங்கனுக்கு பாண்டிய நாட்டைப் பெற்றுக் கொடுக்க விரும்பி இராசேந்திர பாண்டியன் மீது படை எடுத்தான். தன் மருமகனோடும் எண்ணில்லாத சேனைகளோடும் வந்து மதுரை நகரத் துக்கு இரண்டு யோசனை தூரத்தில் தங்கியிருந்தான். ஒற்றர் மூலம் அதனை அறிந்து கொண்ட இராசேந்திர பாண்டியன் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலை அடைந்து வணங்கி, "எம்பெருமானே! முன்னர் பாதி ராத்திரியிலே தனித்து வந்து உம்மைத் தரி சனம் செய்த சோழன் இப்போது எம்மீது படையெடுத்து வந்துள்ளான். அப்போது தரு மத்தின் பக்கம் நின்ற தாங்கள், இப்போது அதர்மத்தின் பக்கம் நிற்பீரோ?" என மனம் நொந்து வினாவி நின்றான்.

இறைவன் திருவருளினாலே ஆகாயத்தினின்றும், "பாண்டியனே! நீ நாளைக்கு உன் சேனையோடு போய் யுத்தம் செய்யக் கடவாய். வெற்றி உனக்குக் கிடைக்கும்படி செய்வோம்" என்று ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. இதுகேட்ட பாண்டியன் மனம் மிக

மகிழ்ந்து தன் இருப்பிடம் சேர்ந்தான்.

மறுநாள் காலையில் பாண்டியனின் சிறுசேனை, சோழனின் பெருஞ் சேனையை எதிர்த்துப் போரிட்டது. பாண்டியனின் சேனைகள் சிறிய அளவேயாயினும், சிவபெருமான் திருப் பார்வையினால் ஒன்று பலபோலத் தோற்றமளித்து இடைவிடாது போர் புரிந்தனர். வெய்யிலின் மிகுதியினால் இருவர் சேனைகளும் தண்ணீரத் தாகங்கொண்டு, குடிக்கத் தண்ணீரும் ஒதுங்க நிழலுமின்றி மிக்க வருத்தமடைந்தன. அப்பொழுது, சோமசுந்தரக் கடவுள் பாண்டியன் சேனை நடுவே ஒரு தண்ணீர்ப் பந்தலைப் பரப்பி, அதன் கீழே தாம் தவவேடம் பூண்ட ஒருவராக எழுந்தருளியிருந்தார். அவர் கையில் வைத்திருந்த கெண்டியிலுள்ள ஒரு லட்சம் துவாரத்தினாலே ஒரே வேளையில் பாண்டியன் சேனைக் குத் தண்ணீர வார்த்துத் தாகத்தைத் தீர்த்தருளினார்.

பாண்டியனின் வீரர்கள், சிவபெருமானின் தண்ணீரப் பந்தலினுள்ளே புகுந்து தண்ணீர குடித்து, களைப்பு நீங்கி வலிமை பெற்று சோழனின் பெருஞ் சேனையோடு போரிட்டு வென்றார்கள். சில வீரர்கள் அவனையும் அவன் மருமகனையும் பிடித்து பாண்டியன் முன்னே கொண்டு வந்து நிறுத்தினர். பாண்டியன் அவ்விருவரையும் சோமசுந்தரக் கடவுள் சந்நிதானத்திலே கொண்டுபோய் விடுத்து, “எம்பெருமானே! உமது திருவுளம் யாது?” என வினாவினான். அப்பொழுது, ஆகாயத்தினின்றும் “பாண்டியனே! நீ தருமமுடையை. உன் கருத்துக்கு இசைந்தபடி செய்” என அசரீரி வாக்குத் தோன்றிற்று. இவ்வாறு இறைவன் திருவாக்குக் கேட்ட பாண்டியன் சோழனை மன்னித்து அவனுக்குச் சில யானைகளும், குதிரைகளும் ஆபரணங்களும் கொடுத்து அனுப்பிவிட் டான். தன் தம்பியாகிய இராஜசிங்கனின் செருக்கடங்கும் வண்ணம், அவன் அனுபவிக் குஞ் செல்வங்களுள்ளே சிலவற்றை மாற்றி, அவனை வேறாக ஒதுக்கி வைத்தான். தன் குடிமக்கள் அனைவரையும் தாய்போலப் பாதுகாத்துக்கொண்டு வாழ்ந்திருந்தான்.

---

# திருநீற்றின் வகைகள்

சைவ சமயத்தின் அடையாளச் சின்னமாக விளங்குவது திருநீறு. அது நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

01. கற்பம் : நோயற்றதும் கன்றுடன் கூடியதுமான ஒரு பசுவின் சாணத்தி லிருந்து மந்திரங்கள் ஓதி தயாரிக்கப்படுவது.
02. அநுகற்பம் : காடுகளில் கிடைக்கும் உலர்ந்த சாணத்திலிருந்து மந்திரங்கள் ஓதி தயாரிக்கப்படுவது.
03. உபகற்பம் : வீட்டுத் தொழுவத்திலிருந்து சேகரித்த சாணத்தின் மூலம் எந்த விதிமுறைகளும் பின்பற்றாமல் தயாரிப்பது.
04. அகற்பம் : இடி விழுந்த இடங்களில் தாமாகவே உருவாகி குவிந்திருப்பது.

---

தக்க சமயத்தில் உதவும் கைகள் புனிதமானவை.

# ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் நினைவாலயம்

## திருக்கேதீஸ்வரத்தில் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் மண்டபம் அமைத்தல்

*"கேடிலாத கேதீச்சரம் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே".*

சம்பந்தர்

**சைவ நாயன்மார்களாற் பாடப்பெற்ற சிவத்தலம் திருக்கேதீச்சரமாகும். கேது பகவானால் வழிபடப்பெற்ற வரலாற்றுப் பெருமை கொண்டது இது.**


அடர்ந்த காடுமண்டியிருந்த திருக்கேதீச்சர் ஆலயச் சூழலின் தாங்கொணாக் கஷ்டங்களின் மத்தியில் பேரிடர்களையெல்லாம் வென்று திருவருள் நலங்கை கூட்டி நிற்க "மடம்" அமைத்து கேதாரகௌரி நாதர் திருவடி தொழ வந்த அடியார்களுக்கு அன்னதானப் பெரும்பணியாற்றியவர், ஆன்மீகப் பணியாற்றிய வர் திருவாசகப் பேருற்று சபாரத்தினம் சுவாமிகள் ஆவார். நேசவாலை, கௌரி சர்பாடசாலை, நன்னீர்க்கிணறமைத்தல் என்னும் திருத்தொண்டுகள் பற்பல செய்த பெருந்தகையுமாவார். அவரது மடம் இருந்த இடத்தின் அண்மையில் திருக்கேதீச்சர ஆலய பரிபாலன சபையினர் திருமடம் அமைக்கவென ஸ்ரீ சபாரத் தினம் சுவாமிகளின் தொண்டர் சபையினருக்கு இடம் வழங்கியுள்ளனர். சுவாமியின் திருவருளை வியந்து மகிழ்ந்து 27.05.2010 வியாழக்கிழமை சுபவேளையில் மடத்திருப்பணியை ஆரம்பிக்கும் முகமாக அடிக்கல் நாட்டும் விழாவும் நடை பெற்றது. இறைவன் திருவருளால் இத்திருமடத் திருப்பணி நிறைவேற அன்பர்கள், சைவாபிமானிகள், கொடைவள்ளல்கள், புலம்பெயர் நாடுகளிலுள்ள இந்து நிறுவனங்கள், ஆலயங்களின் அறங்காவலர்கள் சபை அனைவரிடமிருந்தும் நிதியுதவியை நாடி நிற்கிறோம்.

திருமடத்தின் வசதிகள் குறித்த அம்சங்கள் வருமாறு:

01. மகான்களின் திருவுருவப்படங்களும் வைக்கப்பட்டு பூசைகள், பிரார்த்தனை கள், தியானம், திருமணம் ஆகியவற்றுக்கான கலாசார மண்டபங்கள்.
02. யாத்திரிகர் தங்குவதற்கான பொது மண்டபத்துடன் இணைந்த குழியலறை களுடன் பன்னிரண்டு அறைகள் உருவாக்கப்படல்.
03. திருமுறைப் பண்ணிசை அரங்கு
04. சைவசமய, இலக்கிய நூலகம் அமைத்தல்

---

மகிழ்ச்சி என்னும் கோட்டையின் முதல் வாயில் அமைதி.




ஆலய பரிபாலன சபையினர் எமக்கு வழங்கிய நிலத்தில் சிறிது குறைந்தமையினாலும், வீதி அமைப்பதற்கான இடம் எடுக்கப்பட்டுள்ளதாலும் சில அறைகளைக் குறைத்துள்ளோம். ஏனைய மண்டபங்கள் சகல வசதிகளுடன் அமையும்.

பிறருக்காக உழையுங்கள் பிறர் உழைப்பை எதிர்பார்க்காதீர்கள்.

சிவபுண்ணியச் செல்வர்களே, அன்பர்களே தாங்கள் மனமுவந்து வழங்கும் திருப்பணி நன்கொடையை கீழ்க் காணும் முகவரியினூடாக அனுப்பி மண்டப வலையை பூர்த்திசெய்ய உதவவும்.

கட்டிடத்திருப்பணிக்குழு

01. "திருப்பணித்தவமணி" எஸ். தியாகராசா (S.T.R.) அவர்கள் (தலைவர்)
02. "கலாபூஷணம்" த. துரைராசா அவர்கள் (செயலாளர்)
03. ஆ. சீவரத்னம் அவர்கள் (பொருளாளர்)
04. திரு. வே. நீலகண்டன் அவர்கள் (உப தலைவர்)
05. இரா. செந்தில்குமரன் அவர்கள் (உப செயலாளர்)
06. "கலாநிதி" க. நாகேஸ்வரன் அவர்கள் (நிர்வாக உறுப்பினர்)
07. க. மார்க்கண்டு அவர்கள் (நிர்வாக உறுப்பினர்)
08. எஸ். ஜெயவத்சலன் அவர்கள் (நிர்வாக உறுப்பினர்)

திருக்கேதீச்சரத்தில் அமையவுள்ள மண்டபப் பணி முழுமையாக நிறைவு பெறுவதற்கு ரூபா நூறு இலட்சத்திற்குமேல் (ஒரு கோடி ரூபா) தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைப் பணம் ரூபா ஐந்து இலட்சத்திற்கு மேல் நன்கொடை வழங்கு வோருக்கு அவர்கள் விரும்பியவர்களின் பெயர் விபரம் அறை ஒன்றில் இடம்பெறும். திருக்கேதீச்சர யாத்திரையின்போது அவர்கட்குத்தங்குமிட வசதி கொடுக்கப்படும்.

"ஆம் பொருள் நமதேயானால் அறம் பிறர்க்காவதுண்டோ"

சி. தியாகராசா - (தலைவர்)

த. துரைராசா - (செயலாளர்)

**தொடர்புகொள்ள:**

01. M/s Srimath Sabaratnam Thondar Sabai
A/C No: 039010166499
Bank : HNB - Bambalapitiya, No. 285, Galle Road, Col - 04.

02. T. Thurairajah (Secretray)
31A, Janaki Lane, Bambalapitiya, Col - 04. Srilanka
Telephone : 011 - 4852232

உ

திருவாசக ஆராய்ச்சியுரை — தொடர்ச்சி



# சிவபுராணம்

- சங்க நூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் -

நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாயவிருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

*பதவுரை:* நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் - ஒப்பற்ற ஐந்து நிறங்களையுடையவனே, விண்ணோர்கள் ஏத்த மறைந்து இருந்தாய்: தேவர்கள் உன்னைத் துதிக்கவும் அவர்களுக்கு வெளிப்படாமல் மறைந்திருந்தவனே, எம்பெருமான் - எம்பெருமானே, வல் வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை - வலிய வினையையுடைய என்னை அறிவு மறையும்படி மூடிய வஞ்சனையையுடைய ஆணவ மலமாகிய இருளை, அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி - நல்வினை தீவினை என்னும் அரிய கயிறுகளாற் கட்டி, புறம் தோல் போர்த்து - வெளியே தோலைப் போர்வையாக இட்டு, எங்கும் புழு அழுக்கு மூடி - அதனால் உடம்பில் எங்குமுள்ள புழுக்களையும் அழுக்குகளையும் மறைத்துச் செய்த, மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை - அழுக்குகள் கழிகின்ற ஒன்பது வழிகளையுடைய உடம்பாகிய குடிசையை, மலங்க புலன் ஐந்தும் வஞ்சனையை செய்ய - யான் கலங்கும்படி ஐம்புலனகளும் மாயத்தைச் செய்ய, விமலா - மாசற்றவனே, விலங்கு மனத்தால் - இடையே நின்று தடுக்கும் மனத்தை

வாழ்வது முக்கியமல்ல சிறப்பாக வாழவேண்டும்.

உடைமையால், உனக்கு கலந்த அன்பு ஆகி கசிந்து உள் உருகும் நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி - உன்னிடத்துக் கலந்த அன்புடையேனாகி நெகிழ்ந்து உள்ளே உருகும் நன்மை இல்லாத சிறியேனுக்கு அக்குடிசையினைத் தந்து அதனால் ஆற்றலைக் கெடுத்து இருவினையொப்பு மலபரிபாகமாகிய பக்குவ நிலையை வரச்செய்து. நிலம்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி - இந்நிலவுலகத்தே குருவடிவில் எழுந்தருளிவந்து எல்லை காண்டற்கரிய நீண்ட திருவடிகளை எனக்குக் காட்டியருளி. நாயின் கடையாய் கிடந்த அடியேற்கு - நாயினும் கீழ்ப்பட்டவனாய்க் கிடந்த அடியேனுக்கு, தாயின் சிறந்த தயாவான தத்துவனே - தாயினும் சிறந்த கருணை வடிவான உண்மைப்பொருளாயுள்ளவனே.

இறைவனது அட்டமூர்த்தங்களுள் நிலம், நீர், தீ, வளி, வான், என்னும் பூதங்கள் ஐந்தும் அடங்குதலினாலும், அவை முறையே பொன்மை வெண்மை செம்மை கருமை புகைமை என்னும் ஐந்து நிறங்களும் உண்மையானும் 'நிறங்களோ ரைந்துடையாய்' என்றார்.

"மண்புனல் அனல்கால் வான்..................

..................... ..............................

வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு

தூமவண்ணம்" (சூர்2. செய் 67)

எனச் சிவஞானசித்தியாரிலும்,

"பொன்பார் புனல் வெண்மை பொங்குமனல் சிவப்பு

வன்கால் கருமைவளர் வான் தூமம் - என்பர்,"

என உண்மைவிளக்கத்தும் வருவனவும் காண்க.

தேவர்கள் தமக்குரிய சில ஆற்றல்களினாற் நம்மை முதல்வராகக் கருதிச் செருக்குறுவராதலின் அவர் செருக்கினை அறுத்தற் பொருட்டு இறைவன் மறைந்திருப்பானாதலின் "விண்ணோர்களேத்த மறைந்திருந்தாய்' என்றார். இறைவன் தேவர்களின் உதவியின்றித் திரிபுரங்களைச் சிரித்து எரிசெய்யவும் அதனை உணராத தேவர், தாமும் அவ்வென்றிற்குரியராகக் கருதி இறுமாந்தமையும் அஃதுணர்ந்த இறைவன் இயக்க வடிவங்கொண்டு எதிரில் நின்றகாலை அவர்கள் அவனை அறியாதிருந்தமையும் கேநோபநிடதத்துட் காண்க.

இயல்பாகவே ஆணவ மலத்தாற் பிணிக்கப்பட்டிருத்தலின் தம்மை 'வல்வினையேன்' என்றார். "வல்வினையேன், ஆழியப்பா வுடையாய்" (அடைக்கலப் 6) என அடிகள் பிறிதோரிடத்தும் கூறுதல் காண்க. மறைந்திட மூடியமாய இருளை என்றது அறிவு சிறிதும் விளங்காது தம்மை மூடிக்கொண்டு உடனிருக்கின்ற வஞ்சகத்தையுடைய ஆணவ இருளை என்றவாறு, மாயம் - வஞ்சனை, "மடங்கல்போற் சினைஇ மாயஞ்

---

செயவுணரை" (கலி 2:3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

உயிர்களை அநாதிசம்பந்தமாகப் பற்றியிருக்கின்ற ஆணவ இருளை வலிகெடச் செய்தற் பொருட்டு நல்வினை தீவினையென்னும் தொழில்களைச் செய்யும்படி பிரவாக அநாதி சம்பந்தமாகிய கன்மமலத்தோடு சேர்ப்பன். அறம் பாவம் என்னும் கன்மம் நிகழ்தற்கு உடம்பு இன்றியமையாதது. இருத்தலின் பிரவாக அநாதிசம்பந்தமான மாயையோடு சேர்ப்பன்: இம்முறைமையே 'என்னை மூடிய மாய இருளை அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி, ஒன்பது வாயிற்குடிலைச் சிறியேற்கு நல்கி' என அருளிச் செய்யப்பட்டது.

புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடியென்றது புறத்தே தோலைப் போர்வையாக இட்டு அதனால் உடம்பில் எங்குமுள்ள புழுக்களையும் அழுக்குகளையும் மறைத்து என்றவாறு.

"மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை என்பு தோல்போர்த்த குப்பாயம்" ஆசை 2

"அளிபுண் ணகத்துப் புறந்தோல்மூடி யடியேனுடைய யாக்கை" ஆசை 5.

என வருவன காண்க. மூடி என்பதற்கு முடிச்செய்த என ஒரு சொல் வருவித்துரைக்க. இதனால் ஒன்பது வாயிற்குடிலின் அமைப்புக் கூறியவாறு. மலஞ்சோரு மொன்பது வாயிற்குடில் - மலம் சலம் தாது பீழை குறும்பி சளி என்னும் அழுக்குகள் சோருகின்ற ஒன்பது வாயில்களையுடைய உடம்பாகிய குடிசை.

"கால்கொடுத் திருகை யேற்றிக் கழிநிறைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிர நீராற் சுவரெடுத் திரண்டு வாசல்
ஏல்வுடைத் தாவ மைந்தங் கேழுசா லேகம் பண்ணி
மால்கொடுத் தாவி வைத்தார் மாமறைக் காட னாரே"

நாவு. 33:4

"புழுப்பெய்த பண்டி தன்னைப் புறமொரு தோலான் மூடி
ஒழுக்கறா வொன்பதுவா யொற்றுமை யொன்று மில்லை"

நாவு 52:2

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

மலங்குதல் - கலங்குதல். இப்பொருட்டாதல் "கதுவே கலுழல் கலங்குதல் மலங்குதல்" என்னும் பிங்கலந்தையானும் (7:162) அறிக. புலனைந்தும் வஞ்சனையைச் செய்தல் - ஐம்புலன்களும் தம்மைக் கவருமாறு ஐம்பொறிகளையும் மயக்கித் தம்பால் இழுத்தல். அங்ஙனம் பொறிகள் புலன்களாலே மயக்கப்படுதலால் மாறுபட்டு விடுகின்றது. அதனால் அம்மனம் அன்பாகிக் கசிந்துள்ளுருகும் நலம் அற்றதாகின்றது. விலங்கும் என்பதற்கு எதிரில் நின்று தடுக்கும் எனினுமாம். உனக்கு - உன்னிடத்து. வேற்றுமை மயக்கம். "எம்பிரான் தில்லைச் சூழ்பொழிற்கே" (திருக்கோவை 167)

அறியக்கூடிய யாவற்றையும் அறியாமல் இருப்பதன் பெயர்தான் மனநோய்.

என்புழிப்போல, கசிந்துள்ளுருகுதல் - மனம் கசிந்து உள்ளே யுருகுதல்.

மாய இருளை (51) அருங்கயிற்றாற் கட்டி (52) புழுவழுக்கு மூடிச்செய்த (53) குடிலை (54) நல்கி (58) என முடிக்க.

நிலந்தன்மேல் வந்தருளியென்றது இறைவன் இந்நிலவுலகத்தே குரு வடிவில் எழுந்தருளிவந்து என்றவாறு.

"செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
பொங்குமலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி" அம்மானை 1

"பெருந்துறையெம் புண்ணியன் மண்ணிடை வந்து தோன்றி" வார்த் 7

என வருவன காண்க. நீள்கழல்கள் காட்டியென்றது எல்லை காண்டற்கரிய நீண்ட திருவடியைக் காணுமாறு செய்து என்றலை மேற்சூட்டி அருள் செய்து என்றவாறு.

"கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட அண்ணாமலையானை"

அம் 10. எனவும்,

"இணையர் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே" பூவல் 1

எனவும் அடிகள் அருளியமை காண்க.

"சென்னி யின்மிசை மேவிய பாதந்
திருந்து கண்ணிணை சேர்ந்திரு கரத்தா
லுன்னல் செய்திடு மிதயமே லணைவித்
துவகை கூர்ந்துமெய் யுணர்ச்சியி னெழுந்தார்" (திருப்பெருந் 58)

எனத் திருவாதவூரடிகள் புராணத்து வருதலும் காண்க.

கடை - இழிவு. மக்களுக்குத் தயைசெய்தலில் தாய் சிறந்தவளாதலின் "தாயிற் சிறந்த தயாவான" என்றார்.


"தாயி லாகிய இன்னருள் புரிந்த என்தலைவனை" சதகம் 39.
"தாயான ஈசற்கே" கோத் 12.
"தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்" பூவல் 3.
"தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்" பூவல் 3.

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" பிடித்த 9. என வருவனவுங் காண்க.

"பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே" (நாவு. 252:6) எனத் தேவாரத்தும் வருதல் காண்க. தத்துவம் - வடமொழி. அதன் தன்மை என்பது பொருள். அதன் தன்மையென்றது எப்பொருள் எத்தன்மையுடைத்தோ அப்பொருளை அத்தன்மை உடையதாக உண்மையுணர்தல்.

நல்ல ஒரு கலைக்கு உள்ளத்தைப் பண்படுத்தும் ஆற்றல் இருக்கிறது.

உ



# சிவனும் ஐந்தும்!



**பஞ்சமுகலிங்கம்:** சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களான ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோ ஜாதம் என்ற ஐந்து முகங்கள் உடைய பஞ்சமுக லிங்கத்தை விரிஞ்சிபுரம் வழித் துணைநாதர் கோயிலில் தரிசிக்கலாம்.

**பஞ்சமூர்த்திகள்:** சிவாலய உற்ச வங்களில் திருவீதி உலாவில் பஞ்ச மூர்த்தி (ஐம்பெரும் தெய்வங்கள்) எழுந் தருள்வர். விநாயகர், முருகப் பெருமான், சிவபெருமான், உமையம்மை, சண் டேஸ்வரர் ஆகியோர் பஞ்சமூர்த்திகள்.

**பஞ்ச சபைகள்:** சிவபிரான் நட ராஜனாக - ஆடல்வல்லானாக நடனம் புரியும் சிறப்பான ஐந்து சபைகள் அல் லது அம்பலங்கள். ரத்தினசபை (மணியம் பலம்) - திருவாலங்காடு, கனகசபை (பொன் னம்பலம்) - சிதம்பரம், ரஜதசபை (வெள் ளியம்பலம்) - மதுரை, தாமிரசபை (செப்பு அம்பலம்) - திருநெல்வேலி, சித்ரசபை - திருக்குற்றாலம் என்பனவாகும்.

**பஞ்சகுமாரர்கள்:** சிவகுமாரர்கள் என்று கூறப்படும் ஐவர் - விநாயகர், முரு கப்பெருமான், வீரபத்திரர், பைரவர், சாஸ்தா.

**பஞ்சபூதத்தலங்கள்:** நீர், மண், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்கள் - ஐந்து தலங்களுடன் தொடர் புடையது. நீர்த்தலம் (அப்பு) - திரு வானைக்கா, மண் தலம் (பிருதிவி) - காஞ்சிபுரம் மற்றும் திருவாரூர், நெருப் புத்தலம் (தேயு) - திருவண்ணா மலை, காற்றுத் தலம் (வாயு) - திருக்காளத்தி, ஆகாசத்தலம் - சிதம்பரம்.

**பஞ்சகிருத்தியம் (ஐந்தொழில்):** பிரம்மா - படைத்தல்; விஷ்ணு - காத்தல்; ருத்ரன் - அழித்தல்; மகேஸ்வரன் - மறைத் தல்; சதாசிவன் - அருளல் என்னும் ஐந் தொழில்களை சிவபெருமான் உலக இயக் கத்தின் பொருட்டு நடத்தி வருகிறார்.


**பஞ்ச உற்சவம்:** சிவாலயங் களில் ஐந்து வகையான உற்சவங்கள் நடை பெறுவதுண்டு. நித்திய உற்சவம்; வார உற்சவம்; பட்ச (மாதம் இருமுறை) உற்சவம்; மாச உற்சவம்; வருஷ உற் சவம் என்பனவாகும்.

**பஞ்சவில்வம்:** சிவபிரானுக்கு விசேஷமான ஐந்து பத்திரங்கள் (இலை கள்) - வில்வம், நொச்சி, விளா, மா விலங்கை, கிளுவை எனப்படும் பஞ்சவில் வங்களை பஞ்சமுக அர்ச்சனையின்போது முகத்துக்கு ஒரு பத்திரமாக பூஜிப்பார்கள்.

---

உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.


**பஞ்சபுராணம்:** சிவன் கோயில்களில் பூஜா காலங்களில் தீபாராதனையின்போது பன்னிரு திருமுறைகள் ஓதுவதும் மரபாகும். அதில் மூவர் தேவாரத்தில் ஒரு பாடல், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய ஒவ்வொன்றிலும் ஒரு பாடலாகவும் பெரிய புராணத்தில் ஒன்றும் ஆக ஐந்து பாடல்கள் பாடுவதை பஞ்ச புராணம் எனக் கூறுவர்.



**பஞ்சாட்சரப்படிகள் :** சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் உள்ள கனக சபையையும் ஆடல்வல்லான் ஆடுகின்ற சிற்றம்பலத்தையும் இணைக்கும் ஐந்து படிகளை 'பஞ்சாட்சரப் படிகள்' என்பர். இதன் இரண்டு புறமும் இரண்டு யானைகள் உள்ளன. எனவே, இதை 'களிற்றுப்படி' என்பார்கள். சித்தாந்த சாஸ்திரம் எழுதிய ஆசிரியர்களில் ஒருவரான திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார் என்னும் அருளாளர். தமது நூலின் ஏட்டுப் பிரதியை இந்தப் படியில் வைக்க, அருகில் இருந்த கல்யானை உயிர்பெற்றெழுந்து தனது துதிக்கையால் அதனை ஆடல் வல்லானிடம் அளித்ததாம். எனவே, அந்த சித்தாந்த சாஸ்திர நூலுக்கு 'திருக்களிற்றுப்படியார்' என்று பெயர் வந்தது.

**பஞ்சமார்க்கம்:** இறைவனை அடைய ஆன்றோர்கள் ஏற்படுத்திய வழிகள் (மார்க்கம்) ஐந்தாகும். அவையாவன: தாசமார்க்கம் (அடிமையாக): சத்புத்திர மார்க்கம் (மைந்தனைப் போல): சகமார்க்கம் (தோழனைப் போல) சன்மார்க்கம் (அன்பு வழி); சண்ட மார்க்கம் (வலிந்து ஆட்கொள்ளும் வழி) இதில் அப்பர் பெருமான் தாச மார்க்கத்திலும், சம்பந்தர் சத்புத்திர மார்க்கத்திலும், சுந்தரர் சகமார்க்கத்திலும், மணிவாசகர் சன்மார்க்க நெறியிலும், சண்டேசுரர் சண்ட மார்க்கத்திலும் இறைவனை அடைந்தார்கள்.

**பஞ்சநாதம்:** சிவபெருமானுக்குரிய சிறப்பான ஐந்து நாதன் தலங்களாவன;



1. காசி விச்வநாதம் 2. சோமநாதம் 3. ராமநாதம் (ராமேச்வரம்) 4. வைத்யநாதம் 5. பூரி ஜகன்னாதம். இதில் பூரியில் முன்பு சிவாலயம் இருந்ததாகவும் தற்போது திருமால் கோயில் பிரபலமாக உள்ளதையும் அறியலாம்.

**பஞ்சகங்கை:** கயிலாயத்தில் சிவபிரானது ஐந்து முகங்களின் ஐந்து ஜடைகளிலிருந்து பஞ்சகங்கைகள் தோன்றியதாக சிவரகசியம் எனும் புராணம் கூறும். அவை முறையே ரத்னகங்கை, தேவகங்கை, கயிலாய கங்கை, உக்ரகங்கை,

மலரில் மணம் இருப்பதுபோல உன்னுள்ளத்தில் கடவுள் இருக்கிறார்.

பிரம்மகங்கை ஆகியவை.

**பஞ்சகோஷ்டம்:** சிவன் கோயில்களில் கருவறை வெளியே உள்ள சுவர்களில் மாடம் (கோஷ்டம்) அமைத்து தென் புறச்சுவரில் விநாயகர், தட்சிணாமூர்த்தியும் மேற்குச்சுவரில் விஷ்ணு அல்லது லிங்கோத்பவர் அல்லது அர்த்தநாரீச்வரர் மூர்த்தியும், வடக்குச் சுவரில் பிரம்மா, துர்க்கை ஆகியோரையும் கோஷ்ட மூர்த்தங்களாகப் பிரதிஷ்டை செய்வார்கள்.

**பஞ்சஅமிர்தம்:** அபிஷேகப் பொருட்களில் சிறப்பிடம் பெறுவது பஞ்சாமிர்த அபிஷேகமாகும். மலைவாழைப் பழம், நாட்டுச் சர்க்கரை, தேன், நெய், பசும்பால் ஆகியவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட அளவில் சேர்த்துத் தயாரிக்கப் படுவது.

**பஞ்சநிறத்தன்:** சிவபெருமான் சதாசிவ மூர்த்தியாக விளங்கும்போது சிவப்பு, குங்குமப்பூ, வெண்மை, கறுப்பு, ஸ்படிகம் ஆகிய ஐந்து வண்ணம் உடையவராகக் காட்சியளிப்பார். இதனை மணிவாசகர் 'நிறங்கள் ஓர் ஐந்துடையாய்' என்று சிவபுராணத்தில் குறிப்பிடுவார். திருச்சி, உறையூர், திருநல்லூர் ஆகிய தலங்களில் இறைவனுக்கு 'பஞ்சவர்ணேச்வரர்' என்னும் பெயர் உண்டு.

**பஞ்சதட்டு தீபாராதனை:** சிவன் கோயில்களில் தீபாராதனை நடைபெறும் சமயம் ஐந்து தட்டுகளில் திரிவைத்து, நடுவில் குடதீபத்தை வைத்து அவற்றை சிவபெருமானின் ஐந்து முகங்களின் பெயர்களை (ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம்) சொல்லி தூப தீபம் காட்டி, பிறகு ஒவ்வொரு தட்டாக தீபம் ஏற்றி சுவாமிக்கு உபசரிப்பார்கள்.

**பஞ்சசோதகம்:** சிவபிரானுக்கு அபிஷேகத்தின்போது ஐந்து அபிஷேகங்களை விசேஷமாகக் கூறுவர். 1. வில்வோதகம் (நீரில் வில்வ இலைகளைப் போட்டு அபிஷேகித்தல்) 2. ரத்னோதகம் (ரத்தினங்கள் இட்ட நீர்) 3. கந்த தோதகம் (பச்சைகற்புரம், கிராம்பு, குங்குமப்பூ, விளாமிச்சைவேர் முதலிய வாசனைத் திரவியங்கள் கலந்த நீர்) 4. குசோதகம் (தர்ப்பைப்புல் போட்ட நீர்) 5. பலோதகம் (பழச்சாறுகள் கலந்த நீர்) ஆகியவை பஞ்சோதகம் என்று பெயர்.

**பஞ்ச பல்லவம்:** அரசு, அத்தி, வில்வம், மா, நெல்லி ஆகியவற்றின் தளிர (துளிர்)களை நீரில் இட்டு அதனால் அபிஷேகம் செய்வது பஞ்சபல்லவம் என்று பெயர். மேற்படி ஐந்து மரத்தின் இலைகளை (பத்திரம்) கொண்டு சிவனை அர்ச்சிப்பது பஞ்சபல்லவ அர்ச்சனை எனப் படும்.

**பஞ்சரிஷிகள்:** சிவனை பூசித்த ரிஷிகளில் பஞ்சரிஷிகள் என்பவர்கள் அகஸ்தியர், புலஸ்தியர், துர்வாசகர், ததீசி, வசிஷ்டர் ஆகியோர். இவர்கள் சிவபிரானின்



அதிகம் சொல்ல விரும்புபவன் குறைவான வார்த்தைகளையே பயன்படுத்துவான்.

ஐந்து முகங்களிலிருந்து தோன்றியவர்கள் என்பர்.

**பஞ்சநந்திகள்:** காஞ்சிபுரம், திருவிடைமருதூர், விருத்தாசலம், திரு வண்ணாமலை போன்ற ஊர்களில் மிகப் பெரிய சிவாலயங்களில் 'பஞ்சநந்திகள்' எனப்படும் ஐந்து ரிஷபங்கள் விசேஷ மாகக் காணப்படும். 1. போகநந்தி - கோயிலுக்கு வெளியே (வாயிற்புறம்) உள்ளது. இதனை இந்திர நந்தி என்றும் அழைப்பர். 2. வேத நந்தி என்னும் பிரம்மநந்தி - மிகப் பெரிய நந்தியாக (பெரும்பாலும்) சுதையினால் அமைக்கப் பெற்றது. 3. ஆத்மநந்தி - பிரதோஷ காலங்களில் இந்த நந்திக்குத் தான் விசேஷமாக வழிபாடுகள் நடைபெறுகிறது. (கொடிமரத்தருகில் உள்ளது) 4. மகாநந்தி என்னும் மால்விடை (திருமால் வெள்விடையாக - நந்தியாக வந்து திரிபுர சம்ஹாரத்தின் போது உதவிய கோலம். இதுவே மகா மண்டபத்திலுள்ள நந்தியாகும். 5. தரும நந்தி - இறைவனுக்கு அருகில் அமைந்திருக்கும் (சில கோயில்களில் வாயிலின் உட்புறம் அதிகார நந்தி சந்நிதி இருக்கும்).

**பஞ்சபருவ உற்சவம்:** திருக்கோயில்களில் ஐந்து உற்சவங்கள் பருவ உற்சவங்கள் என்பர். அவை, 1. அமாவாசை 2. பௌர்ணமி 3. கிருஷ்ண பட்ச அஷ்டமி 4 கிருஷ்ண பட்ச சதுர்த்தசி 5. மாதப்பிறப்பு முதலியனவாகும்.

நன்றி - சக்தி விகடன்

---

# ஆண்டருள்வான் முருகன்!

சிந்தையில் உறைபவன்
செந்தமிழ்க் குமரன்!
செல்வச் சந்நிதி வாழும் அழகன்!
முந்தை வினை போக்கி
முத்தி அளிப்பவன்
முன்னின்று எமைக்காக்கும் முருகன்! .... (சிந்தை)
தந்தைக்கு உபதேசம்
செய்திட்ட மைந்தன்!
தரணியை வலம் வந்த வேலன்!
கந்தா! குகா! என்று
கருணையோடழைப்போர்க்கு
காட்சி தரும் உமை பாலன்!.... (சிந்தை)
போற்றித் துதிப்போர் தம்
பொல்லா வினைகளினை
போக்கிடுவான் முருகன்! தொண்டைமான்
ஆற்றங் கரைதனிலே
ஆலயங் கொண்டெம்மை
ஆண்டருள்வான் எங்கள் இறைவன்! (சிந்தை)

நீ. குலசேகரன்

---

அடித்தால் முதுகில் அடி வயிற்றில் அடிக்காதே.

உ

க.பொ.த. (உயர்தர) மாணவரின் மேலதிக வாசிப்பிற்குரியது

# ஆதீனங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

இந்துசமயம் சார்ந்த தளத்தில் சமயப் பணியையும் சமூகப் பணியையும் முன்னெடுக்கும் நிறுவனங்களில் ஆதீனங்களும் மடங்களும் முக்கியமானவை. சைவ மடங்களுடைய எண்ணிக்கை பதினெட்டாகும் என்று தவத்திரு ஊரன் அடிகளார் குறிப்பிடுகின்றார். அவற்றுள் பதினேழு தமிழகத்திலும் ஒன்று இலங்கை வரணியிலும் இருப்பதாக அவர் சுட்டுகின்றார்.

மடம் என்பது துறவிகளின் இருப்பிடம் என்ற பொருளில் அமைகிறது. இது எமது சமயத்திற்கு மட்டுமன்றி கிறிஸ்தவம் உள்ளிட்ட ஏனைய சமயங்களுக்கும் பொருந்தும். சத்திரங்கள், மடங்களை நிறுவுவது புண்ணியச் செயலாகக் கருதப்பட்ட மையால் நிதிவளம் படைத்த பெரியோர் தத்தம் ஊரில் இவற்றை நிறுவினர். கோவில்களைச் சார்ந்து திருமண மண்டபம் அமைக்கும் பண்பாடு இன்று தோற்றம் பெற்றுள்ளது. முற்காலங்களில் கோவிலைச் சார்ந்ததாக மடங்களையே நிறுவினர். இம்மடங்களின் படிநிலை வளர்ச்சியே ஆதீனங்களாகும்.

ஆதீனங்கள் மடங்களிலிருந்து வேறுபட்டவை. இவை பிரதானமாகச் சமயப் பணிக்கென்றே நிறுவப்பட்டவை. சமய, சாத்திரக் கல்வியைப் போதித்தல், ஆய்வுகள் நடாத்துதல், நூல் வெளியீடு செய்தல், அரிய நூற்சுவடிகளைத் தேடிப் பெற்றுப் பாதுகாத்தல். கோயில்களைப் பராமரித்தல் முதலிய புனிதப் பணிகளை ஆதீனங்கள் மேற்கொண்டு வருகின்றன.

## ஆதீனங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

சங்க மருவிய காலத்தில் சமண, பௌத்தத் துறவிகள் பள்ளி அமைத்து அங்கு தங்கியிருந்து சமயப் பணிபுரிந்தனர். பள்ளிக் கூடம் என்ற சொல்லும் இவர்கள் அமைத்த பள்ளியில் இருந்து வந்ததாகும். சமண, பௌத்தர்கள் அமைத்த பள்ளிகளில் வழிபாட்டிடங்கள், போதனா நிலையங்கள், நூல் நிலையங்கள் போன்றன நிறுவப்பட்டிருந்தன. இங்கு வாழ்ந்த துறவிகள் சமயப் பிரசாரத்தில் ஈடுபட்டு மக்களிடம் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். இச்சூழ்நிலையிலேயே அதாவது போட்டித்தளத்திலேயே சைவ, வைணவ ஆதீனங்கள் தோற்றம் பெற்றன.

வேத காலத்தில் சமயக் கல்வி போதிப்பதற்கென அமைந்த இடம் பர்ணசாலை எனப்பட்டது. இவற்றில் துறவிகளும் அந்தணரும் இருந்து சமயப் பணி புரிந்தனர்.

---

மனத்தூய்மை இல்லாமல் ஒரு காரியத்தையும் சாதிக்கமுடியாது.

இப்பர்ணசாலை மரபு சமண, பௌத்தப் பள்ளிகளுக்கு முற்பட்டதாகும்.

பல்லவர் காலத்தின் பிற்பகுதியிலேயே தமிழகத்தில் மடாலயங்கள் தோற்றம் பெற்றன. மடங்கள் ஆலயங்களைச் சார்ந்து எழுந்தமையால் மடாலயம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். மடாலயங்களின் தோற்றத்தால் நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பு முறை எமது சமயத்தில் உருப்பெற்றது. திருமூலர் ஏழு மடங்கள் பற்றிக் குறிப்பிடு கின்றார். அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குருநாதர் இருந்துள்ளனர். அவர்கள் மூலர், காளங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர் என்போராவர்.

சோழ அரசர்கள் பிரமாண்டமான கோவில்களைக் கட்டினர். இச்சூழலில் மடங் களும் பலவாறாகப் பெருகின. இம்மடங்கள் அரசன் பெயராலோ(குலோத்துங்க சோழன் மடம்), நாயன்மார் பெயராலோ (திருவீழிமிழலை திருநாவுக்கரசர் மடம், திருச்செங் காட்டங்குடி சிறுத்தொண்டர் திருமடம்), இறைவன் பெயராலோ (ஆவடுதுறை நீலவிடங் கன் மடம், திருவீழிமிழலை அழகிய சிற்றம்பலமுடையார் மடம்) வேறு பெயராலோ (ஆவடுதுறை திருவீதி மடம், அண்ணாமலை தன்மவாணிகர் மடம்) அழைக்கப்பட்டன.

சோழர் காலத்தில் சைவசமயத்தில் பல கிளைச் சமயங்கள் பரவியிருக்கின்றன. காளாமுகர், கபாலிகர், வீரசைவர் போன்ற கிளைச் சமயத்தினரும் தத்தம் சமயக் கொள்கைப் பிரசாரத்திற்கென மடங்களைத் தோற்றுவித்தனர்.

ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கராச்சாரியார் மடாலயங்களைப் பொறுத் தவரையில் ஒரு சாதனையை ஏற்படுத்தினர் எனக் குறிப்பிடுவர். பௌத்தர்களுடன் அடிக்கடி வாதம் புரிந்து வெற்றியீட்டிய இவர் அவர்களது நிறுவன அமைப்புக்களை இந்து சமயத்திற்குக் கொண்டு வந்தார். பாரதத்தில் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை இவர் அமைத்தார். அவையாவன வரிதி, துவாரகை, பூரி, காஞ்சிபுரம் என்பனவாகும். இவற்றோடு சிருங்கேரியிலும் ஒரு மடம் அமைத்தார். பிரம்மச்சரிய விரதம் மேற்கொண்டு தீட்சை பெற்ற சந்நியாசிகள் இங்கு தங்கியிருந்து அத்வைதக் கோட்பாட்டைப் போதித்தனர். இவர்களுக்கென பிரத்தியேக வர்ணத்தில் ஆடைகளும் (சீருடை) வழங்கப்பட்டன.

சங்கராச்சாரியாரைப் பின்பற்றியே பல மடாலயங்கள் தமது கட்டமைப்பைத் திருத்திக் கொண்டன. அத்வைத வேதாந்தப் பிரிவுகள் வளரும் நிலையில் ஏனைய பிரிவினரும் மடங்களை நிறுவினர். தமது கொள்கைகளைப் பரப்புரை செய்தனர். அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் என்னும் மூவகை வேதாந்தப் பிரிவுகள் தென்னந்தியாவில் வரையறுக்கப்பட்டன. இவர்களைச் சார்ந்தோர் மத்தியில் போட்டி ஏற்பட்ட . சூடான விவாதங்கள் போட்டிகள் இடம்பெற்றன. இத்தகைய சூழ்நிலையில் மடங்கள் கட்டிறுக்கமாகப் பேணப்படும் நிலை உருவானது.

---

இன்பமும் துன்பமும் ஞானிகளுக்கு இல்லை.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் மூன்றாம் இராஜராஜ சோழனின் ஆட்சியுடன் சோழராட்சி முடிவுக்கு வருகின்றது. வடக்கே வலுப்பெற்ற இஸ்லாமியர் தமிழகத்திற்குப் படையெடுத்துவந்தனர். ஒரு கையில் வாளுடனும் மறு கையில் குரானுடனும் வருகை தந்தனர் என வரலாற்றாசிரியர் இச்சம்பவத்தைக் குறிப்பிடுவர். தென்னாட்டில் சைவத்தைக் காக்க விஜய நகர மன்னர்கள் தோற்றம் பெற்றனர். இவர்கள் சைவ சமயம் சார்ந்தவர்கள். ஆனால் அடிக்கடி போர் நிகழ்ந்த வண்ணம் இருந்தது.

சைவ சமயத்தைப் பாதுகாப்பதில் விஜய நகர மன்னர்கள் ஆதரவு வழங்கினர். இன்று பிரசித்தி பெற்று விளங்கும் பல மடாலயங்கள் இக்காலத்திலேயே தோற்றம் பெற்றன. மடாலயங்களை ஆதீனம் எனக் குறிப்பிடும் வழக்கம் இக்கலத்திலேயே ஏற்பட்டது. ஆதீனம் என்ற வடசொல்லுக்கு உரிமை என்று பொருள்.

இஸ்லாமியப் படையெடுப்புக்களால் பாதிக்கப்பட்ட சமயாபிமானம் கொண்ட அறிஞர்கள் பலர் சமயம், தத்துவம் சார்ந்த ஏட்டுச் சுவடிகளுடன் தமிழகத்திற்கு வந்தனர். இவர்களுடைய நிலைக்களனாகவும் ஆதீனம் விளங்கியது.

தமிழகத்தில் இஸ்லாமியப் படையெடுப்புக் காரணமாக இந்துசமயம் ஈடாட்டம் கண்டிருந்தது. இச்சூழ்நிலையில் இந்துப் பண்பாட்டையும் சமயக் கோட்பாடுகளையும் கட்டிக்காக்கும் நிலைக்களங்களாக ஆதீனங்களே விளங்கின. இதனால் புதிதாகத் தோன்றிய ஆதீனங்களுக்கு மன்னர்களும் பிரதானிகளும் பெருமளவு பொருளுதவிகளைப் புரிந்தனர்.

ஐரோப்பியர் காலத்தில் ஆதீனங்களுடைய செயற்பாட்டில் தளர்ச்சி நிலை ஏற்பட்டது. ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய விழிப்புணர்வு ஆதீனங்களின் மீள் எழுச்சிக்குத் துணை செய்தது. ஆசாரிய பரம்பரை ஒன்று பேணப்படும் நிலை உருவாகி வளர்ச்சி பெற்றது.

ஒரு ஆதீனத்தின் தலைவர் அதாவது மடாதிபதி ஞானதேசிகர் அல்லது தேசிகர் அல்லது சுவாமிகள் என அழைக்கப்படுவார். ஒரு தேசிகர் தமது காலத்திலேயே அடுத்த மடாதிபதியைத் தேர்ந்தெடுத்து நியமித்துவிடுவார். இவரை இளவரசு அல்லது சின்னப்பட்டம் எனக் குறிப்பிடுவர். ஆசாரிய அபிஷேகம் பெறாது துறவு பூண்ட திருத்தொண்டர்கள் தம்பிரான்கள் எனப்படுவர். இவர்களைத் தவிர ஆதீன வித்துவான்கள், ஓதுவார்கள், இசை வாணர்கள், கட்டளைத் தம்பிரான்கள், என்பவர்களும் ஆதீனத்தில் இருப்பர்.

ஒவ்வொரு ஆதீனம் பற்றிய அறிமுகத்தை அடுத்த இதழில் நோக்குவோம்.


(தகவல்கள்: இந்து கலைக்களஞ்சியத்திலிருந்து பெறப்பட்டவை)

---

வைராக்கியம் வலிமைபெறும் அளவு மனிதன் அமைதியை அனுபவிக்கிறான்.

# ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின்

## 25 ஆவது குருபூசைத் தினம் (15.08.2010)



**மேற்படி சுவாமி அவர்களின் குரு பூசை நிகழ்வு 15.08.2010 ஞாயிற்றுக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் பக்தி பூர்வமாக இடம்பெறும்.**

உ

# செய்திச் சிதறல்கள்

- காரைநகர் வியாவில் பதி ஆதிஷேத்திரமாக விளங்கும் ஐயப்பசுவாமிக்கு நிகழும் விகிர்த்தி வருஷம் ஆடித்திங்கள் 15ஆம் நாள் 31.07.2010 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் திவ்விய மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும்.
- பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் ஆலயத்தில் 18.07.2010 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்யாண வேலவரின் புகழ்கூறும் "ஆசை கொண் டேன் கந்தவனக் குமரா" என்ற ஒலிப்பேழை வெளியிடப்பட்டது.
- பொலிகண்டி தியலம்பற்றை வீரபத்திரர் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்று மறுநாள் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை காத்தவராயன் கழுவேறிக்கு வேள்வியும் இடம்பெறும்.
- அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் மகோற்சவம் 29.07.2010 காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா நடைபெற்று, ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தீர்த்தத்திருவிழா வும் மறுநாள் வைரவ சுவாமி அபிஷேகமும் நடைபெற்று, 29.07.2010 தொடக்கம் 12.08.2010 ஆம் திகதி வரை இரவு 9 மணிக்கு விசேட சொற்பொழிவு நடைபெறும்.
- கோண்டாவில் கிழக்கு பலாலி வீதியில் அமைந்துள்ள அற்புத நர்த்தன விநாய கப் பெருமானுக்கு புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் விகிர்தி வருஷம் ஆனி மாதம் 31ஆம் திகதி (15.07.2010) வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் 10.00 மணிவரை நடைபெற்றது. அதன் பின் கிரியா கால வைபவமும் இடம்பெற்றது.
- தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் திருவிழா விகிர்திவருடம் ஆடி மாதம் 27ஆம் நாள் (12.08.2010) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்ற வைபவம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மஹோற்சவம் நடைபெறும்

உண்மையான அமைதி நீதியின் கனியாகும்.

உ

(தொடர்ச்சி...




14.05.2010 வெள்ளி அன்று மாலையில் பாண் சற்று தாமதமாகத்தான் வரும் என்கிற தொலைபேசிச் செய்தி ஆச்சிரமத்து சுவாமிகளுக்கு வருகின்றது. இப்படியான நேரங்களில் ஒரு மாற்று ஏற்பாடு செய்து தயார் நிலையில் இருப்பது சுவாமிகளின் வழக்கம். அதன்படி ஆலயத்தில் தங்கி உள்ள முதியோருக்கான உணவும் வழங்கப்பட்டுவிட்டது. உரும்பராயில் இருந்து கணபதி வெதுப்பக உரிமையாளரின் மனைவியும் மகனுமாக தமக்குரிய மோட்டார் சைக்கிளில் ஆச்சிரமத்திற்கு வழங்கும் பாணையும் ஒரு உரப்பையில் எடுத்துக்கொண்டு வருகின்றார்கள். நேரம் 6.30ஐத் தாண்டிவிட்டது. மோட்டார் சைக்கிள் புத்தூரை அண்மித்து விட்டது. திடீரென அவர்கள் வந்த மோட்டார் சைக்கிளின் பின் சில்லுக் காற்றுப் போய்விட்டது. "முருகா என்ன சோதனை" என்று மனவேதனையுடன் புத்தூர் சந்திக்கு அண்மையில் உள்ள ரியூப் ஒட்டும் கடையில் ஒட்டிக்கொண்டு மீண்டும் சந்நிதி நோக்கி வருகின்றார்கள்.

மீண்டும் சோதனை தொடர்கிறது. நெல்லியடிக்குப் பிரிந்து செல்கின்ற இராணுவ முகாம் உள்ள வல்லைச் சந்தியில் மீண்டும் காற்றுப் போய்விட்டது. பாண் முடிச்சுடன் மோட்டார் சைக்கிளையும் உருட்டிக் கொண்டு செல்லிடத் தொலைபேசியினூடாக சுவாமி அவர்களுக்கு தகவல் போகின்றது. தமக்கு ஏற்பட்ட இடரைச் சொல்லி ஆச்சிரமத்திலிருந்து யாராவது ஒருவரை அனுப்பி பாண்முடிச்சை எடுப்பதற்கு ஆவன செய்யுமாறு கூறியதற்கிணங்க சுவாமி அவர்கள் ஆச்சிரமத்திலிருந்து மோட்டார் சைக்கிளுடன் தனது மகனை அனுப்பி திருமதி தவேந்திரநாதனையும் பாண்முடிச்சையும் ஏற்றி வருமாறு பணித்தார். அச்செயற்பாட்டின் மூலம் அக்காரியம் நிறைவேற்றப்பட்டது. சிறிது நேரத்தில் மகனும் மோட்டார் சைக்கிளை உருட்டிக் கொண்டு ஆச்சிரமத்தை அடைந்தார்.

நேரமோ இரவு 8 மணியை அண்மித்துவிட்டது. தாங்கள் இருவரும் சந்நிதியானைத் தரிசித்துவிட்டு திரும்பி உரும்பராயைச் சென்றடைய வேண்டும். என்ன செய்வது என்று தெரியாமல் மனம் கலங்கி வேதனைப்பட்டு தங்களுக்கு ஒரு காலமும் இப்படியான சோதனை ஏற்படவில்லை. ஏனோ தெரியவில்லை. இம்முறை இப்படி ஏற்பட்டுவிட்டது என்று சுவாமி அவர்களிடம் கூறினார்கள். சந்நிதி வேலவனைத் தரிசிக்க சந்நிதி ஆலயத்திற்கோ ஆச்சிரமத்திற்கோ வருபவர்கள் மனநிறைவுடன் தான் திரும்பிப் போகவேண்டும் என்ற கோட்பாட்டினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மனநிறைவைக் கண்டு கொண்டிருக்கும் ஆச்சிரம சுவாமி அவர்கள் ஒரு கணநேர சிந்தனைக்குப் பின் நடப்பதெல்லாம் நன்மைக்கே. நீங்கள் இருவரும் முதலில்

சந்நிதியானை வணங்கிவிட்டு வாருங்கள். நீங்கள் போவதற்குரிய ஒழுங்கினைச் செய்கின்றேன் என்று கூறியதன் பிரகாரம் தாயும், மகனும் மன ஆறுதலுடன் சந்நிதியானை தரிசிக்கச் சென்றார்கள்.

ஏதோ ஒரு காரணத்தினால்த் தான் தாய்க்கும் மகனுக்கும் இச் சோதனை இடம்பெற்றிருக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் சுவாமி அவர்கள் வெள்ளிக்கிழமை அன்று இடம்பெற்ற அன்னதானச் செயற்பாட்டின் மூலம் சிறிது களைப்புற்று இருந்தாலும், அதே நிலையில் உள்ள தனது மகனை அழைத்து நடந்த சம்பவத்தைக் கூறி திருமதி தவேந்திரநாதனையும் அவரது மகனையும் அத்துடன் மோட்டார் சைக்கிளையும் ஆச்சிரமத்துக்குரிய 'ஹண்டர்' வாகனத்தில் ஏற்றிக் கொண்டுபோய் உரும்பராயில் விட்டு வருமாறு பணித்ததுடன் காற்றுப் போயிருந்த சில்லுக்கு காற்று அடித்ததோடு, தொண்டைமானாறு சந்தியிலுள்ள கடையிலிருந்தும் மோட்டார் சைக்கிளுக்குரிய ஒரு புதிய 'ரியூப்'பினையும் வாங்கி கைவசம் வைத்திருந்தார். சுவாமி அவர்கள் ஆரம்பத்தில் மோட்டார் சைக்கிளுக்கு புதிய ரியூப்பினை மாற்றி காற்று அடித்து அவர்களை அனுப்பி வைப்போம் என்ற சிந்தனை இருந்தாலும் நேரம் இரவு 8 மணிக்கு மேலாகிவிட்டதால் தாயையும் மகனையும் தனித்து மோட்டார் சைக்கிளில் அனுப்ப சுவாமி அவர்களின் மனம் இடம் தரவில்லை. அவ்வகையில்த்தான் பரீட்சார்த்தமாக காற்றுப்போன சில்லுக்கு காற்று அடிப்பித்ததும் புதிய ரியூப் வாங்கி வைத்ததும்.

திருமதி தவேந்திரநாதனும் அவரது மகனும் சந்நிதி வேலவனைத் தரிசிக்கும் பொழுதுதான் மகனுக்கு ஒரு உண்மை புலப்பட்டது. திரு தவேந்திரநாதனும் மனைவியும் சந்நிதியான் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்தாலும் தற்கால இளஞ் சந்ததியினருக்கு இவ்வகையான இறை நம்பிக்கை குறைவு. பெற்றோரைப் போலவே மகனையும் ஆட்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் சந்நிதி வேலவன் நடாத்திய காரியம். சந்நிதி ஆலயத்தை அடைந்து அவனை மனமுருகி வேண்டிய தாயும் மகனும் ஆலய முகப்பில் வந்து அமர்ந்து அன்று தங்களுக்கு நேர்ந்த சம்பவத்தை மீட்டுப் பார்த்தனர். பொதுவாக எமக்கு ஏதும் இடையூறு ஏற்படும் காலங்களில் நாம் யாருக்கும் ஏதும் கெடுதல் செய்து விட்டோமா? அதன் காரணமாகத்தான் இக்கஸ்ற்றம் எமக்கு ஏற்பட்டதா? என சிந்திப்பது மனித இயல்பு. தங்களுக்கு ஏற்பட்ட இடைஞ்சலை மீட்டுப் பார்க்கும்போதுதான் மகனுக்கு ஒரு உண்மை புலப்பட்டது. அவர் தன் தாயாரைப் பார்த்து சந்நிதியானுக்கு விருப்பமில்லாத ஒரு காரியத்தை செய்ததனால்த்தான் இச்சம்பவம் இடம்பெற்றது என்பதை தன் மனதில் உள் வாங்கி நடைபெற்ற சம்பவத்தை ஆலய வாசலில் சந்நிதியானை வணங்கிவிட்டு இருந்த தனது தாயாரிடம் கூறினார்.

பிரதி வெள்ளிதோறும் மாலை சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு இருபது நாத்தல் பாணை வழங்குவது கணபதி வெதுப்பக உரிமையாளராகிய தவேந்திரநாதன் அவர்களது வழமையான செயற்பாடு. 14.05.2010 வெள்ளிக்கிழமையன்றும் இருபது றாத்தல் பாணை ஒரு உரப்பையில் போட்டு வைத்திருந்தார். அவரால் அன்றைய தினம் வரமுடியாத சூழல் ஏற்பட்டதன் காரணமாக திருமதி தவேந்திரநாதனுடன் மகனையும் அனுப்பி வைத்தார். வழமையாக ஆட்டோவில் வருபவர்கள் தாயும் மகனுமாக, மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார்கள். மோட்டார் சைக்கிளில் தனது தாயார் பாணைக் கொண்டு வருவதற்காக பெரிய பையில் இருந்த பாணை சிறிய பையில்

எடுத்து வைத்தார். பதினெட்டு றாத்தல் பாணை வைக்கும் பொழுது பை நிறைந்து விட்டது. அதனால் மீதியாகவுள்ள இரண்டு றாத்தல் பாணையும் விட்டு விட்டு தாயாரையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வரும்போதுதான் இச்சம்பவம் இடம்பெற்றது. பாண் குறைவாக எடுத்து வைத்த விபரம் திருமதி தவேந்திரநாதனுக்கு தெரியாது. இவ்விடயத்தை சந்நிதி ஆலய வாசலில் அமர்ந்திருந்த தாயாரிடம் மகன் சொன்ன போது, இரண்டு றாத்தல் பாணை குறைத்துக்கொண்டு வந்த குற்றத்துக்காக இத்தனை செலவும் சிரமமுமா? முருகன் தந்த சோதனையையும் தங்களது கவனக் குறைவையும் மனதில் நிறுத்திய திருமதி தவேந்திரநாதன் போதாததற்கு ஆச்சிரம சுவாமி அவர்களுக்கும் சிரமத்தைக் கொடுத்து விட்டோமே என்று மனதிற்குள் வேண்டியபடி ஆலய வாசலிலிருந்து தாயும் மகனுமாக ஆச்சிரமத்திற்குப் புறப்பட்டார்கள்.

"வாங்கோ! முருகன் அழைத்திருக்கிறான் போலை. ஆனா... இந்த வேளையில்.... எப்படி....? என வியந்து கேட்கிறார் இவர்களுக்கு நன்கு அறிமுகமான ஓர் அன்பர். இவர்களுக்கு ஒரே வியப்பும் - மகிழ்வும். உரும்பராய் கிழக்கு பூதவராயர் கோயிலடியைச் சேர்ந்த ஆ. யோகராசா என்பவரே இவர்களைக் குசலம் விசாரித்த அந்த அன்பராகும். இவர் தனது Hiace (வான்) வாகனத்தில் தானும் குழந்தையுமாக சந்நிதியானைத் தரிசிக்க வந்திருக்கிறார்கள். இரவு நேரம் - தானும் குழந்தையும் மட்டுமே - தனிவழிப்பாதை - வழியில் ஏதாவது தடங்கல் ஏற்பட்டால் - என யோசனையில் இருந்த யோகராசாவுக்கும் தாயையும் மகனையும் கண்டதும் பேரானந்தம். பெருநிம்மதி.

ஆச்சிரமத்தில் இடம்பெறும் குறை நிறைகளை சந்நிதியான் தீர்த்து வைப்பதை பல அனுபவங்கள் மூலம் உணர்ந்திருந்த திருமதி தவேந்திரநாதனிடம் அன்று நடந்த இச்சம்பவத்தின் மூலம் அவரது மகன் **"இந்த முருகன் பொல்லாதவன், இரண்டு றாத்தல் பாணைக் குறைத்ததற்காக பாணின் விலையிலும் பார்க்க கூடிய காசை ரியூப் ஒட்டுவதற்கும் கொடுப்பித்து, இவ்வளவு தூரம் மோட்டார் சைக்கிளை உருட்டப்பண்ணியும் கடைசியில் வாகனத்தை அனுப்பி நோகாமல் நாம் போவதற்கும் ஒழுங்கு பண்ணியுள்ளாரே"** என்று கூறியதாக திருமதி தவேந்திரநாதன் சுவாமி அவர்களிடம் கூறினார்கள்.

சந்நிதியான் வாசலுக்கு நடந்து போனவர்கள், Hiace வாகனத்தில் வந்திறங்கியது கண்டு ஆச்சிரம சுவாமிகளுக்கு பெரிய ஆச்சரியம். Hiace வாகனத்து அன்பர் திரு. யோகராசா ஏற்கனவே ஆச்சிரமத்தோடும், சுவாமிகளோடும் தொடர்புள்ளவர். சொற்ப நேரம் அனைவருடனும் அளவளாவியதன் பின்னர், அனைவரையும் Hiace வாகனத்தில் அனுப்பி வைத்தார் சுவாமிகள். மறு நாள் ஒரு மோட்டார் சைக்கிளில் இருவர் வந்து, விடப்பட்ட மற்ற மோட்டார் சைக்கிளையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். எப்படி? முதல் நாள் இரவு காற்றுப்போன சில்லுக்குக் காற்றடிப்பித்து வைத்தாரே சுவாமிகள். காலையில் பார்த்த போதும் காற்று சற்றேனும் குறையாமல் இருந்த அதே வண்டியினை எடுத்துக்கொண்டு இருவரும் வீடு திரும்பினர்.

சிறிய ஒரு தவறுக்குத் தண்டனை அளிப்பது போலக் காட்டி, அவர்களுக்கு வசதிகளும் செய்து கொடுத்து, அன்பர் யோகராசாவின் சஞ்சலத்தையும் தீர்த்து நலமே அனைவரையும் வீட்டுக்கு அனுப்பி வைத்த முருகன் கருணையே கருணை. அவனது திருவிளையாடலை என்னவென்று சொல்வது? "சந்நிதி முருகன் சோதிப்பான். ஆனால் கைவிடமாட்டான்" என்ற நிதர்சனமான உண்மை இச்சம்பவத்தின் மூலம் புலனாகிறது அல்லவா!

ஓம் முருகா!

உ

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தையொட்டி ஆச்சிரம மண்டபத்தில் 10.08.2010 தொடக்கம் 21.08.2010 சனிக்கிழமை வரையான விசேட நிகழ்வுகள்

**10.08.2010 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் : "பஜனை"

வழங்குபவர்கள் : வடபிராந்திய சாயி சமித்தி

**11.08.2010 புதன்கிழமை**

சொற்பொழிவு : "அடியார் பூசையும் அரன் பூசை நேசமும்"

வழங்குபவர் : சைவப் புலவர் A. அனுஷாந்தன் (ஆசிரியர்)

**12.08.2010 வியாழக்கிழமை**

சொற்பொழிவு : "பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

வழங்குபவர் : சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் (ஆசிரிய ஆலோசகர்)

**13.08.2010 வெள்ளிக்கிழமை**

சொற்பொழிவு : "நலம் தரும் நம்பிக்கை"

வழங்குபவர் : கீழ்க்கரவை நவரத்தினம் (ஆசிரியர்- ஹாட்லிக் கல்லூரி)

**14.08.2010 சனிக்கிழமை**

சொற்பொழிவு : "திருவாசகத்தேன்"

வழங்குபவர் : K. கைலநாதன் (ஆசிரியர்)

**15.08.2010 ஞாயிற்றுக்கிழமை**

விடயம் : "ஸ்ரீமத் மயில் வாகன சுவாமிகள் குருபூசை

இசைச்சொற்பொழிவு : "குருவாய் வருவாய்" வழங்குபவர் : க. ஆனந்தராசா

**16.08.2010 திங்கட்கிழமை**

சொற்பொழிவு : "ஒரு கடவுள் மகிழ்தரு துணைவன்"

வழங்குபவர் : திரு ச. லலீசன்

(விரிவுரையாளர் - ஆசிரிய பயிற்சி கலாசாலை, கோப்பாய்)

---

இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே

**17.08.2010 செவ்வாய்க்கிழமை**

சொற்பொழிவு : "உதித்தனன் உலகம் உய்ய"

வழங்குபவர் : மதுரகவி காரை. M.P. அருளானந்தன்

(ஆசிரியர் - ஸ்ரான்லிக் கல்லூரி)

**18.08.2010 புதன்கிழமை (பூங்காவனம்)**

சொற்பொழிவு : "குன்று தோறாகும் குமரன்"

வழங்குபவர் : திரு. ஆ. சிவநாதன்

(அதிபர் - சிவகுரு வித்தியாசாலை)

**19.08.2010 வியாழக்கிழமை**

சொற்பொழிவு : "ஆறுபடையா ஆற்றுப்படையா"

வழங்குபவர் : இரா. செல்வவடிவேல் (ஆசிரியர்)

**20.08.2010 வெள்ளிக்கிழமை**

சொற்பொழிவு : "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் : அ. குமாரவேல்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். கல்லூரி வட்டுக்கோட்டை)

**21.08.2010 சனிக்கிழமை**

சொற்பொழிவு : "கந்தன் கனியமுதம்"

வழங்குபவர் : சைவப்புலவர் க. நித்திய தசீதரன்

---

## ஆவணிமாத குருபூசை தினங்கள்

05. 09. 2010 ஆவணி 20 ஞாயிறு – செருத்துணையர், நீலகண்ட சிவாச்சாரியார் குருபூசை

06. 09. 2010 ஆவணி 21 திங்கள் – புகழ்த்துணையர், பதிபத்தர் குருபூசை

07. 09. 2010 ஆவணி 22 செவ்வாய் – இளையான் குடிமாறநாயனார் குருபூசை

09. 09. 2010 ஆவணி 24 வியாழன் – மறைஞானர் குருபூசை

14. 09. 2010 ஆவணி 29 செவ்வாய் – குலச்சிறையார் குருபூசை

16. 09. 2010 ஆவணி 31 வியாழன் – குங்கிலியக் கலையர் குருபூசை

ஒழுக்கத்தை விடச்சிறந்த உடை இல்லை

உ

தமிழகத் திருக்கோயில் வரிசை: தொடர்ச்சி...

# புள்ளிருக்குவேளூர்

## (வைத்தீஸ்வரன் கோயில்)

– வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்–

புள்(சடாயு), இருக்கு (வேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) இந்த நால்வரும் வழிபட்டமையினால் புள்ளிருக்கு வேளூர் என்ற பெயர் வந்தது. உயிர்களின் நோய்களைப் போக்கும் பொருட்டு உமாதேவி "தையல்நாயகி" ஆகி தைல பாத்திரமும் புற்று மண்ணும் கொண்டு தம்முடன் வர இறைவன் "வைத்திய நாதராகி" மருத்துவராயிருந்து அருள் செய்த சிறப்புடைய ஸ்தலமாகையால் "வைத்தீஸ்வரன் கோயில்" எனப்பட்டது. சிதம்பரம், சீர்காழி போன்று கோயிலும் ஊரின் பெயரும் ஒன்றாகவிருப்பதைப் பல இடங்களிலும் பார்க்கிறோம். "ஆனால் இங்கே ஊரின் தபால் முத்திரைப் பெயரே "வைத்தீஸ்வரன் கோயில்" என்றிருப்பதுவும், தமிழ் நாடு வரைபடத்தில் இந்த ஊரின் பெயர் "வைத்தீஸ்வரன் கோயில்" என்று குறிக்கப்பட்டிருப்பதும் தமிழ் நாட்டில் வேறு எங்கும் காணமுடியாத தனிச் சிறப்பு. நடுவே நாற்புறமும் சுவர்கள் சூழ்ந்த திருக்கோயில், கோயிலைச் சுற்றி கிராமம் என்றோ, நகரமென்றோ கூற முடியாத மக்கள் குடியிருப்புகள்.


கும்பகோணத்திலிருந்து வட கிழக்காக மயிலாடுதுறை 36 கி.மீ. தூரம். அங்கிருந்து வடக்கு நோக்கிச் சீர்காழி செல்லும் பாதையில் சரியாகப் 13 கி.மீ. தூரத்தில் உள்ளது வைத்தீஸ்வரன் கோயில். சடாயு வழிபட்டதால் "சடாயுபுரி"; வேதம் பூசித்ததால் "வேதபுரி"; கந்தன் வணங்கியதால் "கந்தபுரி"; சூரியன் நமஸ்கரித்ததால் "பரிதிபுரி" என்றும் சிறப்புப் பெயர்களுமுண்டு.

மேற்கேயும் கிழக்கேயுமாக இரு கோபுரங்கள் உண்டு. கிழக்குப் பக்கமாக பிரதான வீதி அமைந்துள்ளதால் பேருந்துகளில் வருபவர்கள் கிழக்கு வாயில் ஊடாகவே உள்ளே வருகிறார்கள். வைத்திய நாதரின் கருவறை மேற்குப் பார்த்தபடி அமைந்திருப்பதால் பெரும்பாலானவர்கள் மேற்குக் கோபுர வாசலையே பயன்படுத்துகிறார்கள். வைத்தியநாதர் முன்பாகவும் அம்பிகை தையல் நாயகி முன்பாகவுமாக இரண்டு கொடி மரங்கள் - நந்திகள் - பலிபீடங்கள் ஆகியவை காணப்படுகின்றன. மூலவரின் கருவறை வாசலில் இரண்டு பெரிய துவாரபாலகர்கள் உள்ளனர். மூலவர் சிறிய சிவலிங்கத் திருமேனி. மருந்தும் மந்திரமுமாகி அடியார்களுக்கு தீராத நோயெல்லாம் தீர்த்து வைக்கும் வல்லவனாகிய வைத்தியநாதரைக் கண்குளிரத் தரிசிக்கிறோம்.

அறவழியில் வராத செல்வம் தேய்ந்துவிடும்.

இறைவனுடன் தைல பாத்திரம் ஏந்தி அம்பிகை உடன் வந்தமையால் "தைலாம்பாள்" (தையல் நாயகி) என்னும் சிறப்புத் திருநாமத்தோடு தெற்குப் பார்த்தபடி நின்ற திருக்கோலத்தில் அம்பிகை அருள் பாலிக்கிறாள். அதனால் வழிபடுவோர் உள்ளத்தில் என்றும் மறையாமல் நிற்கும் திருக்கோலமாகவே உள்ளது.

மூலவருக்கு அருகிலேயே இக்கோயிலின் இன்னொரு சிறப்பு மூர்த்தமான ஸ்ரீ முத்துக்குமாரசாமியின் தனிச் சந்நிதி காணப்படுகிறது. ஒவ்வொரு கிருத்திகை நாளிலும், வைகாசி விசாகம், குமராலய தீபம், கந்தசஷ்டி போன்ற நாட்களிலும் முருகனுக்கு மிகச் சிறப்பான அபிஷேகம் நடைபெறுகிறது. ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஒரு முறையாவது இந்த அபிஷேகத்தைப் பார்க்க வேண்டும். அர்த்தசாமப் பூசை வேளையில் செல்வமுத்துக் குமாரசுவாமிக்கு வழிபாடு நடந்த பிறகே சுவாமிக்கு பூசை நடைபெறுவது இங்கு வழமையானதாகும். அருட்புலவராம் குமரகுருபரர் "எப்படிப் பாடுவேன்" என்று மயங்கி நின்றபோது முருகன் அவருக்கு "பொன்பூத்த குடுமி" என்று அடியெடுத்துக் கொடுக்க, குமரகுருபரர் "பிள்ளைத் தமிழ்" பாடி இப்பெருமானைப் போற்றியுள்ளார்.



நடராஜர் திருச்சபையில் சிவகாமியுடன் மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையாரும் உள்ளனர். அதனருகே வரிசையாக நால்வேதங்கள், கைலாசநாதர், மீனாட்சி சுந்தரேஸ்வரர், விஸ்வநாதர் ஆகிய மூர்த்தங்கள் வரிசையாகவுள்ளன. அடுத்து நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் உள்ளனர். வைரவர் சந்நிதியை அடுத்து இராமர், சடாயு, சுப்பிரமணியர், சூரியன், அங்காரகன் (செவ்வாய்) ஆகியோர் வழிபட்ட லிங்கங்களும், இதனைத் தொடர்ந்து அறுபத்து மூவரின் உற்சவ மூர்த்தங்களும் உண்டு. செவ்வாய் தோச நிவர்த்திக்குப் பெயர் போன இடம் இது. செவ்வாய்க்கிழமைகளில் தோச நிவர்த்தி வழிபாட்டுக்காக ஏராளமான பொதுமக்கள் வருகிறார்கள். ஒவ்வொரு செவ்வாய் மாலை வேளைகளிலும் ஆட்டுக்கடா வாகனத்தில் அங்காரகன் புறப்பட்டு உட்பிரகார அளவில் வீதி உலா வருவார்.

கிழக்குக் கோபுர வாசலைக் கடந்ததும் வலதுபக்கம் தேவஸ்தான அலுவலகமும் நூலகமும், இடதுபக்கம் ஸ்தல மரமான பெரிய வேப்ப மரமும் உள்ளன. வேப்பமர அடியில் ஆதி வைரவநாதர் சந்நிதியும் எதிரில் வீரபத்திரர் சந்நிதியும் காணப்படுகின்றன. வலது பக்கமுள்ள அலுவலகம் முன்பாக 6 அடி உயரம் வரை

---

தியானம் செய்வதால் மனம் உறுதியடைகிறது.

வளர்ந்துள்ள **"புற்று மண் குண்டம்"** காணப்படுகிறது. (உண்மையில் இது வளர்ந்துள்ள ஒரு கறையான் புற்றின் அமைப்பை ஒத்ததாக உள்ளது) இதனை மிகப் பக்குவமாகப் பாதுகாக்கிறார்கள். பூசை நடைபெற்றதற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன. இந்த ஆலயத்தில் தரப்படுகின்ற **"சந்தன குழம்புருண்டை"** (மருந்துப் பொட்டலம்) உட்கொண்டு ஸ்தலத் தீர்த்தமான சித்தாமிர்த தீர்த்தத்தைப் பருகி வந்தால் வியாதிகள் நீங்குவதாக இன்றும் அங்குள்ள மக்கள் மிகுந்த நம்பிக்கையோடு உள்ளனர். இந்த மருந்துப் பொட்டலத் தயாரிப்பில் மேற்குறித்த "புற்றுமண்" முக்கியமாகச் சேர்க்கப்படுகிறது.

இதற்குப் பின் பக்கமுள்ள சுவரில் இராமாயணக் கதையின் முக்கிய கட்டமான சீதையை இராவணன் கவர்ந்து செல்வது - சடாயு எதிர்கொண்டு போரிடுவது - இராவணன் சடாயுவின் இறக்கைகளை வெட்டி வீழ்த்துவது போன்ற சடாயு சம்பந்தப்பட்ட காட்சிகள் அழகிய வர்ணத்தில் வரையப்பட்டுள்ளன. இதைவிட, நீண்ட தூரம் சென்று பூக்கொண்டுவந்து சடாயு வைத்தியநாதரை வழிபட்டதாகவும் சித்தாமிர்தத் தீர்த்தக் குளத்தில் சடாயு தினமும் நீராடியமையால் அது "சடாயு தீர்த்தம்" எனும் இன்னொரு பெயருடன் அழைக்கப்படுவதாகவும் சடாயு சம்பந்தமான சம்பவங்கள் பற்றி ஸ்தல வரலாற்று நூல் விரித்துக் கூறுகிறது. ஆகம விதிப்படி ஆறுகாலப் பூசைகள் நடைபெறும் இத்திருக் கோயில் வைத்திய நாதருக்கு சித்திரையிலும் அம்பாளுக்கு ஆடியிலும் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. சூரனின் மார்பைப் பிளக்க முருகன் வேல் வாங்கிய வரலாறும் இத் தலத்திற்குண்டு.

திருஞானசம்பந்தர் வைத்தியநாதரை வணங்கிப் பாடிய "கள்ளார்ந்த பூங் கொன்றை...." என்னும் பதிகத்தில் "சம்பாதி சடாயு" என்ற இருவர் பெயர்கள் வருவதை நாம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். அப்பர் வைத்தீஸ்வரன் கோயிலை நேரில் வந்து தரிசித்ததாக பெரிய புராணத்திலோ, ஸ்தல வரலாற்றிலோ எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. ஆனால், அப்பர் வைத்திய நாதரைப் பாடிய இரு பதிகங்கள் வைப்புத் தலப் பாடல்களாகக் காணப்படுகின்றன. (நேரடியாக அந்தக் கோயிலுக்குச் செல்லாமல் இன்னொரு இடத்திலோ கோயிலிலோ நின்றபடி பாடப்படும் பதிகம் "வைப்புத் தலப் பாடல்" எனப்படுகிறது) ஐந்தாம் திருமுறையில் உள்ள "வெள்ளெருக்கரவம்...." என்னும் பதிகம் திருக்குறுந் தொகையிலும், ஆறாம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ள "ஆண்டானை அடியேனை....." என்னும் பதிகம் திருத்தாண்டகத்திலும் இடம்பெற்றுள்ளன.

இத் தலத்தைப் பற்றி அருணகிரிநாதர் 14 திருப்புகழில் சிறப்பிக்கின்றார். அவற்றுள் "உரத்துணைபோத" என்று தொடங்கும் திருப்புகழ் "வைத்தியநாதப் பெருமாளே" என்று முடிகிறது. "பாடகச் சிலம்பொடு" என்று தொடங்கும் திருப்புகழில் "தையல்நாயகி நன் பாதர்" என்று அம்பிகை பற்றிப் பேசுகிறார். ஏனைய பன்னிரண்டிலும் "வேளூர்" என்ற தலப் பெயர் வருகிறது. விகடகவியான "காளமேகப் புலவர்" தனது பல பாடல்களில் வைத்தியநாதரை நையாண்டி பாணியில் (உயர் பக்தி நிலையில்) பாடியுள்ளார். ---

சிங்கத்தைப்போல் வீரனாயிரு. புலியைப்போல் மூர்க்கனாகிவிடாதே.

ஒரு பாடலைப் பாருங்கள்.

வாதக்கா லாந்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
பேதப் பெருவயிறாம் பிள்ளைதனைக் - கோதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரர்
எந்தவினை தீர்ப்பார் இவர்?

வேளூரரான சிவபெருமானுக்கு வாதக்கால். (நடராஜர் ஒரே காலில் நிற்பதனால்) அவர் மைத்துனருக்கு நீரிழிவு (திருமால் திருப்பாற்கடலில் துயில் கொள்வதனால்) அவர் பிள்ளைக்குப் பெருவயிறு, (கணபதியின் பெரிய தொந்தி) "இப்படி இவரது உறவினர்களுக்கு வந்த நோயையே தீர்க்கமுடியவில்லை. இவர் எப்படி மற்றவரின் நோய்க்கு மருந்து தரப் போகிறார்" என்கிறார் காளமேகம்.

வடுகநாதர் பாடிய "வேளூர் தலபுராணம்" சிவஞான தேசிகர் பாடிய "ஸ்ரீ முத்துக்குமாரசாமி திருவருட்பா" இராமலிங்க சுவாமிகள் பாடிய "வைத்தியநாதர் பதிகம்", படிக் காசுப் புலவர் பாடிய "புள்ளிருக்கு வேளூர் கலம்பகம்" என்பனவும் பிறவும் வைத்தியேசர் புகழ் பாடுபவையாகும்.

வினைகள் தீர்க்கும் வைத்தியநாதர், அம்பிகை தையல்நாயகி, ஸ்ரீமுத்துக்குமார சாமி, அங்காரகன் ஆகியோரை கைதொழுது வணங்கிய நிரம்பிய மனத்தோடு வெளியே வருகிறோம்.

"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தான் வழிபட்டான் "புள்ளிருக்கு வேளூரே"

- சம்பந்தர் -

பி.கு: 01 மேற்கு வீதிக்குச் செங்குத்தாகச் செல்கின்ற பாதையில் சரியாக 3 கி.மீ. தூரத்தில் "திருப்புன்கூர்" வருகிறது. மிகப்பெரிய நந்தி நந்தனாருக்காக விலகியுள்ள அதிசயத்தையும் ஒருமுறை பார்த்து வரலாமே!

02. நாடி ஜோதிடம்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் கோயிலின் மேற்கு வீதியில் பல்வேறு இடங்களில் பிரபலமான நாடி ஜோதிட நிலையங்கள் உண்டு. கொஞ்சம் அசந்தால் யாராவது ஒருவர் நம்மைப் பிடித்துக்கொண்டு போய் ஒரு நாடி ஜோதிடர் முன்பு நிறுத்திவிடுவார். அத்தனை ஏஜன்டுகள் அங்கே உலாவுகிறார்கள். அந்த விடயத்தில் நாமும் தடக்கி விழுந்தது அதிர்ஸ்டமா? துர்அதிர்ஸ்டமா? தெரியவில்லை. ஆனால், பிறந்த தேதி - மாதம் - வருடத்துடன் கைப்பெருவிரல் அடையாளத்தை மட்டுமே பெற்றுக் கொண்டு எமது குடும்ப வரலாறு முழுவதையுமே (அ முதல் ∴ வரை) ஏட்டில் வாசித்துச் சொல்கிறார்கள். அத்தனை துல்லியமாக... எப்படி?... ஆச்சரியமாக இருக்கிறது. நம்பி ஏற்றுக்கொள்வதா? நம்பாமல் புறக் கணிப்பதா? எதற்கும் நீங்களும் சற்று கவனம் எடுப்பது நல்லது.

---

சட்டைப் பையிலுள்ள ஒரு பூந்தோட்டத்தைப் போன்றது புத்தகம்.

ஞானச்சுடர் 2010 ஆடி மலர்

உ

# ஆவணி மாத வாராந்த நிகழ்வுகள்

06.08.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "அருளுரை"

வழங்குபவர் :- நல்லை ஆதீன முதல்வர்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

13.08.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

உற்சவகால விசேட நிகழ்வு

20.08.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

27.08.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 152 ஆவது மாத வெளியீடு

## ஆவணி 2010

வெளியீட்டுரை :- இரா. ஸ்ரீ நடராசா (ஆசிரியர்) அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு. க. நடேசு (தெணியான்) அவர்கள்

இலண்டன் நாத வித்தியாலய மாணவர்களாகிய

செல்வி - சகானா சாந்தகுணம் - வயலின்

செல்வன் - சேயோன் சாந்தகுணம் - மிருதங்கம் ஆகியோரின்

"வாத்திய இசை விருந்து"

பதிவு இல. Q.D/46/NEWS/2010

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

